# கண்ணன்

குழந்தைகளின் பத்திரிகை



# செய்திகள்

## ஆவடி டிரான்ஸ்மீட்டர்

சென்னை ரேடியோ நிலையத்திலிருந்து ஒலிபரப்பப்படும் நிகழ்ச்சிகள் இனிச் சாதாரணமான ரேடியோப் பெட்டிகளில்கூட தென்னிந்தியா எங்கும் நன்ருகக் கேட்கும். ஒலிபரப்பும் சக்தி அதிகம் கொண்ட நடுத்தர அலை டிரான்ஸ்மீட்டரை ஆவடியில் இதற்காக அமைத்திருக்கிருர்கள். தற்போதுள்ள ஒலிபரப்பும் சக்தி இந்தக் கருவியினுல் 10 மடங்கு அதிகரிக்கும். ஆவடி டிரான்ஸ்மீட்டர் நிலையமும் சென்னை வானெலி நிலையமும் பூமிக்கு அடியில் புதைக்கப்பட்டுள்ள மின்சாரக் கம்பிகள் மூலம் இணைக்கப்பட்டுள்ளன. அந்தப் புதிய நிலையத்துக்கு அருகிலேயே ஓர் 'அவசர கால' ஸ்டுடியோவையும் கட்டியிருக்கிருர்கள். சென்னை நிலையத்தில் கோளாறு ஏதாவது ஏற்பட்டால் அங்கே நிகழ்ச்சிகளை நடத்தலாம். இந்தப் புதிய டிரான்ஸ்மிட்டரை அமைக்க எட்டரை லட்சம் ரூபாய் செலவாகியிருக்கிறதாம். வானளாவி நிற்கும் 400 அடி உயரமுள்ள கம்பம் ஒன்று மட்டும் எண்பதினுயிரம் ரூபாய் ஆகிறதாம். இது ஜனவரி 11-ஆம் தேதி முதல் வேலை செய்கிறது.

## பறக்கும் சைக்கிள்

அமெரிக்க ராணுவ இலாகாவில் 'பறக்கும் சைக்கிள்' என்ற ஒரு புது விதமான யந்திரத்தைத் தயாரித்திருக்கிருர்கள். இந்தச் சைக்கிளை இருபதே நிமிஷத்தில் ஓட்டக் கற்றுக்கொண்டு விடலாமாம். கால் பிடி போன்ற இடத்தில் நின்றுகொண்டு, கைப்பிடியையும் பிடித்துக்கொண்டு வெகு சுலபமாக இதில் பறந்து செல்லலாமாம். இந்தச் சைக்கிள் 300 ராத்தல் எடையை மணிக்கு 65 மைல் வேகத்தில் தூக்கிச் செல்லக் கூடியதாம. ஒரே சமயத்தில் 150 மைல் தூரம் இது பறக்கும்.

## சமாதியிலிருந்தபடி பிரசங்கம்

கோயமுத்தூரில் காற்றும் புகமுடியாத ஒரு பள்ளத்தில் ஒரு சாமியார் உட்காரவைக்கப்பட்டார். ஓர் ஒலி பெருக்கிக் கருவியும் அதனுடன் இணைக்கப்பட்ட மின்சார விளக்கும் அந்தச் சமாதிக்குள் வைக்கப்பட்டன. மான்தோல் தரித்து, பத்மாசனம் போட்டு அமர்ந்திருக்கும் அந்த யோகி சமாதிக்குள்ளிருந்தபடியே வெளியிலுள்ள ஏராளமான பக்தர்களுக்குச் சமயச் சொற்பொழிவு செய்து வந்தார். பவானியைச் சேர்ந்த இந்த யோகியாரின் பெயர் அருணுசல அடிகள். நாற்பத்தைந்து வயது ஆனவர். நேபாளத்திலுள்ள பசுபதி நாதர் கோயிலின் எதிரிரே ஏழு தினங்கள் சமாதியில் இருந்தாராம். அதற்கு நேபாள சர்க்கார் நற்சாட்சிப் பத்திரம் வழங்கி யிருக்கிருர்கள். டிசம்பர் மாதம் 28-ஆம் தேதி கோவையில் சமாதியில் அமர்ந்த இவர் 14 நாட்கள் முடிந்த பின்னர் சமாதியிலிருந்து வெளிவந்துள்ளார்.

## புயல் பகுதி மாணவர்க்குச் சம்பளச் சலுகை

தஞ்சை, மதுரை, ராமநாதபுரம் ஜில்லாக்களில் புயலால் பாதிக்கப்பட்ட குடும்பங்களைச் சேர்ந்த மாணவர்களுக்குப் பள்ளிக்கூடச் சம்பளமும் எஸ். எஸ். எல். ஸி. பரீட்சைக் கட்டணமும் சர்க்காரே தர முடிவு செய்துள்ளனர். 1955 டிசம்பர் முதல் 1956 ஏப்ரல் முடிய ஐந்து மாதச் சம்பளத்தைச் சர்க்கார் கொடுத்து உதவுவார்கள். இதற்கு டிப்டி தாசில்தார் அந்தஸ்துக்குக் குறையாத ரெவின்யூ அதிகாரியிடமிருந்து சர்ட்டிபிகேட் பெறவேண்டும்.

கண்ணன்



## பொருளடக்கம்

மலர்: 7 இதழ்: 2

15 - 1 - '56

| | | |
|---|---|---|
| குழந்தைகளே! | பக்கம் | 2 |
| ஔவைப் பாட்டி | .. | 3 |
| ஸி. ஐ. டி. சிங்காரம் | .. | 5 |
| எந்த நாள்? | .. | 10 |
| சபாஷ், இந்தியா! | .. | 11 |
| மலர் | .. | 13 |
| இளம் எழுத்தாளன் | .. | 18 |
| பொங்கல் திருட்டு | .. | 20 |
| பளிங்குமலைப் பூதம் | .. | 25 |
| மஞ்சள் பங்களா | .. | 29 |
| தமிழ்க்கொடி | .. | 34 |
| தைப் பெண்ணே | .. | 39 |
| நிருபர் பகுதி | .. | 40 |

செய்திகள் - 2 - அட்டை:
கிளேக் கழகம் -3 - அட்டை
அட்டைப் படம்-
என். ராமகிருஷ்ணு.

வருஷ சந்தா (தீபாவளி மலர் உள்பட) ரூ. 4/-

கலைமகள், கண்ணன், மஞ்சரி மூன்றும் சேர்ந்த குடும்பச் சந்தா (மலர்கள் உள்பட) ரூ. 14/4

கதைகளில் வரும் பெயர்கள் யாவும் கற்பனைப் பெயர்களே.

## அருமையான சம்பவம்

சித்திரை மாதம். நிலவு பகல் போலக் காய்ந்துகொண் டிருந்தது. நாங்கள் சும்மா உட்கார்ந்திருக்கப் பிடிக்காமல் வண்டிக்காரக் கிழவன் நடேசனைத் தூண்டினேம். நடந்த கதை ஒன்று சொன்னன் அவன்.

"நீங்கள் ஒருத்தரும் அப் பொழுது பிறக்கவே இல்லை. இந்த ஊரில் சீனிவாசையர் என்று ஒருத்தர் இருந்தார். ரொம்ப நல்ல மனிதர். அவருக்கு ஜானகி என்று ஒரு பெண். அவள் கல்யாண மாகி, பிறந்தகத்திற்கு முதல் தடவை வந்திருந்தாள். திரும்பி ஊருக்குப் போக வேண்டிய நாளும் வந்துவிட்டது. அருகில் சேரங் குளந்தான் அதுக்குப் புக்ககம்! நான்தான் கொண்டுபோய் விடுவ தாக இருந்தேன். ஐயரும் வந் தார்.

"இதேமாதிரி ஒரு பௌர்ணமி யன்று இரவு வண்டியில் கிளம்பி, நானும் ஐயரும் துணைக்குப் போக ஜானகி புக்ககம் கிளம்பினள். வழிநெடுகப் பேசிக்கொண்டே போனேம். பாதி வழி தாண்டி விட்டோம். அப்புறம் ஒரு மைல் தூரத்துக்கு அடர்ந்த சாலை. திடீரென்று ஒரு நாலு பேர் தோன்றி மூக்கணையைப் பிடித்துக் கொண்டு வழியை மறித்துவிட் டார்கள். ஜானகி அப்படியே நடுங்கிப் போய்விட்டாள். நான் மட்டும் 'நீங்கள் எல்லோரும் யாருடா?' என்று கேட்டேன். யாரோ ஒருத்தன், 'யாரா இருந் தால் உனக்கென்ன? இருக்கிற நகை யெல்லாம் கழட்டிக் கீழே வை' என்ருன். எனக்கு ரொம்பக் கோபம் வந்துவிட்டது. உடனே கையிலிருந்த தார்க்குச்சியால் ஒரு குத்துக் குத்தி, சாட்டையால் ஒரு அடி வைத்தேன் பாரு, என்ன ஓட்டம், என்ன ஓட்டம்! அடேயப்பா!"

நடேசன் கதையை முடித்தான்.

"ஏன் நடேசா, அவங்க உன்னைத் திருப்பி அடிக்கல்லியா?"

"ஐயேய்ய, நான் அவங்களையா அடிச்சேன்? மாட்டையில்ல அடிச் சேன்!" என்ருன்.

—எஸ். வரதராஜன், பல்லாவரம்.

# குழந்தைகளே!

கண்ணன் அபிமானிகளாகிய உங்கள் அனைவருக்கும் களிப்புமிக்க பொங்கல் வாழ்த்துக்களைக் கூறுகிறேன். உங்கள் இல்லங்கள் எல்லாம் பாலும் நெல்லுமாக நிறைந்து, கரும்பினும் சுவையுடையதாக விளங்கட்டும்!

தென் பகுதி ஜில்லாக்கள் சிலவற்றில் கொடும் புயலால் மிகுந்த சேதம் ஏற்பட்டு, மக்கள் பலவகையிலும் அவதிக்குள்ளாகிவிட்டனர். வீடு வாசல்களை இழந்த குழந்தைகள் எத்தனையோ பேர். உடைமைகளையும் உறவினர்களையும் இழந்த குழந்தைகள் எத்தனையோ பேர். நாட்டின் பல பாகங்களிலிருந்தும் பலர் உடனே தங்களால் ஆனதைக் கொடுத்து உதவ முன்வந்தார்கள். சர்க்கார் தன் முழுச் சக்தியையும் செலுத்தி உதவ முன்வந்தது. அவர்களுடைய அல்லல்கள் எல்லாம் முற்றும் விலகி, மீண்டும் நல் வாழ்வு தழைத்துச் செழிக்க வேண்டும் என்று இந்தப் பொங்கல் நன்னாளில் இறைவனை வேண்டிக்கொள்கிறேன்.

நமக்கெல்லாம் விடாமுயற்சியும் தன்னம்பிக்கையும் தைரியமும் ஓங்கி வளரவேண்டும். வாழ்வு கசந்தாலும் அதைக் கரும்பைப்போல் இனிக்கும்படி செய்ய அவை நமக்கு உதவும். உங்கள் மகிழ்ச்சியையும் நம்பிக்கையையும் பெருக்கக் கண்ணன் தன்னால் ஆனதையெல்லாம் செய்து வருவான்.

புதிய தொடர்கதைகளும் புதிய அம்சங்களும் வருஷத் துவக்கத்தில் ஆரம்பமாகியுள்ளன. சென்ற இதழில் வெளியான முதல் பரிசு பெற்ற புதிய தொடர்கதை உங்கள் பாராட்டை ஆரம்பத்திலேயே பெற்றுவிட்டது. இந்தப் பொங்கல் இதழில் இரண்டாவது பரிசுபெற்ற தொடர் கதையும் ஆரம்பமாகிறது. இந்த இரண்டு கதைகளும் மேலும் மேலும் சுவையையும் சுவாரஸ்யத்தையும் பெருக்கும் என்று நம்புகிறேன். 'கவிஞர் வரிசை' என்ற பகுதியில் முதலில் ஔவைப் பாட்டி காட்சியளிக்கிறாள். அடுத்தடுத்து மற்றவர்களும் வந்து, மகிழ்ச்சி தருவார்கள். இன்னும் இந்த ஆண்டில் பல மாறுதல்களையும் புதுமைகளையும் ஒவ்வொன்றாகச் செய்ய எண்ணியிருக்கிறேன்.


அவைகளுடன் பலர் வேண்டுகோளுக்கு இணங்க, பழைய பகுதி ஒன்றையும் மீண்டும் ஆரம்பிக்கப் போகிறேன். சித்திரத் தொடர்கதையைத்தான் சொல்லுகிறேன். எதை நிறுத்தினாலும் அந்தப் பகுதியை நிறுத்தக் கூடாது என்று எல்லாரும் சரமாரியாக எழுதத் தொடங்கிவிட்டார்கள். இவ்வளவு பேர் விரும்புகிற இந்தச் சித்திரத் தொடர்கதைப் பகுதியை இன்னும் இரண்டு இதழ்களில் தொடங்க ஏற்பாடு செய்கிறேன்.

அடுத்த இதழிலிருந்து ரேடியோ விமரிசனக் கடிதங்கள் பிரசுரம் ஆகவிருக்கின்றன. இதுவரை விமரிசனங்கள் அதிகமாக வரவில்லை. பெரும்பாலோர் நிகழ்ச்சிகளைக் கேட்பதில்லையோ என்றுகூட எனக்குச் சந்தேகமாக இருக்கிறது. இந்தப் பகுதி இந்த நிகழ்ச்சிகளை மேலும் பலர் கேட்கத் தூண்டும் என்று நம்புகிறேன். சனிக்கிழமைதோறும் நடைபெறும் சிறுவர் நிகழ்ச்சிகளையும் ஞாயிறுதோறும் நடைபெறும் பாப்பா மலர் நிகழ்ச்சிகளையும் பற்றித்தான் எழுதவேண்டும். அடுத்த இதழில் ஜனவரி மாதம் நடந்த நிகழ்ச்சிகளைப் பற்றிய விமரிசனங்கள் வர வேண்டும். நிகழ்ச்சிகளைக் கேட்டவுடனே குறிப்பெடுத்து வைத்துக் கொண்டால்தான் உங்களுக்கு விமரிசனம் எழுத வசதியாக இருக்கும். அந்த நிகழ்ச்சிகளைக் கேளுங்கள். கேட்டுவிட்டு, பாரபட்சமற்ற முறையில் விமரிசனம் எழுதுங்கள். கண்ணனில் இது அரைப் பக்கத்துக்குமேல் போகாமல் பார்த்துக்கொள்ளுங்கள்.

இதேபோல 'எனக்குப் பிடித்த புத்தகங்கள், என்ற தலைப்பில் புதிய சிறுவர் வெளியீடுகளைப் பற்றியும் எழுதலாம். இத்தகைய விமரிசனங்கள் நல்ல புத்தகங்கள் வெளிவர உதவியாக இருக்கும்.

—ஆசிரியர்.

கவிஞர் வரிசை:



# ஔவைப் பாட்டி

கி. வா. ஜகந்நாதன்

ஔவைப்பாட்டி என்று சொன்னாலே ஒரு கிழ உருவம் உங்கள் மனக் கண்முன் தோன்றும். தமிழிலே அந்தப் பாட்டி பாடிய பாட்டுக்கள் பல உண்டு. நீங்கள் பள்ளிக்கூடத்தில் வாசிக்கிற ஆத்திச்சூடி, கொன்றை வேந்தன், நல்வழி— இவையெல்லாம் அந்தப் பாட்டி பாடியவைகளே. ஆனால் அந்தப் பாட்டிக்கு முன்பே மற்றோர் ஔவை இருந்தாள். அவளும் புலமை நிரம்பியவள்தான். இரண்டாயிரம் வருஷங்களுக்கு முன் இருந்தவள். மகா கெட்டிக்காரி. பெரிய பெரிய ராஜாக்களெல்லாம் ஔவையிடம் மதிப்பு வைத்திருந்தார்கள்.

அதிகமான் என்ற ராஜா ஒருவன் இருந்தான். அவன் தகடூர் என்ற ஊரில் இருந்து அரசாண்டு வந்தான். புலவர்கள் என்றால் அவர்களிடம் மிகவும் பணிவுடன் நடந்து கொள்வான்; அவர்கள் பாட்டைக் கேட்டுக் களிப்பு அடைவான்; பரிசுகள் கொடுப்பான்.

ஒரு நாள் ஔவை அதிகமானிடம் வந்தாள். அப்போது அதிகமான் ஒரு நெல்லிக்கனியைக் கையில் வைத்துக்கொண்டிருந்தான். அந்தக் கனியைத் தின்றால் உடம்புக்கு அதிக பலம் உண்டாகி விடும். வியாதி ஒன்றும் வராது. பல ஆண்டுகள் வாழலாம். மிகவும் அருமையாகச் சம்பாதித்தது

அது. அது அதிகமான் கைக்கு எட்டியது. ஆனால் ஔவை வந்தவுடன் அவன் அதை ஔவையிடம் கொடுத்தான். அவளுக்கு அதன் பெருமை தெரியாது. ஆதலால் அதை உடனே வாயில் போட்டுத் தின்றுவிட்டாள்.

பிறகு அங்கிருந்தவர்களின்மூலம் அதன் அருமையையும் பெருமையையும் உணர்ந்தாள். "அடடா! இந்த விஷயம் முன்பே தெரிந்திருந்தால் நான் வாங்கிக்கொண்டிருக்க மாட்டேனே! அரசன் வாழ்ந்தால் எல்லோருக்கும் நல்லது. நான் வாழ்ந்து என்ன செய்யப் போகிறேன்!" என்று வருந்தினாள்.

அதிகமானோ, "நான் ஒரு நாட்டு அரசன். நீங்களோ தமிழ் நாடு முழுவதும் செல்வாக்கு உள்ளவர்கள். நீங்கள் எவ்வளவு காலம் வாழ்கிறீர்களோ, அவ்வளவு காலம் உங்களுடைய கவியினால் தமிழ் மக்களுக்கு நன்மை உண்டாகும்" என்று சொன்னான்.

"இந்த உபகாரத்தைச் செய்த நீ நஞ்சை உண்டும் இறவாமல் வாழும் சிவபெருமானைப்போல நீடு வாழ்வாயாக!" என்று வாழ்த்தினாள் ஔவை. அதுமுதல் அதிகமானிடம் ஔவை மிக்க மதிப்புடையவளாக இருந்தாள். அவனைப் பாராட்டிப் பல பாடல்கள் பாடினாள்.

காஞ்சிபுரத்தில் ஒரு தொண்டைமான் வாழ்ந்திருந்தான். அவனைப் போய்ப் பார்த்து வரும்படியாக அதிகமான் சொன்னான். அப்படியே ஔவை தொண்டைமானிடம் சென்றாள். அந்தப் புலமை மிக்க பெண்மணியைக் கண்டு தொண்டைமான் வரவேற்று உபசரித்தான். தன் அரண்மனையெல்லாம் கொண்டு போய்க் காட்டினான். படைகள் வைத்திருக்கின்ற ஆயுதசாலையையும் காட்டினான். அதைப் பார்க்கிறபோது ஔவைக்கு அதிகமானுடைய வீரம் நினைவுக்கு வந்தது.


தொண்டைமான் பலவகை உபசாரம் செய்துவிட்டு, "தங்கள் வாக்கால் ஏதாவது சொல்ல வேண்டும்" என்றான். தொண்டைமானுடைய பெருமையை அதற்குமுன் ஔவை கேட்டதில்லை. போரில் வெற்றிபெற்றிருந்தாலும் அவனைப் பற்றித் தெரிந்திருக்கும். அப்படி எந்தப் போரிலும் அவன் கலந்து கொண்டதாகவும் தெரியவில்லை.

தொண்டைமானோ கவிபாடும்படி கேட்டுவிட்டான். அதிகமான் சொன்னதனால்தான் அவள் அங்கே வந்தாள். அந்த மரியாதையைக் காப்பாற்றிக் கொள்ளவேண்டும் அல்லவா? ஆதலால் ஒரு பாட்டுப் பாடிவிடலாம் என்று நினைத்தாள். பாட்டும் பாடி விட்டாள். பாட்டு அந்தத் தொண்டைமானைப் பாராட்டியதாக இருக்கவில்லை; அதிகமானைப் பாராட்டின பாட்டாக இருந்தது. அதில் என்ன சொல்லியிருந்தாள், தெரியுமா?

"அடடா! இந்த ஆயுதங்கள் எவ்வளவு அழகாகப் பளபளப்பாக இருக்கின்றன! மயிற் பீலியையெல்லாம் சூட்டியிருக்கிறார்கள். காம்புகளெல்லாம் பண்ணின காலத்தில் இருந்த மாதிரியே இருக்கின்றன. கொஞ்சமாவது மூளியாக வேண்டுமே! இவ்வளவு பாதுகாப்பான இடத்தில் இவற்றை வைத்து நீ பத்திரமாக வைத்திருக்கிறாய். அதிகமான் ஆயுதக் கொட்டிலில் ஒன்றுகூட இல்லை. எல்லாம் கொல்லன் பட்டடையில் கிடக்கின்றன. ஒன்றாவது உருப்படியாக இருக்க வேண்டுமே! அவன் வேல் பகைவர்களைக் குத்தி, நுனி சிதைந்துபோய், உடைந்து கிடக்கின்றது" என்று பாடினாள். தொண்டைமானுக்கு உண்டான சந்தோஷத்துக்கு அளவே இல்லை. 'அதிகமானைத் தாழ்த்தி நம்மை உயர்த்திப் பாடியிருக்கிறாள்!' என்று அவனுக்கு ஆனந்தம்.

ஆனால் ஔவை சொன்னதில் யாருடைய புகழ் வெளியாகிறது என்பது உங்களுக்குத் தெரிகிறது அல்லவா?

பரிசு பெற்ற புதிய தொடர்கதை:



மணா. அரங்கசாமி

# ஸி.ஐ.டி சிங்காரம்

## 1

மறையூர் உயர்நிலைப் பள்ளியின் வெளி வராந்தாச் சுவரில் சாய்ந்தவாறே சுவாரசியமாக வெற்றிலைப் பாக்கை மென்றுகொண்டிருந்தான் பியூன் வேலையா. பகலெல்லாம் தன் நெருப்புப் பிழம்பைக் கக்கித் தரையைச் சூடாக்கிய ஆதவனின் சக்தி மெல்ல மெல்லக் குறைந்துகொண்டு வந்தது. கோடைக்காலத்து அனல் காற்று சுடச்சுட வீசிக்கொண்டிருந்தது. புழுக்கம் தாங்காமல் 'உஸ்..அப்பாடா!' என்று ஒரு முறை பெருமூச்சு விட்டு விட்டுத் தலையில் கட்டி இருந்த முண்டாசை அவிழ்த்து முகத்தில் முத்து முத்தாக அரும்பி இருந்த வியர்வையைத் துடைத்துக்கொண்டான். அவன் தலைக்கு மேலே மாட்டப்பட்டிருந்த சுவர்க் கடிகாரம் 'டிக்-டிக்' கென்று சத்தமிட்டபடி தன் கடமையை ஒரே சீராகச் செய்துகொண்டிருந்தது!

மணி நாலரை என்பதற்கு அடையாளமாகக் கடிகாரம் ஒருமுறை 'டங்' கென்று அடித்து ஓய்ந்தது. அந்தச் சப்தத்தைக் கேட்ட வேலையா திடுக்கிட்டு மேல்துண்டை அவசர அவசரமாகத் தலையில் சுற்றிக்கொண்டு பள்ளிக்கூட முடிவு மணி அடிக்க விரைந்தான். வகுப்பு மாணவர்கள் பியூன் வேலையாவின் தலையைக் கண்டதுமே சந்தோஷமாகத் தங்கள் புத்தகங்களை ஒழுங்காக அடுக்கி வைத்துக் கொண்டார்கள்.

கம்பத்தில் மாட்டப்பட்டிருந்த இரும்புத் துண்டை எடுத்துக் 'கண கண' வென்று மணி அடித்தான் வேலையா. வகுப்பிலே அத்தனை நேரமும் அடைப்பட்டுக் கிடந்த மாணவர்கள் மடை திறந்த வெள்ளம்போல 'ஓ' வென்ற இரைச்சலுடன் ஒருவரை ஒருவர் தள்ளிக்கொண்டும், மூண்டியடித்துக்கொண்டும் வெளியே ஓடி வந்தார்கள். மாணவர்கள் வெளியே வந்ததும் கும்பல் கும்பலாகக்

கலந்து பிரிந்து வெவ்வேறு திசைகளில் செல்லலானார்கள்.

கடைசியாக வெளிவந்தவர்கள் அமுதன், நாகசாமி, சுந்தரம், சங்கரன் ஆகிய நால்வர்தான். அவர்கள் நால்வரும் நண்பர்கள். இரண்டு வாரங்கழித்து நடக்க இருக்கும் ஆண்டுத் தேர்வைப் பற்றியே அவர்கள் பேசிக்கொண்டு வந்தனர். சங்கரன் கணக்கிலே சற்று மந்தம். எனவே வகுப்பில் கடைசி மாணவனாக இருந்தான். அவன், "டேய், எனக்குக் கணக்குன்னா பயம்மா இருக்குதுடா!" என்று தன் பயத்தை மெல்ல வெளியிட்டான். கணக்கு அவனுக்குக் கசப்பான பாடம். போதிய மார்க்கு இல்லாமல் ஒரே வகுப்பில் இரண்டு வருடம் நிறுத்தி வைக்கப்பட்டவன்! அடுத்தவனான சுந்தரம், "டேய், எனக்கு இந்த ஆங்கிலம் அறவே பிடிக்கல்லேடா. சுத்த ஏ ஒன் யூஸ்லெஸ் லாங்குவேஜ்!" என்று கூறினான். இதைக் கேட்ட மற்ற மூவரும் 'கொல்'லென்று சிரித்துவிட்டனர். அமுதன், "அடடா, பரவாயில்லையேப்பா, இந்தமாதிரிப் பேச எனக்கு வராதப்பனே!" என்று கிண்டல் செய்தான். சுந்தரம் ஆறு மார்க்குக்குமேல் ஆங்கிலத்தில் வாங்குவதில்லை என்று சபதம் செய்து கொண்டவன்போல, வகுப்புப் பரீட்சைகளிலும் சரி; தேர்வுப் பரீட்சைகளிலும் சரி, எல்லாவற்றிலும் ஆறு மார்க்குக்குமேல் அதிகமாகவும் வாங்கமாட்டான், குறைவாகவும் வாங்கமாட்டான். அவன் எப்படிப் பாஸ் ஆவதற்கு வேண்டிய 35 மார்க்கு வாங்கப் போகிறான்?

ஆனால், மற்றவர்கள் தவறிவிட்டாலும் சுந்தரம் மட்டும் ஒவ்வொரு வகுப்பிலும் தவறாமல் பாஸ் செய்துகொண்டுதான் வந்தான. இது உங்களுக்கு ஆச்சரியமாகத் தோன்றும். ஆனால் அவன் நண்பர்களுக்கோ அல்லது எனக்கோ ஆச்சரியமே இல்லை! நீங்கள்கூட அப்படி நாம் பாஸ் செய்யமாட்டோமா என்று நினைப்பீர்கள். ஆனால் அவனைப்போல நீங்களும் இருக்கமுடியுமா? முடியாது! அவன் அப்பா பெரிய பணக்காரர் என்பது மட்டுமல்ல; சுந்தரம் படித்துவரும் பள்ளிக்கூடத்தின் சொந்தக்காரரும்கூட! இப்போது புரிந்ததா?

நாகசாமி சிரித்த முகத்துடன், "அடடே! நீங்க என்னவோ இப்படி ஒரு சப்ஜக்டிற்கே பயந்து சாகிறீர்களே, உண்மையிலே உங்கள் எல்லோரையும்விட அதிகப் பயம் எனக்குத்தான்!" என்று கூறி முடித்தவுடன் அங்கிருந்த எல்லோரும் வாய்விட்டுச் சிரித்தார்கள். ஏன், அவனுக்கு ஏதாவது பாடத்திலே போதிய அளவு மார்க்குக் கிடைக்காது என்றுதானே எண்ணுகிறீர்கள்! அதுதான் இல்லை! நீங்கள் அங்கேதான் தவறி விட்டீர்கள்! அவன் ஐந்து பாடங்களில் வாங்கிய மார்க்குகளை ஒன்றாகக் கூட்டினால்தான் மொத்தம் பாஸ் செய்ய வேண்டியதற்குத் தேவையான 35 மார்க்குகள் கிடைக்கும்!

அவன் எப்படிப் பரீட்சையில் பாஸ் செய்ய முடியும்? சிரித்துக் கொண்டிருந்தவர்களைப் பார்த்து அமுதன், "நீங்க சிரிச்சது போதும். சும்மா இருங்கள். தெருவில் உங்கள் வண்டவாளங்களை விளக்கத் தேவையில்லை! போகிறவர்கள் நம்மைப் பார்த்துச் சிரிப்பார்கள். தவற்றைப் பிறர் முன் மதிப்பாகச் சொல்வது தவறில்லையா?" என்று கூறி நிறுத்தினான். அவன் குரலில் கடுகடுப்புப் கோபமும் பின்னிக் கலந்து இழைந்திருந்ததை அனைவரும் உணர்ந்தனர்.

அமுதன் பேசியது மற்றவர்களுக்கு அதிர்ச்சியையும் அவமானத்தையும் கொடுத்தது என்பதை அவர்கள் முகத்தில் நெளிந்த சுருக்கங்கள் நன்றாகத் தெளிவு படுத்தின. அமுதன் மீது அர்த்தமில்லாத ஒரு பொறாமை அவர்களுடைய மனமாகிற மண்ணில் முட்செடியின் விதையை நட்டது! அமுதன் இப்படிப் பேசிக்கொண்டே வரும்போது அவன் வீடு நெருங்கி விட்டது. 'சரே'லென்று தன் வீட்டினுள் நுழைந்தான் அமுதன். மேற்கொண்டு எதுவும் பேச அவன் மனம் இடம்தரவில்லை.

ஆனால் அவனுடைய மௌனமே அவனுக்கு விரோதமாக மாறியது! தினமும் போய்வருகிறேன் என்று சொல்லிவிட்டு விடை பெற்றுக் கொண்டே செல்வான். ஆனால் அன்று....!

இந்தச் சம்பவம் எரிகிற நெருப்பிலே பெட்ரோலை ஊற்றியது போல் ஆயிற்று! தங்களை வேண்டுமென்றே அமுதன் அவமானப் படுத்துகிறான் என்று எல்லோரும் நினைத்தார்கள். இவ்வளவு நேரமும் எதுவும் பேசாமல் இருந்த அவர்களுடைய மௌனத்தைச் சங்கரன் கலைத்தான். "இவன் தவறாமல் பாஸ் செய்து வரவே கர்வம் தலைக்கேறி விட்டதடா. மேலும் கிளாசிலே....எதிலும் இவன்தான் முதல் என்கிற மமதை வேறு" என்று மற்றவர்களுக்குத் தூபம் போட்டான் சங்கரன். "இன்னிக்கி ஹெட்மாஸ்டர் தனியாகக் கூப்பிட்டுப் பேசினது, இவனுக்குப் பெருமையாகி விட்டது! ஆகவே நாம் அவனுக்குச் சட்டை இல்லை! இந்த வருடம் எப்படியாவது...." என்று இழுத்து நீட்டினான் நாகசாமி, பழைய தன் பகைமையை மனத்தில் வைத்துக்கொண்டு. 'நல்ல சமயமடா இதை நழுவ விடுவா போடா?' என்றது அவன் மனம். "இவனைப் பரீட்சைக்கு வரமுடியாதபடி செய்துவிடவேண்டும்! அவ்வளவுதானே?" என்று உறுமினான் அவன். அவன் குரலின் கரகரப்பைக் கேட்ட நண்பர்கள் இருவருமே திடுக்கிட்டனர். ஆனால் அவர்கள் அவன் சொன்னதை அப்படியே கடைப்பிடிக்க எண்ணினார்கள். கடைசிவரை நண்பர்களாகவே இருந்து, காலை வாரி விட்டுவிடத் தீர்மானித்துப் பிரிந்து சென்றனர்.

மாலைக் கதிரவன் அவர்களது முகத்தைக் கூடப் பார்க்க அஞ்சினவனாக மேலைக் கடலில் மூழ்கிச் சமுத்திரத்துடன் உறவு கொண்டாடச் சென்று விட்டான்!

## 2

சென்னைக்கு வெகு அருகாமையில் இருந்த ஒரு சிறிய ஊர் மறையூர். அது நகரத்திற்கு வெகு சமீபத்தில் இருந்த போதிலும் நகரத்தின் வாடை அங்கே வீசவில்லை; அவ்வூரை ஒட்டியபடிதான் ஆறு ஒன்று சென்றுகொண்டிருந்தது. ஆறு என்றாலும் அதில் வருஷம் முழுவதும் தண்ணீர் ஓடிப் பார்த்தவர்கள் யாருமே கிடையாது. ஆனால் வெள்ளம் வந்தாலோ கரை புரண்டு ஓடி, போக்கு வரத்தைக்கூடத் தடை செய்து விடும்.

ஊரைச் சுற்றி இருந்த வயல்காடுகளில் பச்சைப் பசேல் என்ற பயிர்கள் பார்ப்பவர்களின் கண்களையும் கருத்தையும் கவர்ந்து பேரின்பம் அளிப்பதாக இருந்தன. வயலை நெருங்கியபடி சாலை அமைந்திருந்தது! சாலையின் இருபுறத்திலும் அடர்ந்து வளர்ந்திருந்த மரங்கள் நிழலை அள்ளி வீசி, அவ்வழியாகச் செல்லும் பிரயாணிகளுக்கு உதவி செய்தன. நகரத்தின் வாடை வீசாததால் மறையூர் சுத்தமாகக் காண்போர் மனத்தைக் கவரும் வகையில் இருந்தது!

வயல் காட்டிலிருந்து ஊரை நோக்கினால் அடுக்கடுக்காக வரிசையாகக் கட்டப்பட்டிருந்த வீடுகளையும், நடு நடுவே கம்பீரமாக நின்றிருந்த ஒன்றிரண்டு மாடி வீடுகளையும் காண அழகாக இருக்கும். ஊரில் ஓர் உயர்நிலைப்பள்ளியும் ஓர் ஆரம்பப் பாடசாலையும் இருந்தன. உயர்நிலைப் பள்ளி சுந்தரத்தின் அப்பா ஐயாசாமியால் நடத்தப்படும் பள்ளிக்கூடம்! அந்த ஊரிலேயே சிறந்த செல்வாக்கும் பணமும் இருப்பவர் அவர் ஒருவர் தான்.

அவருக்குக் கீழ் அந்தஸ்துள்ளவர்கள் ஏழெட்டுப் பேர் இருந்தார்கள். சங்கரனின் அப்பாவும் நாகசாமியின் அப்பாவும் பணக்காரர்களின் பட்டியலில் சேராதவர்கள். ஆனாலும் அவர்களிடம் வேண்டிய அளவு பணம் இருந்தது. கஷ்டமில்லாமல் காலத்தை ஓட்டி வந்தார்கள். ஆனால் அமுதனின் அப்பா ஒரு பாங்கியில் குமாஸ்தா. வருவாய்க்கும் செலவுக்கும் தள்ளிக் கொண்டு போகவே கஷ்டப்படா

மல் இருந்தார்; அமுதன் அக்கறையாகத் தன் முழுக்கவனத்தையும் படிப்பில் செலுத்திப் படித்து வந்தான்.

மாலை மணி நாலரை அல்லது ஐந்திருக்கலாம். ஆற்று மணல் வெளியில் மூன்று மாணவர்கள் உட்கார்ந்துகொண்டு ஏதோ பேசிக்கொண் டிருந்தார்கள். அவர்கள் நாகசாமி, சங்கரன், சுந்தரம் ஆகிய மூவரும்தான்.

சங்கரன் பொதுமேடைப் பேச்சாளனைப் போலத் தொண்டையைக் கனைத்துக் கொண்டு, "நண்பர்களே, நாம் எதற்காக இங்கே சந்தித்திருக்கிறோம் என்பது உங்களிருவருக்கும் தெரியும். நம்மை அவமதித்து விட்டான் அமுதன். அற்பன் அமுதனை பதிலுக்குப் பதில் அவமானப் படுத்தவேண்டும். அதற்கு நாம் ஒரு திட்டத்தைத் தீட்ட வேண்டும். அவன் அந்தச் சூழ்ச்சியில் சிக்கித் திண்டாடவேண்டும். அதைப் பார்த்துக் கைகொட்டிச் சிரிக்க வேண்டும் நாம். அப்படிச் செய்தால்தான் நம் எண்ணம் ஈடேறியதாகும். உங்கள் திறமையை வெளியிட அருமையான ஒரு சந்தர்ப்பம். சிந்தியுங்கள்.. நன்றாக ஆர அமரச் சிந்தியுங்கள். முடிவில் ஒரு வழி புலப்படாமல் போகாது!" என்று ஆவேசக் குரலில் மூச்சுவிடாமல் முழக்கினான்.

நாகசாமி இடையில் குறுக்கிட்டு, "டேய், டேய்! மூச்சுத் திணறப் போகுது!" என்று கிண்டலுடன் கூறினான். சுந்தரம், "ஏய், சிரிக்கச் சிரிக்கப் பேச இதுவா சந்தர்ப்பம்?" என்று சீறிவிழுந்தான். பிறகு திடீரென்று, "ஒரு கால்பந்து போட்டி வைத்து.. அதில் எதிர்க் கட்சியில் அமுதனைப் போட்டு.. பந்தை அடிக்கிற சாக்கிலே காலைத் தட்டிவிட்டு, காலை உடைத்துவிட்டால்.. பரீட்சைக்கு வரவே முடியாது! எப்படி என் ஐடியா?" என்றான் சுந்தரம்.

சங்கரன் எதுவுமே பேசாமல் ஆகாயத்தை அண்ணாந்து பார்த்தபடி உட்கார்ந்திருந்தான். வெண் மேகங்கள் கூட்டம் கூட்டமாக வான வெளியில் திரிந்துகொண்டிருந்தன. காற்றில் ஒன்றோடு ஒன்று சேர்ந்து பல வேடிக்கையான காட்சிகளைச் செய்கிறதை நாம் அடிக்கடி பார்க்கிறோம்; சந்தோஷப்படுகிறோம். அதைப் போலவே அந்தச் சமயமும் பல உருவங்களைச் செய்து சங்கரனின் கவனத்தை வெகுவாகக் கவர்ந்திழுத்தன வெண் மேகங்கள்.



சட்டென்று காற்று வேகமாக அடித்தது. அதன் பலன், மேகக் கூட்டங்கள் சிதறி ஓடின! அப்போது..! மூன்று சிறு உருவங்களைப் போல மேகக் கூட்டம் உருவாகி இருந்தது! அந்தக் கூட்டத்தை விட்டுச் சிறிது தூரத்தில் ஒரு தலையைப் போல சிறு உருவம் தென்பட்டது! நடுவில் நீலநிறமான ஆகாயம் தெரிந்தது.

அது ஏறக்குறைய மூன்று சிறுவர்கள் கரையில் நிற்பது போலவும் ஒருவன் மட்டும் தண்ணீரில் நீந்துவது போலவும இருந்தது அதைக் கண்ட சங்கரனின் மனத்தில் மின்னலைப் போல ஒரு யோசனை தென்பட்டது. சங்கரன் உடனே துள்ளிக் குதித்தான். அவன் செய்கையைக் கண்ட மற்ற இருவருக்கும் ஒன்றுமே புரியவில்லை! திகைத்து விழித்தனர்.

"டேய் நாகசாமி, அருமையான ஒரு 'பிளான்' என் மூளையிலே உதயமாகி இருக்குடா!" என்று அவர்களைப் பக்கத்தில் உட்கார வைத்துக்கொண்டு தன் திட்டத்தைப்பற்றி விரிவாகச் சொல்ல ஆரம்பித்தான்.

"முதலில் நாம் அமுதனை நேரே கடற்கரைக்கு அழைத்துக்கொண்டு போகவேணும். இன்னிக்குப் பூரண நிலா. கடல் அலைகள் ஆள் உயரத்துக்கு எழும்பி விழும். அந்தக் காட்சியைக் காணவே கண்கொள்ளாது.." என்று வருணித்துக் கொண்டே போன அவனைத் தடுத்து நிறுத்தி, "டேய், இதெல்லாம் பத்தி இப்போ எதுக்குடா!" என்றனர் மற்ற இருவரும்.

"இல்லை..இல்லை! கேட்டுக் கொண்டே வாங்க. தானாகப் புரியும். சந்தடி இல்லாத இடமாகப் பார்த்து அவனை அழைத்துக் கொண்டு போகணும். நாம் அலையில் நிற்கிறது மாதிரி நிற்கணும். பெரிய அலை வரும்போது அலையில் பிடித்து அமுதனைப் பிடித்துத் தள்ளிவிட்டால்....? தொடர்ந்து வரும் பெரிய அலை அவனை அடித்துப் போய்விடும்!

"திரும்ப அவன் கரைக்கு வரும் போது ஏறக்குறைய அவனுக்கு அதற்குள் ஜுரமே வந்துவிடும்! பிறகு அவனை வீட்டிற்குக் கூட்டிக் கொண்டு போய் விட்டுவிட்டால் போகிறது! நிச்சயமாக அவனால் பரீட்சைக்கு வரவே முடியாது..!" என்று கூறி முடித்தான் சங்கரன்.

இருவரும் ஏககாலத்தில், "ஏ ஒன் ஐடியா!" என்று கைத்தட்டி ஆரவாரம் செய்து ஆமோதித்தனர். குடம் பாலில் துளிவிஷம் போலவும், தூய வெண்ணிற ஆடையில் ஒரு சிறு கறையைப் போலவும்; முழு வெண் மதியை மறைக்கும் சிறுமேகம் போலவும் அவர்களது இளம் உள்ளத்தில் மாசு தலையெடுத்து, தன் விதையையும் ஊன்றிவிட்டது!

இந்த ஆபத்தை அமுதன் அறிவானா! (தொடரும்)

---

**கவியரங்கம்:**

## வாழ்க பொங்கல்!

பொங்கல் பண்டிகை வந்தது
பொங்கும் இன்பம் தந்தது
எங்கும் சிறுவர் சிறுமியர்
தங்கக் கரும்பைச் சுவைப்பரே!
புத்தம் புதிய ஆடையும்
புசிக்க உணவுப் பண்டமும்
பொங்கல் அன்று கிடைத்திடும்
பொங்கல் வாழி வாழியவே!
காளைக் கன்று களிப்புடன்
காலை வேளை ஓடிடும்
அழகைக் கண்டு ரசித்திடும்
"அன்புப் பொங்கல்" வாழியவே!

பி. வி. கிரி, சென்னை.




# எந்த நாள்

'பூவண்ணன்'

திசையை மாற்றிச் சூரியன்
திரும்பி வந்த நாளெது?
பசியைப் போக்கும் உழவர்கள்
பலனைக் காணும் நாளெது?
கன்று, மாடு, பசுவெலாம்
களிப்புக் கொள்ளும் நாளெது?
குன்றி டாத மகிழ்வினைக்
கொடுக்கும் நல்ல நாளெது?
தங்கை, தம்பி, யாவரும்
தமக்குப் பிடித்த கரும்புடன்
பொங்கல் உண்டு மகிழ்வுடன்
புதிய ஆடை யணிந்திடும்,
இன்பம் நல்கும் நாளெது?
துன்பம் ஓட்டும் நாளெது?
'அன்பு வாழ்த்து'க் கூறிடும்
அருமை யான நாளெது?
எங்கும் அன்று இன்பமே
தங்கு மாறு செய்திடும்
'பொங்கல்' என்னும் நாளது!
உங்க ளுக்குத் தெரியுமோ?





பாரத் கிரிக்கெட் கோஷ்டி

# சபாஷ், இந்தியா


**எஸ். வாஸன் ரங்காச்சாரி**

கார்ப்பரேஷன் மைதானத்தில் ஒரே ஆரவாரம். தாரை, தம்பட்டங்கள் காது செவிடுபட முழுங்கின. இருபதினாயிரத்திற்கும் மேற்பட்ட ஜனக்கூட்டம் இரண்டு நிமிஷங்கள் வரை விடாமல் கைதட்டிக் கொண்டே இருந்தது. இந்தியாவுக்கும் நியூஜிலாந்துக்கும் இடையே சென்னை கார்ப்பரேஷன் ஸ்டேடியம் மைதானத்தில் நடைபெற்ற ஐந்தாவது கிரிக்கெட் டெஸ்ட் பந்தயத்தில் தான் இவ்வளவு அமர்க்களம்! இது வரையிலும் இங்கிலாந்தைச் சேர்ந்த ஹட்டன், வாஷ்புரூக் என்ற இரு ஆட்டக்காரர்கள், தென் ஆப்பிரிக்காவுக்கு எதிராக ஆடி, முதல் விக்கெட்டிற்கு 359 ஓட்டங்கள் எடுத்த பின்னர்தான் அவுட்டானார்கள். அதுதான் இன்றுவரை 'ரிகார்'டாக இருந்தது. இப்போது நம் பங்கஜ் ராயும், வினு மன்காடும் சேர்ந்து அதற்கும் மேலே ரன்கள் எடுத்து, புது ரிகார்டை ஏற்படுத்திவிட்டார்கள். பங்கஜ் ராய் 173 ஓட்டங்கள் எடுத்த பிறகு, அவுட்டாகி விட்டார். அப்போது இந்தியக் கோஷ்டி 413 ஓட்டங்கள் எடுத்திருந்தது!

பிறகு இந்தியக் கோஷ்டித் தலைவர் உம்ரிகர் வந்தார். மன்காட் மேலும் சளைக்காமல் ஆடி, இன்னொரு சாதனையையும் வெற்றிகரமாகச் செய்து முடித்த பின்னர் தான் அவுட்டானார். இதுவரை எந்த இந்திய ஆட்டக்காரருமே, 'டெஸ்ட்' பந்தயத்தில், ஒரே இன்னிங்ஸில், மன்காட் எடுத்திருந்த 231 ரன்கள் எடுத்ததில்லை. முதலில் மன்காட்தான் 184 ரன்கள் இங்கிலாந்துக் கெதிராக எடுத்து. ஒரு 'ரிகார்ட்' ஏற்படுத்தியிருந்தார். பிறகு, உம்ரிகர் 223 ரன்கள் எடுத்து அதை முறியடித்தார். மறுபடியும், மன்காட் அதே 223 ரன்கள் எடுத்து, உம்ரிகருடன் சேர்ந்து அந்த 'ரிகார்ட்' ஏற்படுத்தியிருந்தார். இந்த ஐந்தாவது டெஸ்ட் பந்தயத்தில், சந்



உலக ரிகார்டை ஸ்தாபித்த ராயும் மன்காடும்



நியூஜிலாந்து காப்டன கேவும் உதவி காப்டன் ஜான் ரீடும்

தேகத்துக்கிடமேயில்லாமல் 231 ரன்கள் எடுத்து, மறுபடியும் நிகரற்ற கிரிக்கெட் வீரராக விளங்குகிறார் மன்காட். நியூஜிலாந்துக் கோஷ்டியைச் சேர்ந்தவரும் உலகத்திலேயே மிகச் சிறந்த இடது கை ஆட்டக்காரர் என்று புகழப்படும் பெர்ட் ஸட்கிளிப் (Bert Sutcliffe) டெல்லி டெஸ்ட் பந்தயத்தில் 230 (நாட் அவுட்) ரன்கள் எடுத்து ஏற்படுத்தியிருந்த ரிகார்டையும், மன்காட் கவிழ்த்துவிட்டார். எந்த இந்திய ஆட்டக்காரரும், இதுவரை, ஒரு டெஸ்ட் பந்தய வரிசை ஆட்டங்களில் இரண்டு 'இரு சத' (Double Century) ரன்கள் எடுத்ததில்லை. வினு மன்காட்தான் பம்பாயிலும் சென்னையிலும் முறையே 223, 231 ரன்கள் எடுத்து அந்தச் சாதனையையும் செய்து முடித்திருக்கிறார். இந்தியக் கோஷ்டி மூன்று விக்கெட் நஷ்டத்திற்கு 537 ஓட்டங்கள் எடுத்துவிட்டு, தங்கள் ஆட்டத்தை நிறுத்திக் கொண்டது. நியூஜிலாந்து முதல் இன்னிங்ஸில் 209 ரன்களும் இரண்டாவது இன்னிங்ஸில் 219 ரன்களும் எடுத்து. தோற்றுவிட்டது. சுபாஷ் குப்தே (சபாஷ், குப்தே!)யும், வினு மன்காடும் போட்டி போட்டுக் கொண்டு, எதிர்க் கட்சி ஆட்டக்காரர்களைத் தங்கள் பந்து வீச்சின் திறமையால் திணற அடித்துவிட்டார்கள். மன்காடின் ஆட்டத்தைப் பார்க்க அவர் குமாரன் வந்திருந்தான். 39 வயதாகியும், சுமார் எட்டு மணி நேரத்திற்கும்மேல் சளைக்காமல் ஆடி, சாதனைக்குமேல் சாதனைகளை வெற்றிகரமாகக் குவித்துக் கொண்டேயிருந்த தன் தகப்பனார் வினு மன்காடை, அவர் அவுட்டாகி வந்ததும் அப்படியே போய்க் கட்டிக்கொண்டு முத்தம் கொடுத்தான். எந்தக் குழந்தைக்குத்தான் பெருமையாக இருக்காது! சபாஷ், இந்தியா! பலே, மன்காட்! அச்சா, ராய்!

# மலர்

**நாராயண்**

'மலர்' இன்னும் பூரணமாகப் பூக்கவில்லை. அதை ஆக்கியவர்களின் 'முன்னுரை' மின்னல் வேகத்தில் பொறிக்கப்பட்டுக் கொண்டிருந்தது. அது முடிந்தால் 'மலர்' பூத்துவிடுமா? அதுதான் இல்லை! எந்தெந்தப் பத்திரிகைகளிலிருந்தோ பொறுக்கியெடுக்கப்பட்ட கதைகள், கட்டுரைகள், விகடத்துணுக்குகள் ஆகியவற்றின் கதம்பமான அந்த 'மல'ருக்குக் கட்டாயம் ஒரு பெரிய மனிதரின் 'மதிப்புரை' தேவையாயிருந்தது. இவ்வுண்மையை 'மலரி'ன் சிருஷ்டிகர்த்தாக்களான சிவராமன், ரங்கன், கிட்டு, மூவரும் உணராமவில்லை. சிவராமனின் குண்டு குண்டான எழுத்துக்கள் 'முன்னுரை' பகுதிக்கென மூன்று பக்கங்களை விழுங்கிவிட்டன. அதற்கு மேல் விஷயம் அகப்படாமற் போகவே, முன்னுரை முடிவு பெற்றது. 'மலரி'ல் இப்பொழுது ஆறு பக்கங்கள் காலியாக விழுந்தன. எந்தப் புண்ணியவான் ஆறு பக்கம் 'மதிப்புரை' எழுதப் போகிறுன், அதுவும் அந்தக் கதம்ப மலருக்கு! மாணவர்களின் கையெழுத்துப் பத்திரிகையான அதன் முதல் இதழ் பட்ட பாடுதான் மேலேயுள்ளவையெல்லாம்.

''மதிப்புரை யாரிடம் வாங்குவது?'' என்ற கேள்வி எழுந்தபோது ஆசிரியர்கள் மூவரும் திண்டாடித் திணறினுர்கள்.


''ஏண்டா, நம்ப கிளாஸ் வாத்தியார் கிட்டே 'மதிப்புரை' எழுதி வாங்கிடலாம்டா;'' என்றுன் சிவராமன்.

''ஆமாம்: அப்புறம் அரை வருஷப் பிராகிரஸ் ரிப்போர்ட்டை நேரே அப்பாவிடமே கொண்டு வந்து கொடுத்துடுவார் நம்ம வாத்தியார். வேறே நல்ல ஆளாப் பாருடா!'' என்று உபதேசம் செய்தான் கிட்டு.

இதற்குள் இரவு மணி ஏழடித்தது. 'நேரமாகி விட்டது. நாளை மாலை மதிப்புரைக்கு ஆள் தேடித் தருகிறேன்' என்று ரங்கன் உறுதி கூறவும் சிவராமன் மலரை மேஜை டிராயரில் வைத்தான். பாடப் புத்தகங்களை மேஜைமேல் பரப்பிக் கொண்டான். 'மலர்' காரியாலயத்திலிருந்து - அதாவது சிவராமன் வீட்டில், அவன் அறையிலிருந்து - வெளியேறினர் ரங்கனும், கிட்டுவும்.

''என்னடா, பாடமெல்லாம் ஒழுங்காகப் படிக்கிறயா?'' என்று கேட்டவண்ணம் உள்ளே நுழைந்த அப்பாவைக் கண்டதும், சிவராமனுக்குப் பள்ளிக்கூடச் சம்பளம் ஞாபகத்திற்கு வந்தது.

---



பையன்: அப்பா!.... நீ எங்க வாத்தியாரிடம்தான் படிச்சாயா?

அப்பா: ஆமாம்; என்ன விஷயம்?

பையன்: அதான், 'உங்கப்பா மாதிரி நீயும் இருக்காதே'ன்னு அவர் திட்டினுர்!

—சம்பத் குமார், தாம்பரம்.

''அப்பா, சம்பளம் கட்டணும், பணம் வேணும்!'' என்று முனகினான். சம்பளப்பணம் கட்டுவதற்கு இன்னும் மூன்று நாட்கள் கெடு இருந்தது. ஆனால் சிவராமன் படிப்பில் எப்படியிருந்தாலும், சம்பளம் கட்டுவதில் வெகு கரார்.

''இந்தா!'' என்று ஏழு ரூபாயை எடுத்துக் கொடுத்தார் அப்பா. 'ஒழுங்காகப் படி' என்று மற்றொரு முறை உபதேசம் செய்ய அவர் தவறவில்லை.

## 2

மறுநாள் 'மாலை மலர்' காரியாலயம் அதன் ஆசிரியர்களால் முற்றுகையிடப் பெற்றிருந்தது. ரங்கன் முதலில் பேச்சைத் துவக்கினான். ''டேய் சிவராம்! சரியான ஆளைப் பிடித்துவிட்டேன் 'மதிப்புரை'க்கு!'' என்றான்.

''யாரடா அது?'' என்று பறந்தார்கள் சிவராமனும், கிட்டுவும்.

''அந்த ஆசாமி வெளிநாடுகளெல்லாம் சுற்றி வந்தவர். குழந்தை உள்ளம் படைத்தவர். அயல் நாட்டுக் குழந்தைகளைப் பற்றிப் புத்தகங்களெல்லாம் எழுதி வெளியிட்டிருக்கிறார்'' என்றான்.

''டேய்! ஆளைச் சொல்லாமெ கதையளந்துண்டே போறியே!''

''கர்னல் குமரப்பா! ஆனால் இப்பொழுது அவர் 'கர்னல்' இல்லை. யுத்தம் முடிந்ததும் இங்கே வந்துவிட்டார். அவர் ஒரு மாஜி ராணுவ ஆபீஸர்!'' என்றான் ரங்கன்.

''அவரா! சரியான ஆசாமிதாண்டா! அது சரி, இப்போ வீட்டிலேதானே இருக்கார் அவர். உடனே போகலாம் வா!'' என்று அவசரப்பட்டான் சிவராமன்.

''அவசரப்படாதே, தம்பி! இப்போ அவர் வீட்டிலே இல்லே. வெளியே போயிருக்கார். நாளைக் காலையிலே போகலாம். நாளைக்குத் தான் சனிக்கிழமையாச்சே! பள்ளிக்கூடமும் கிடையாது!'' என்றான் ரங்கன்.

''வெரிகுட்! டேய் ரங்கா, காலையிலே சீக்கிரம் வந்துவிடு. உன்னையுந்தாண்டா கிட்டு!'' என்று இருவரையும் கழுத்தைப் பிடித்துத் தள்ளாத குறையாக அனுப்பினான் சிவராமன்.

## 3

சனிக்கிழமை. காலை ஏழு மணி. சிவராமனின் வீட்டை நோக்கி நடந்து வந்த ரங்கன், குமரப்பா வீட்டு வாசலில் அவருடைய மகன் சங்கர் சைக்கிளுடன் நிற்பதைக் கண்டான். ''என்னடா மாஸ்டர் குமரப்பா! சௌக்கியமா?'' என்று குசலம் விசாரித்தவண்ணம் சங்கரை நெருங்கினான்.

''அடடே, வாப்பா ரங்கா! என்ன விஷயம், சௌக்கியமா?'' என்று விசாரித்தான் சங்கர்.

''இன்னும் கொஞ்ச நேரத்திலே உங்க அப்பாகிட்டே நானும் இன்னும் இரண்டு பேரும் வரப்போறோம். ஆமாம், காலை வேளையிலே உங்க அப்பா சிரிச்ச முகமாத் தானே இருப்பார்?''

''ஏண்டா உனக்கு இந்தச் சந்தேகம்? ஏதாவது யாசகம் வாங்கப் போறியா என்ன? அப்படியானால் சொல்லு; அப்பாகிட்டே இப்பவே சொல்லி..'' என்று சங்கரன் இழுத்தாற்போல் பேசவும், ''காரியத்தைக் கெடுத்துடப் போறியா? அப்பா புண்ணியவானே, நீ சும்மா இருந்தால் அதுவே போதும்!'' என்று ரங்கன் பதறினான்.

''சே சே! அதுக்கில்லேடா. அப்பா இன்னும் ஒரு மணி நேரத்திலே ஊருக்குப் போகப்போறார். உனக்கு ஒத்தாசை ஏதாவது செய்யணுமானா இப்பவே சொல்லிடலாம்னுதான் கேட்டேன்'' என்றான் சங்கர்.

''ஐயையோ! ஊருக்குப் போறாரா? டேய், உன் சைக்கிளை இப்படிக் கொடு, சொல்றேன், சீக்கிரம்!'' சங்கரிடமிருந்து சைக்கிளைப் பிடுங்கி அதில் தாவி ஏறினான் ரங்கன்.

''டேய், எங்க அப்பா சைக்கிள்டா அது!'' என்று சங்கர் அலறிய பொழுது ரங்கன் தெருமுனையைத் தாண்டிப் போய்விட்டான்.

## 4

சைக்கிளில் அவசரமாக வந்த ரங்கனைக் கண்டதும் சிவராமன்,

"என்னடா தலைபோகிற விஷயம்?" என்று கேட்டான்.

"டேய், குமரப்பா ஊருக்குப் போறாராம் இன்னும் ஒரு மணி நேரத்திலே. நீ உடனே 'மலரை' எடுத்துக்கொண்டு இந்தச் சைக்கிளிலே ஓடு. நான் கிட்டுவோடே வரேன்!" என்றான் ரங்கன்.

சிவராமன் வீட்டிற்குள் ஓடினான். சில விநாடிகளில் கையில் 'மலரு'டன் வெளியே வந்தான். சைக்கிளில் தாவி ஏறினான்.

"குமரப்பா வீட்டு விலாசம், நம்பர் 12, வீராசாமி முதலித்தெரு. சீக்கிரம் போ!" என்று சிவராமனைத் துரிதப்படுத்திவிட்டு, ரங்கன் கிட்டுவைத் தேடிக்கொண்டு புறப்பட்டான்.

சைக்கிளில் சிட்டாய்ப் பறந்த சிவராமன் தெருவின் திருப்பத்தில் ஓடிவந்த எருமை மாட்டின் மேல் மோதவிருந்து, அந்த விபத்திலிருந்து, தப்பி, மறுபடியும் 'பெடலை' அழுத்தி மிதிக்க ஆரம்பித்தான். ஆனால், பாவம்! எதிரில் தட்டில் 'டிபன்', காபி முதலியவைகளுடன் சென்றுகொண்டிருந்த ஒரு கடைக்காரச் சிறுவன்மேல் சைக்கிள் மோதவும், அவன் கையிலிருந்த, தட்டுப் பலகாரமும், காபியும் கவிழ்ந்தன. தட்டிலிருந்த கண்ணாடித் தம்ளரிலிருந்து சூடான மணம் கமழும் சாம்பார் சிவராமனின் சட்டையைச் சரணடைந்தது. சைக்கிளை மோதிய அதிர்ச்சியில் கையிலிருந்த 'மலர்' நடுத் தெருவில் விழுந்திருக்க அதன்மேல் ஒரு 'கப்' காபியும் அபிஷேகமாகி விட்டதைக் கண்டான் சிவராமன். அவனால் சில நிமிட நேரம் எழுந்திருக்கவே முடியவில்லை.

கீழே விழுந்த கடைக்காரப் பையன் 'கோ'வென்று அழுதுகொண்டே, "ஐயையோ! எங்க முதலாளி என்னைக் கொன்னுடுவாங்க. ஒரு ரூபா டிபன், கண்ணாடித் தம்ளர் எல்லாம் போயிடுத்துங்க. ஐயையோ! முதலாளி என்னைக் கொன்னுடுவாருங்க!" என்று ஓலமிட்டான். கூட்டத்தினர் எல்லோரும் அந்தப் பையனின் சார்பில் பேச ஆரம்பித்துவிட்டனர்.

"ஏண்டா டேய்! ஏரோப்ளேன்லே போறதா நெனைப்போ! கொஞ்சம் மெதுவாப் போனா என்னடா?" என்று ஒருவன் சிவ



ராமனை மிரட்டினான். இன்னொருவன் சிவராமனின் சட்டையைப் பற்றிக்கொண்டான். "சைக்கிள்ளே ஏறிட்டா கண் தெரியல்லீங்களா தொரே!" என்று மரியாதை பண்ணிக் கொண்டிருந்த சமயம் 'டிபனை' இழந்த கடை முதலாளி ஆவேசமாக அங்கே வந்தார். பாவம், அவருக்கு அதிகமான பசி. சைக்கிளை 'கப்'பென்று பிடித்துக்கொண்டு விட்டார். அதைத் தள்ளிக்கொண்டே சிவராமனை நெருங்கி வந்தார்.

"டேய், மரியாதையா ரெண்டு ரூபா துட்டைக் கொடுத்துட்டு, சைக்கிளை வாங்கிட்டுப் போ!" என்று உறுமினார். நல்ல வேளையாக, முதல் நாள் கட்டவிருந்த பள்ளிக் கூடச் சம்பளப் பணம் ஏழு ரூபாயும் அப்படியே ஜேபியில் இருந்தது.

இரண்டு ரூபாயை எடுத்து முதலாளியிடம் கொடுத்துவிட்டு சைக்கிளைப் பெற்றுக்கொண்டான். நடு ரோட்டில், புழுதிக்கிடையே கசங்கிப்போய்க் கிடந்த 'மலர்' அவனைப் பார்த்தது பரிதாபமாக. குனிந்து அதைக் கையில் எடுத்துக் கொண்டு, சைக்கிளையும் தள்ளிக் கொண்டு வந்தான்.

அப்பொழுதுதான் ரங்கனும், கிட்டுவும் அந்த வழியே வந்து கொண்டிருந்தார்கள். சாம்பாரில் ஊறிய சிவராமனின் சட்டையையும், புழுதி படிந்த உடம்பையும், கலைந்த கிராப்பையும் கண்ட ரங்கன் துடித்துப் போனான். சிவராமன் நடந்ததைக் கூறினான்.

ரங்கன் சைக்கிளைப் பார்த்ததும் திடுக்கிட்டான். 'டைனமோ' விளக்கின் கண்ணாடி ஒரு முனையில் உடைந்திருந்தது. முன் சக்கரத்திலிருந்து இரண்டு கம்பிகள் தொங்கிக்கொண்டிருந்தன. சைக்கிளில் சிற்சில இடங்களில் நசுங்கல்கள் வேறு. சிவராமனும் அப்பொழுது தான் சைக்கிளைக் கவனித்தான்.

"ஐயோ! எல்லாம் குட்டிச்சுவராப் போயிடுத்துடா! சைக்கிள் குமரப்பாவுடையதுடா!" என்று சைக்கிள் இரவல் வாங்கி வந்த விவரத்தைக் கூறினான் ரங்கன்.

"சிவராமா! உங்கிட்டே பணம் எவ்வளவு இருக்கு? இந்தச் சைக்கிளை முதல்லே ரிப்பேர் பண்ணி ஒப்படைக்கணும்" என்று அவசரப்பட்டான் ரங்கன்.

"சம்பளப் பணம் அஞ்சு ரூபா பாக்கி இருக்கு."

'அந்த அஞ்சு ரூபாயைக் கொடு. இதை ரிப்பேர் பண்ணிட்டுத்தான் மறு வேலை. உம்..சீக்கிரம்!

"ஏண்டா அழறே? நீ கவலைப் படாதே. நாளைச் சாயந்தரத்துக் குள்ளே எப்படியாவது உனக்கு ஏழு ரூபா கொண்டு வந்து தந்துடறேன்" என்றான் ரங்கன்.

"டேய் எப்படியாவது நாளைச் சாயந்தரம் ஏழு ரூபா கொடுத்துடுவியா! இல்லாட்டா என் அப்பா என்னைக் கொலை பண்ணிடுவார்."

"நீ கவலைப்படாமல் போய் 'ரெஸ்ட்' எடுத்துக்கோ. நான் பார்த்துக்கறேன்."

சைக்கிள் ஷாப்பில் 'ரிப்பேர்' முடிந்தது. சைக்கிளைத் தள்ளியபடியே குமரப்பாவின் வீடு வந்து சேர்ந்தான் ரங்கன்.

"ஏண்டா இவ்வளவு நேரம்?" என்றான் வாசலில் மனக்கவலையுடன் காத்திருந்த சங்கர், கோபத்துடன்.

"அப்பா இருக்காராடா?" என்று கேட்டான் ரங்கன்.

"அவர் ஊருக்குப் போய் ஒரு மணி நேரம் ஆயிட்டுது. ஆமாம், நீ மட்டுமா வந்திருக்கே! உன்கூட ஒருத்தரும் வரல்லியா?"

"உங்க அப்பா எப்போ திரும்பி வருவார்?"

"அடுத்த ஊருக்குத்தான் போயிருக்கார். நாளைக் காலையிலே வருவார்."

"சரி! நான் 'மார்னிங்' வரேன், உங்க அப்பாவிடம். நீயும் கூட இரு. 'குட்பை'"—ரங்கன் புறப்பட்டு விட்டான். அவன் மனம் தீவிரமான திட்டத்தில் இறங்கியிருந்தது.

## 5

மறு நாள் ஞாயிற்றுக்கிழமை. காலை மணி பதினொன்று அடித்து சில நிமிஷங்கள் ஆகியிருக்கும்.



'மலர்' காரியாலயத்தில் கிட்டுவும், ரங்கனும் உள்ளே நுழைந்தனர்.

''டேய் ரங்கா! பணத்துக்கு என்னடா பண்ணினே?'' இது சிவராமன் முதல் கேள்வி.

''அவசரக் குடுக்கை, கொஞ்சம் சும்மா இருடா!'' என்று அதட்டி விட்டு ரங்கன் கிட்டுவின் பக்கம் திரும்பினான். கிட்டு ஒரு நோட்டுப் புஸ்தகத்தின் முதல் பக்கத்தை சிவராமனிடம் நீட்டினான்.

''மாணவர்கள் வாசகசாலை நிறுவுவதற்காக நன்கொடைகள்'' என்ற தலைப்பின் கீழ் சில பெரிய மனிதர்களின் பெயர்களும், அவற்றிற்கு நேராக நன்கொடைத் தொகைகளும் காணப்பட்டன.

''ரங்கா, இத்தனை பணமும் வசூல் பண்ணியிருக்கியாடா நீ! அதிலேருந்து ஏழு ரூபாய்....'' என்று இழுத்தான் சிவராமன்.

''லிஸ்ட் பூராவும் படிடா! அப்புறம் பேசலாம்'' என்றான் ரங்கன்.

சிவராமன் நன்கொடை 'லிஸ்ட்'டைப் படித்தான். கடைசி வரிக்கு வந்தான். உரக்கப் படித்தான். ''குமரப்பா, பத்து ரூபாய்'' ஆ! மற்றவர்கள் அளித்த தொகைகளை விட இது அதிகம்!

''ஆமாண்டா, இதோ பத்து ரூபாய். இப்பத்தான் வசூல் பண்ணினேன்! இந்தா நீ கேட்ட ஏழு ரூபாய்'' என்று ஏழு ரூபாயை சிவராமனிடம் கொடுத்துவிட்டு மீதி மூன்று ரூபாயைத் தன் பையில் போட்டுக்கொண்டான்.

''ஆமாம்! மீதி வசூலான பணம் எவ்வளவு? வாசகசாலை எப்போ திறக்கப் போறே?''


''வாசகசாலையா, சிவராமா? நான் கொடுத்தது நிஜமான லிஸ்டே இல்லை. நானே தயார் பண்ணினது. இதைக் குமரப்பாவிடம் காட்டித்தான் பணம் பறித்தேன். உனக்கும் உதவி பண்ணினேன்'' என்றான் ரங்கன்.

சிவராமனுக்கு ஆச்சரியமாக இருந்தது. ''ரங்கா, நீ பணம் சேர்த்த வழி ரொம்பவும் கெட்ட வழிடா! குமரப்பாவுக்குத் தெரிஞ்சா ஆபத்து இல்லையா?'' என்றான்.

''கெட்ட வழிதான்! நீ இந்த 'மலரை' இப்படிக் கொண்டுவாயேன்!'' என்றான் ரங்கன்.

கிட்டுவின் அநுதாபம் அளவு கடந்தது. ''ஐயோ! கருகிய மலர்!'' என்றான் அநுதாபத்துடன்.

''ஆம்! கருகிய, வாடிய மலர்தான். ஆனால் 'மணம் நீங்காத மலர்' சிவராமா! மதிப்புரைக்காக ஒதுக்கியிருக்கும் ஆறு பக்கங்களில் 'கொடை வள்ளல் குமரப்பா'வின் சிறப்புகளை வர்ணிக்கலாம். அவரிடம் பறித்த பத்து ரூபாய்க்கு அபராதமாக நாம் செலுத்தும் காணிக்கை அது!'' - உச்சி முகட்டைப் பார்த்து உணர்ச்சி ததும்பக் கூறினான் ரங்கன்.



# இளம் எழுத்தாளர்

இரா. முகி.

'ஊருக்கு இளைத்தவன் பிள்ளையார் கோவில் ஆண்டி' என்ற பழமொழியை உண்டாக்கியவர் இன்று இருந்திருந்தால் 'ஊருக்கு இளைத்தவன் இளம் எழுத்தாளன்' என்றுதான் சொல்லியிருப்பார். இளம் எழுத்தாளன் என்றாலே எல்லோருக்கும் இளக்காரம்தான். குயர் கணக்கில் காகிதங்களையும், அவுன்ஸ் கணக்கில் மையையும் வீணாக்கும் (ஐயையோ! 'வீணாக்கும்' என்று எழுதிவிட்டேன்!) இளம் எழுத்தாளனைக் கொஞ்சம் 'என்கரேஜ்' செய்வோம் என்ற உணர்ச்சி யாருக்கும் இல்லையே! அவனை 'அரைப் பைத்தியம்' என்று அழைப்பதற்குக்கூடச் சிலர் தயங்குவதில்லை.

ஒவ்வொரு பள்ளிக்கூடத்திலும் இளம் எழுத்தாளன் என்பவன் இருக்கிறான். ஆனால் உபாத்தியாயருக்கு அவனுடைய எழுத்துத் திறனை ரசிக்கும் திறமை இல்லாததால், இளம் எழுத்தாளன் அவரால் 'மண்டு' என்ற புனை பெயரில் அழைக்கப்படுகிறான். மாணவன் சில சமயங்களில் (தவறு, எப்போதும்தான்) தான் ஒரு சிறந்த வருங்கால எழுத்தாளன் என்பதைக் காட்ட, பரீட்சைத் தாள்களில் எழுதும் விடைகளைப் படித்துவிட்டு உபாத்தியாயர், "என்னடா! கேள்விக்குப் பதில் கேட்டால் கதையா எழுதுகிறாய்?" என்று கேட்டுக்கொண்டே இளம் எழுத்தாளனின் காதைப் பிடித்தால், பாவம்! அவனுக்கு என்னதான் செய்யத் தோன்றும்? ('வாத்தியார் திருகிவிட்டக் காதைக் கொஞ்ச நேரம் தடவி விட்டுக்கொள்ளத் தோன்றும்' என்கிறீர்களா!.. சபாஷ்!..) அதோடு விடுகிறாரா? இளம் எழுத்தாளனின் கற்பனாசக்தி நிறைந்த விடைத்தாளில் 'சுழி' ஒன்றும் போட்டுக் கௌரவப்படுத்துகிறார்.

இந்தப் பேப்பர்காரன் இருக்கிறானே, அவன்தான் இளம் எழுத்தாளனின் முதல் விரோதி. பழைய காகிதம் வீசைக் கணக்கில் வாங்க வேண்டுமென்றால், இவனுக்கு இளம் எழுத்தாளன்தானா கிடைத்தான்? எப்படியாவது துப்பறிந்து இளம் எழுத்தாளன் வீட்டைக் கண்டுபிடித்து, அவனுடைய வீட்டுக்குக் காலையும் மாலையும் விஜயம் செய்யாவிட்டால், பழைய பேப்பர் வாங்கும் அவனுக்கு வியாபாரம் நடப்பதில்லையாம்! விடிந்ததும் விடியாததுமாக இளம் எழுத்தாளன் வீட்டிற்குப் போய், "தம்பி! காகிதம் ஏதாவது இருக்கா? நான்கு நாட்களுக்கு முன் ஒரு கத்தைக் காகிதத்தில் கதை எழுதி அனுப்பினாயே! அது இன்னும் திரும்பி வரவில்லையா? அப்போ நாளைக்குக் கட்டாயம் வந்துவிடும். பத்திரமாக எடுத்து வை" என்று சொல்லும் போது இளம் எழுத்தாளனுக்கு அவனுடைய கழுத்தைப் பிடித்துத் திருக வேண்டும் என்ற உணர்ச்சி தோன்றுவதில்லை என்றால் அவனுடைய பொறுமையை என்னென்று வியப்பது!

பாவம்! இளம் எழுத்தாளனிடம் அவனுடைய நண்பர்களாவது அநுதாபம் காட்டுகிறார்களா என்றால், அதுதான் இல்லை! பணம் கொடுத்தவனைக் கண்டு பதுங்குகின்ற கடன்காரன் போல அவர்கள் இளம் எழுத்தாளனின் தலையைக் கண்டவுடன் ஓடி ஒளிந்து கொள்கிறார்கள். சிலர் அவன் தலையைக் கண்டு மறையாமல், கையிலிருக்கும் கதையைப் பார்த்தும் மறைவதுண்டு. இளம் எழுத்தாளன் தன் கதையைக் கொடுத்துப் படிக்கச் சொன்னால், அப்போதுதான் அவர்களுக்கு அவசர வேலையாவது, தலை வலியாவது வந்துவிடும்.

பத்திரிகாசிரியருக்காவது இளம் எழுத்தாளனிடம் கருணை இருக்கக் கூடாதா? 'மற்றவர்களாவது தேவலை, பத்திரிகாசிரியர் சுத்த மோசமான பேர்வழி' என்று நூற்றுக்கு மேலான ஓரணா தபால் தலைகள் வாங்கிச் சலித்த இளம் எழுத்தாளன் குறைப்பட்டுக் கொள்வதை அவர் கொஞ்சமாவது கவனிக்கிறாரா? அவன் அனுப்பும் கதையை ஒரு 'மூலையில் போட்டுத்தான் வைப்போமே, (இளம் எழுத்தாளர்கள் கவனிக்க: இங்கே நான் 'மூலை' என்று குறிப்பிட்டிருப்பது புத்தகத்தில் ஒரு மூலையையே அன்றி, பத்திரிகாலயத்தில் மூலையிலிருக்கும் குப்பைக் கூடையை அல்ல) என்ற தாராள மனப்பான்மை பத்திரிகை ஆசிரியரிடம் அணுவளவும் கிடையாது.

இளம் எழுத்தாளனின் நிலை கண்டு பரிதாபப்பட்டுத்தான், நான் அவன் பெருமையை (!) உணர்த்தும் இந்தக் கட்டுரையை எழுதினேன். அவனிடம் அநுதாபம் காட்டும் நான் விந்தையான ஆசாமிதானே! அது சரி, 'கண்ணன்' ஆசிரியருக்கு என்னிடம் அநுதாபம் இருக்குமா?



# பொங்கல் திருட்டு

ஆர். என். ராஜன்

## காட்சி-1

[கண்ணனும் அவன் தம்பி ஜம்புவும் வாசலில் நிற்கிறார்கள். எதிர் வீட்டு மணி தன் வீட்டு வாசலில் நிற்கிறான்.]

சமயம்: காலை வேளை.

கண்ணன்: டேய் மணி, இங்கே வாயேன். ஒரே ஒரு சமாசாரம்.

மணி: நேத்திக்கு நீதான் என் கூட 'டு' விட்டுவிட்டு ராஜுவோடு கோலி விளையாடினியே, இப்போ மாத்திரம் ஏண்டா கூப்பிடறே?

கண்: இப்போ வந்தா எல்லாரையும் 'பழம்' விடச் சொல்லுவேன். இல்லேன்னு அப்புறம்.... அதெல்லாம் இப்போ சொல்வானேன்!

ஜம்பு: வராட்டா போகட்டுமேடா. நமக்கு என்ன நஷ்டம்? (மணியைப் பார்த்து)வரமாட்டியே?

(மணி அருகில் வருகிறான்)

மணி: என்னடா சமாசாரம்?

கண்: இன்னிக்குப் பொங்கல் பண்டிகைக்காக நாங்க எல்லாம் செட்டியார் தோட்டத்துக்குப் போய் மாவிலை, புஷ்பம் எல்லாம் எடுத்துண்டு வரப்போறோம்.

மணி: (கெஞ்சும் குரலில்) நான் கூட வரேண்டா. கொஞ்சம் இரு, வீட்டிலே அம்மாகிட்டே போய் சொல்லிட்டு வந்துடறேன்.

கண்: அதற்குள்ளே அவசரப் படறியே. ராஜுகூட வரேன்னு சொல்லியிருக்கான். தமாஷா தின்னுண்டுபோக ஒரு கருப்பங்கழி எடுத்துண்டு அப்படியே ரோட்டுப் பக்கம் வரேன்னு வீட்டுக்குப் போயிருக்கான்.

ஜம்பு: மணி, உங்க அப்பாகூட நேத்திக்கு ரெண்டு கரும்பு வாங்கிண்டு வந்திருக்கார், இல்லே?

மணி: ஐயையோ! அது பூஜைக்காக வாங்கிண்டு வந்திருக்கா. அதை எடுத்தா கையை முறிச்சுடுவார் அப்பா.

கண்: போடா, பயந்தாங்கொள்ளி..

[இதற்குள் மணியின் அக்கா கிரிஜா வாசலில் வருகிறாள்.]

கிரிஜா: (கண்களைக் கோபத்துடன் உருட்டியபடி) டேய் மணி, அங்கே என்னடா வேலை? இங்கே வா. அம்மா கூப்பிடறாள்.

[மணி அக்காவிடம் தன் வீட்டு வாசலுக்குப் போகிறான்.]

கிரிஜா: (பல்லைக் கடித்து) நேத்திக்குத்தானே கண்ணன், ஜம்பு ரெண்டு பேரோடும் இனிமே சேரக் கூடாதுன்னு அடிச்சா? அதற்குள்ளேயா மறந்து போச்சு?

மணி: நான் ஒண்ணும் போகல்லே. அவன்தான் கூப்பிட்டான்.

கிரிஜா: எதுக்குடா கூப்பிட்டான்?

மணி: வந்து..வந்து..

கிரிஜா: சரி, சரி. இங்கேயே இரு. வாசல்பக்கம் பாத்துக்கோ. அம்மா கொல்லைப்புறம் இருக்காள். நான் கடைக்குப் போய் ஓடி வந்துடறேன்.

மணி: அப்பா இல்லையா?

கிரிஜா: மஞ்சள் கொத்து வாங்கத் தோட்டத்துக்குப் போயிருக்கார். இங்கேயே இருக்கியா?

மணி: சரி.

[கிரிஜா கடைக்குப் போகிறாள்]

## காட்சி-2

(கண்ணன் வீட்டில்)

கண்: இப்போ என்னடா செய்யறது? பொய் சொல்லியும் ஒண்ணும் நடக்கல்லியே!

ஜம்பு: நான் ஒண்ணு சொல்றேன், கேக்கறியா?

கண்: உம்..என்ன, சொல்லு!

(காதில் கசுமிசு என்று சொல்கிறான். பிறகு சிறிது நேரங்கழித்து இரைக்க இரைக்க ஓடி வந்தது போல்பாசாங்கு செய்துகொண்டே

மணியின் வீட்டுக்குள் வருகிறன் கண்ணன்.)

கண்: மணி..மணி..

மணி: (கோபமாக) உன்னை யாருடா வரச் சொன்ன இங்கே?

கண்: நான் ஒண்ணும் உன் மூஞ்சிக்காக வரல்லே. நாங்க தோட்டத்துக்குப் போகும்போது வழியிலே உங்க கிளாஸ் வாத்தியார் வந்து.. 'அவசரமா உடனே மணியை வரச் சொன்னேன்னு சொல்லு' என்ருர். நான் சொல்லிப்பிட்டேன். அவ்வளவுதான்.

மணி: அக்கா இங்கேயே இருக்கச் சொல்லிட்டுப் போயிருக்காளேடா. நான் என்னடா பண்ணுவேன்?

கண்: எனக்குத் தெரியாது. நீ போன போ, இல்லேன்ன எனக்கென்ன? அப்புறம் உன்னைத்தான் வாத்தியார் திட்டுவார்.

(இதற்குள் மணியின் அம்மா சத்தம் கேட்டு கொல்லையிலிருந்து அங்கே வருகிருள்.)

அம்மா: என்னடா, அங்கே கூச்சல்?

மணி: என் வாத்தியார் எதுக்கோ உடனே வரச் சொன்னராம், அம்மா!

அம்மா: சரி, போய்க் கேட்டுட்டு வா. நான் தாழ்ப்பாள் போட்டுக் கொண்டு போறேன்.

[மணி வெளியே போகிருன். மணி அம்மா கதவைத் தாளிட்டுக்கொண்டு மறுபடியும் கொல்லைப்புறம் போவதைக் கண்ணன் கதவின் இடுக்குவழியாகக் கவனித்துவிடுகிருன்.]

கண்: ஜம்பு, இங்கே வாயேன்.



சரியான சமயம். 'சட், புட்' டென்று வேலையை நடத்தணும்.

ஜம்பு: என்ன? சீக்கிரம் சொல்லு.

கண்: கரும்பு ரெண்டும் மணி வீட்டின் முற்றத்தில்தான் சாத்தி வைத்திருக்கு. நானே கண்ணாலே பாத்தேன். பக்கத்துக் காலி மனை வழியாப் போய், அந்தக் குட்டிச் சுவர்மேலே ஏறினா....அவ்வளவு தான். ஓடிவாயேன், சீக்கிரம்.

(இருவரும் காலி மனைக்கு வருகிறார்கள்.)

ஜம்பு: (சந்தோஷத்துடன்) கண்ணா, இதோ தெரியறதுடா கரும்பு. நான் ஏறி இந்தப் பக்கம் தள்ளவா?

கண்: டேய், ஜாக்கிரதையா ஏறு. நான் பிடிச்சுக்கறேன்.

(ஜம்பு ஏறுகிறான். ஆனால் பாதி ஏறினதும் கீழே விழுந்து விடுகிறான்.)

கண்: ஐயையோ! ஏண்டா விழுந்துட்டே? காலில் காயம் பட்டு ரத்தங்கூடக் கசியறதேடா.

ஜம்பு: (காயத்தைத் துடைத்துக் கொண்டே) வழுக்கிவிட்டுடுத்துடா. என்னடா செய்யறது? நீ ஏறுகிறாயா?

கண்: டேய், ரோட்டுப் பக்கம் போய்ப் பார்த்துவிட்டுவா. யாராவது வரப்போறாங்க.

ஜம்பு: சரி.

(ஜம்பு ரோட்டுப் பக்கம் போய் வருகிறான். கீழே கண்ணனும் கரும்புடன் இறங்குகிறான்.)

கண்: டேய் ஜம்பு, இப்போ என்னடா செய்யறது? வீட்டுக்கு எடுத்துண்டு போனா அம்மா திட்டுவாளே!

ஜம்பு: கோடியிலே ராஜூவும் மணியும் வரும்பலே இருக்கு. டேய், சீக்கிரம் எடுத்துண்டு வா. யாருக்கும் தெரியாமெ நம் வீட்டு மாடிமேலே கொண்டு வச்சுடலாம். அப்புறம் மத்தியானம் திங்கலாம்.

## காட்சி-3

[மணி வாத்தியார் வீட்டுக்குப் போகும் வழியில் ராஜூவைப் பார்க்கிறான்.]

ராஜு: மணி, மணி, இனிமே நம்ப ரெண்டு பேரும் சிநேகமா இருக்கலாண்டா. நேத்திக்குக் கண்ணன் என் கோலியைப் பிடுங்கிண்டு தரமாட்டேன்னு சொன்னான். அழுதுண்டே எங்கம்மா கிட்டே போய்ச் சொன்னேன். 'அதுபோனால் போகட்டும். இனிமே அவங்களோடு சேராதே. மணியோடு மாத்திரம் விளையாடு'ன்னு சொன்னா.

மணி: கண்ணனோடு இப்போ நீ பேசமாட்டே இல்லே? கொஞ்ச நாழிமுன் அவனோடு நீயும் தோட்டத்துக்குப் போகப் போவதாகச் சொன்னானே? அப்போ பொய்யா புளுகியிருக்கான்?

ராஜு: நான் அவனைப் பார்க்கவேயில்லையே. நீ எங்கே போறே இப்போ?

மணி: நம் கிளாஸ் வாத்தியார் எதுக்கோ அர்ஜண்டா என்னை வரச் சொன்னாராம். இப்போ கண்ணன் வந்து சொன்னான். அங்கேதான் போறேன்.

ராஜு: அதுவும் சுத்தப் பொய். நம்ப வாத்தியார் நேத்திக் காலையிலேயே சொந்த ஊருக்குப் போயிட்டார். வீடு பூட்டிக் கிடக்கு. திரும்பி வா. நாம் வீட்டுக்குப் போகலாம். அவன் பேச்சை இனிமேல் நம்பவே நம்பாதே.

## காட்சி-4

சமயம்-நடுப் பகல்.

[மத்தியான்னம் கண்ணனின் பக்கத்து வீட்டுக் கணேசையர் முற்றத்தில் பொங்கலுக்காகப் பூஜை செய்கிறார்.]

கணேசையர்: ரவயே நமஹ.. திவாகராய நமஹ..(நடுவில் மந்திரத்தை நிறுத்திவிட்டு) டீ..என்ன இது? மேலேயிருந்து சக்கை சக்கையா ஏதோ விழுந்திண்டேயிருக்கு!

கணே-மனைவி: காற்றுக்கு ஏதாவது வந்து விழறதோ, என்னவோ? என்ன சக்கை, எங்கே விழுந்திருக்கு?

கணே: சூர்யாய நமஹ..அடடா, இது என்ன மறுபடியும் வந்து விழறதே! (மேலே அண்ணாந்து பார்க்கிறார். கண்மேல் வந்து



ஒன்று விழுகிறது. கோபத்துடன் கையி லெடுத்துப் பார்க்கிருர்) அட ராமா! (அருவருப் புடன்) கரும்புச் சக்கை! ஈரமாக இருக்கிறதே. எச்சலோ என்னவோ! பக்கத்து வீட்டு மெத்தை மேலிருந்து விழுகிறதே,

கணே-மனேவி: (மேலே பார்த்தபடி) பக்கத்து வீட்டு வாலில்லா வான ரங்கள்தான் போலே யிருக்கு! அதோ, ரெண்டு தலே தெரியருப் போல இருக்கே மாடிமேலே! பண்டிகை அன்னிக்குக் கூட இப்படி வயித் தெறிச்சல் கொட்டிக் கிறதுகளே இதுக?

கணே: (கோபத்துடன் எழுந்து) சத்தம் போடாமல் இரு. ஒரு நாளேக்குச் சரியானபடி பூசை கொடுத்தாலொழிய இந்தத் தறி தலேகளுக்குப் புத்தி வராது.

[கோபாவேசத்துடன் எழுந்து பக்கத்து வீட்டுக் குச் சென்று தாளிட்ட கதவைத் 'தட தட' வென்று தட்டுகிருர். கண் னின் அம்மா கதவைத் திறக்கிருள்.]

கணே: குழந்தைகளேப் பெத்து விட்டால் ஆயிடுத்தா? வளர்க்கத் தெரியாமல் வளர்த்து, பண்டிகை யும் அதுவுமா ஊரார் வயித்தெறிச் சலேக் கொட்டிக்கிருனுகளே....

['படபட' வென்று வார்த் தைகளேப் பொழிந்த வாறே அந்த அம்மாளேத் தாண்டிக்கொண்டு ரேழியில் இருந்த படிக் கட்டு வழியாக மொட்டை மாடியை அடைகிருர்.]

கணே: (பல்லேக் கடித்தவாறே) வானரங்களா, உங்களேச் சரியாக அடக்குவார் இல்லாமல்தானே இப் படித் திமிர் பிடித்து அலேகிறீர்கள்? 'தரதர' வென்று கைக்கு ஒரு வஞகப் பிடித்து இழுத்துக் கொண்டே தெரு வாசலுக்கு வரு கிருர். அவர்கள் அம்மா ஒன்றும் புரியாமல் வாயடைத்து நிற்கிருள். இதற்குள் தெருவில் கூட்டம் கூடி விடுகிறது.]

## காட்சி-5

(மணி வீட்டில்)

மணி அப்பா: கிரிஜா, பூஜைக்கு எல்லாத்தையும் முற்றத்திலே எடுத்து வை. கரும்பை எங்கே வைத்திருக்கிருய்? அதையும் கொண்டுவந்து சுவரில் சாத்திவை.

கிரிஜா: ஐயையோ! கரும்பு இங்கேதானே சாத்தியிருந்தேன். காலேயில்கூடப் பார்த்தேனே!

ம. அப்: மணி எடுத்து வைத் திருப்பான். அவனேக் கேட்டுப் பார்.

மணி: எனக்குத் தெரியவே தெரி யாதே. நான் அந்தப் பக்கமே போகல்லியே.

அம்மா: ஏண்டா மணி, எதிர்த்த வீட்டு வானரம் இங்கே வந்து உன்னேடு பேசிண்டிருந்ததே, போகும்போது வெறுமனேதானே போச்சு? நீ கவனிச்சியோ?

[மணியின் நண்பன் ராஜு பரபரப்புடன் உள்ளே வருகிருன்.]

ராஜு: மணி, மணி. சீக்கிரம் வாசலுக்கு வந்து பாரேன். தெரு பூரா ஒரே அமர்க்களப் படறது!




போலீஸ்காரன்: டேய், இந்த ராத்திரியிலே மூட்டை முடிச்சோடு எங்கேடா போறே?

திருடன்: (சமாளித்துக்கொண்டு) வேறொரு வீட்டுக்குக் குடித்தனம் போறேங்க....

—ஆர். திருமூர்த்தி, பத்ராவதி.

---

உனக்கு இன்னும் ஒண்ணும் விஷயம் தெரியாதா?

[மணி வீட்டில் எல்லோரும் வாசலுக்கு வருகிறார்கள். மணி அப்பாவும் வாசலில் நின்றபடியே கவனிக்கிறார்.]

கணேச: (பல்லைக் கடித்துக் கொண்டு) ஏண்டா கழுதைகளா, உங்களுக்கு மூளை இருக்கா? மாடியிலிருந்து கரும்பைக் கடிச்சுக் கடிச்சு நான் பூஜை செய்யும்போது எச்சிலை என் மேலே துப்புகிறீர்களே, நியாயமா இது?

[இதைக் கேட்டு, கூட்டத்தில் எல்லோரும் 'கொல்' லென்று சிரிக்கிறார்கள். கணேசையருக்குக் கோபம் அதிகமாகிறது]

கூட்டத்தில் ஒருவர்: அவன் வீட்டில்தான் இந்த வருஷம் பொங்கல் கிடையாதே. கரும்பு ஏதுன்னு கேளுங்க, முதலில்.

மற்றொருவர்: எந்த வீட்டில் திருடினான்னு கேட்கச் சொல்லுங்க, சார்.

கணேச: என்னடா, முழிக்கிறீங்க! பதில் சொல்லுங்கடா? (கோபத்தால் கண்கள் சிவக்க உதட்டைக் கடித்து அடிக்கக் கையை ஓங்குகிறார். மற்றவர்கள் வேடிக்கை பார்க்கிறார்கள். அந்தப் பையன்களின் தாய் துக்கத்தால் விம்முகிறாள்.)

ம அப்: (கூட்டத்தின் நடுவில் வந்து) ஓய், கணேசையர்! நீரும் இப்படித்தான் சின்ன வயசில் ஊரார் வயித்தெரிச்சலைக் கொட்டிக்கொண்டீராம். கதை கதையாகச் சொல்லியிருக்கார் உங்க அப்பாவே என்னிடம். ஏதோ இரண்டுங்கெட்டான்கள் தெரியாத்தனமாகச் செய்துவிட்டால் அவனைக் கண்டிக்க இத்தனை பேரா வேண்டும்? ஊரையே திரட்டிக் கொண்டு வந்துவிட்டீரே!

(மணி அப்பாவுக்கே அந்த ஊரில் தனி மதிப்பு. அவரவர் சொல்லிக்கொள்ளாமல் நழுவ ஆரம்பித்தனர்.)

கிரிஜா: அப்பா, நம்ம வீட்டுக் கரும்பாகத்தான் இருக்கும் அது.

ம-அப்: சீச்சீ போ, உன்னை யாரும் இங்கே கேக்கல்லே! (கண்ணன், ஜம்பு பக்கம் திரும்பி) டேய் பசங்களா, இனிமேல் இந்த மாதிரித் துஷ்ட ஜோலிக்குப் போவீர்களா? போனீர்களோ....?

கண்-ஜம்பு: (கண்களில் நீர் ததும்ப) இல்லவே இல்லை, மாமா. இனிமே அதைப்பத்தி நினைக்கக் கூட மாட்டோம். புத்தி வந்தது. நல்ல காலம்! நீங்க வரல்லேன்னா.. (மேலே பேச இயலவில்லை. அழுகை தான் பீறிட்டு வந்தது அவர்களுக்கு)

ம அப்: (மிரட்டியபடியே) போங்க உள்ளே, உங்க அப்பா இருந்த மதிப்புக்கு.. (அவருக்கே ஒரு கணம் துக்கம் தொண்டையை அடைத்தது. பேச முடியவில்லை. சமாளித்துக்கொண்டு) இந்த மாதிரி நீங்க இருக்கக்கூடாது. தெரிஞ்சுதா? புத்தியா, சமர்த்தா நல்ல பையன்கள்னு பேர் வாங்கணும்.

கண் - அம்மா: (உள்ளே வந்த குழந்தைகளை அணைத்தவாறே) தெய்வச் செயல்தான் மணி அப்பா சமயத்துக்கு வந்து சேர்ந்தார்!

(திரை)

# பளிங்குமலைப் பூதம்

திருச்சி அண்ணு

ஆனந்தபுரி இளவரசன் ஆனந்த வர்மன் அஞ்சா நெஞ்சம் படைத்தவன். மிகச் சிறந்த வீரன். உலகத்தைச் சுற்றிப் பார்க்கவேண்டும் என்ற ஆவலுடன் அரண்மனையை விட்டுப் புறப்பட்டான். ஊர் ஊராகச் சுற்றி வரும்போது, மஞ்சிபுரி என்ற நாட்டை அடைந்தான். அங்குள்ள மக்கள் ஏதோ வருத்தத்தில் ஆழ்ந்திருப்பதாகத் தெரிந்தது. சோகத்தின் சாயலே எங்கும் படிந்திருந்தது.

இளவரசன் அவ்வூர் வேந்தனிடம் சென்று விஷயத்தை விசாரித்தான்.

''வீரனே, என் மகள் மஞ்சுளா ரோஜா மலரைப் போல அழகாய் இருப்பாள். அவளைப் பளிங்குமலைப் பூதம் பறித்துக்கொண்டு போய் விட்டது. அவளை மீட்டு வருகிறேமென்று எத்தனையோ வீரர்கள் சென்றார்கள்; ஆனால் சென்றவர் யாருமே திரும்பி வரவில்லை. என் மகளுக்காக எனது குடிபடைகள் யாவரும் கண் கலங்குகிறார்கள். மகளைப் பிரிந்த துக்கம் என் நெஞ்சை அரித்துக்கொண்டிருக்கிறது!'' என்று கூறிக் கலங்கினான் மஞ்சிபுரி மன்னன்.

வீரன் உடல் சிலிர்த்தது. ''பளிங்குமலைப் பூதத்தைக் கொன்று மஞ்சுளாவை மீட்டு வருவேன்!'' என்று கூறி விடை பெற்றுக்கொண்டான் ஆனந்த வர்மன்.

ஊர் ஊராகச் சுற்றி வந்தான். பளிங்குமலை இருக்குமிடம் யாருக்குமே தெரியவில்லை. ஒரு சமயம், ஒரு பிரம்மாண்டமான காட்டின் வழியே போய்க்கொண்டிருந்தபோது, அருகே ஒரு புதரில் நாலைந்து பட்டுப் போர்வைகள் விரித்திருப்பதைக் கண்டு ஆச்சரியமடைந்தான். அவைகளில் அழகான போர்வை ஒன்றை எடுத்துக்கொண்டு சிறிது தூரம் போவதற்குள், எங்கிருந்தோ ஒரு பெண் ஓடோடியும் வந்து, அவனை வழி மறைத்தாள். அவள் ரோஜா மலரைப்போல் அழகாயிருந்தாள்!

''ஐயா, என் போர்வையைக் கொடுங்கள்'' என்றாள் அந்தப் பெண்.

''இந்தப் போர்வை உன்னுடையதா? நீ யார்?'' என்றான் ஆனந்த வர்மன். பெண் சிறிது தயங்கினாள்.

''நான்தான் மஞ்சிபுரி ராஜகுமாரி.''

''மஞ்சுளாவா நீ? நான் ஆனந்தபுரி இளவரன். வா போகலாம். உன்னைக் காணாமல் உன் தந்தை துயர்ப்படுகிறார்!''

''ராஜகுமாரா! பளிங்குமலைப் பூதம் உயிரோடு இருக்கும்வரை நான் தப்பமுடியாது. அதன் சம்மதத்தின் பேரில்தான், சில தோழிகளுடன் நான் இவ்வனத்திலுள்ள பொய்கைக்கு நீராட வந்தேன். என்னுடன் வந்தவர்கள் திரும்பிப் போய்விட்டார்கள். இனியும் நான் தாமதித்தால், என் உயிருக்கே ஆபத்து வந்துவிடும். தயவுசெய்து என் மந்திரப் போர்வையைக் கொடுங்கள்.''

ராஜகுமாரி கெஞ்சினாள். ராஜகுமாரன் மந்திரப் போர்வையைக் கொடுத்துவிட்டு, ''மஞ்சுளா பளிங்குமலை எங்கே இருக்கிறது? அதற்கு வழியைச் சொல்லிவிட்டாவது போயேன்!'' என்று மன்றாடினான்.

''ஐயோ நான் சொல்லக் கூடாது!'' என்று கூறிக்கொண்டே மஞ்சுளா மந்திரப் போர்வையை விரித்துப் போர்த்துக்கொண்டு பறந்து சென்றாள்.

இளவரசன் அவள் சென்ற திசையைக் கவனித்துக்கொண்டு, இருள் நிறைந்த காட்டுப் பாதையிலே நடந்தான். திடீரென்று ஒரு காட்டாறு குறுக்கிட்டது. ஆற்றிலே இரு கரையும் புரள வெள்ளம்

ஓடியது! ஆயினும் இளவரசன் அஞ்சாமல் ஆற்றிலே இறங்கினான். அப்போது பின்புறமாக ஒரு குரல் கேட்டது.

''அப்பா, நானும் அக்கரைக்குத் தான் போகவேண்டும். என்னையும் அழைத்துப் போவாயோ?'' என்று கெஞ்சினாள் ஒரு கிழவி. இளவரசன் மனமிரங்கினான். அவளையும் தோளிலே தாங்கிக்கொண்டு ஆற்றைக் கடந்தான்.

என்ன ஆச்சரியம்! அக்கரை சேர்ந்ததும், கிழவி மாயமாய் மறைந்துவிட்டாள். அந்த இடத்திலே ஒரு தேவதை நின்றது. ''ராஜகுமாரா, உன்னைச் சோதிக்கவே நான் கிழவியாக வந்தேன். உன் தயாள குணத்தை மெச்சினேன். இதோ பார். மந்திரச் சங்கு! இதன் நாதம் உன் பகைவரைப் பணிய வைக்கும் சக்தி உள்ளது. இதன் உதவியால், நீ வெற்றி வீரனாகத் திரும்பி வா!'' என்று கூறிவிட்டு அந்தத் தேவதை மறைந்தது.

இளவரசன் ஆனந்தவர்மன் மீண்டும் புறப்பட்டான். திடீரென்று ஓர் உருவம் வழியை மறைத்து நின்றது. இடி போன்ற குரலில் இடி இடியென்று சிரித்துக்கொண்டே, அவனை இறுகக் கட்டிப் பிடித்தான் அந்த ராக்ஷஸன்.

இளவரசன் அஞ்சவில்லை. ''அடே உன்னைப் போன்ற துஷ்டர்களை ஒழிக்கவே நான் கிளம்பியிருக்கிறேன்!'' என்று சொல்லிவிட்டு, மந்திரச் சங்கை எடுத்து ஊதினான். அவ்வளவுதான்! அரக்கனின் ஆர்ப்பாட்டம் அடங்கிவிட்டது. சங்க நாதம் அரக்கனை அடிமையாக்கிவிட்டது. ராஜகுமாரன் சொன்னபடி அரக்கன் ஆடினான். தன் உள்ளங்கையிலே ராஜகுமாரனை ஏற்றிக்கொண்டு, கண்ணை மூடித் திறப்பதற்குள் பளிங்குமலையிலே இறக்கிவிட்டு ராக்ஷஸன் ஓட்டமெடுத்தான்.

மலை உச்சியிலே திறந்த வெளி. அருகே ஒரு குகை வாயில் தெரிந்தது. அதன் பக்கத்திலே ஒரு பெரிய மடு. ராஜகுமாரன் தைரியமாகக் குகைக்கதவை இடித்தான். சிறிது நேரம் கழித்து ஒரு கிழவி கதவைத் திறந்தாள்.

''யார் அப்பா நீ? இங்கே எப்படி வந்தாய்? இது பளிங்குமலைப் பூதம் இருக்குமிடம். உன்னைக் கண்டால் கொன்றுவிடும். ஓடிப்போ'' என்றாள் கிழவி.

''பாட்டி பயப்படாதீர்கள். நான் அந்தப் பூதத்தைப் பார்க்கத் தான் வந்திருக்கிறேன். மிகவும் களைப்பாய் இருக்கிறது. கொஞ்சம் சோறு போடுங்கள்!'' என்றான் ராஜகுமாரன்.


''நான் சொல்லும் மூன்று காரியங்களையும் செய்து முடிப்பதாக வாக்குக் கொடுத்தால், சோறு போடுவேன். தவறினால், உன் தலை உனக்குச் சொந்தமில்லை. சம்மதமா?'' என்றாள் கிழவி.

ராஜகுமாரன் அஞ்சாமல் ஒப்புக்கொண்டான்.

மறுநாள் காலை.

கிழவி அவனிடம் வந்து ஒரு வாளியைக் கொடுத்துவிட்டு, ''அதோ அந்த மடுவின் நீரையெல்லாம் இறைத்தாக வேண்டும். தவறினால் உன் தலை தப்பாது!'' என்றாள் கிழவி.

உச்சிப்பொழுது வரையிலே இளவரசன் ஆனந்தவர்மன் மூச்சைப் பிடித்துக்கொண்டு தண்ணீரை



இறைத்துப் பார்த்துவிட்டான். மடு கொஞ்சங்கூடக் குறையவில்லை. ராஜகுமாரன் உட்கார்ந்து பெரு மூச்சு விட்டுக்கொண்டு யோசனையில் ஆழ்ந்தான்.

பின்புறமாக, ''ராஜகுமாரா!'' என்ற குரல் கேட்டது.

''மஞ்சுளா!'' என்று உற்சாகத்துடன் திரும்பினான் ராஜகுமாரன்.

''ராஜகுமாரா, இதோ பார் மந்திர மோதிரம்! இதைக் கல்லிலே உறைத்தால் நீ நினைத்த காரியம் கைகூடும். சரி, எனக்கு நேரமாகி விட்டது. நான் வருகிறேன்'' என்று ஓடி மறைந்தாள் மஞ்சுளா.

வெகு குதூகலத்துடன் எழுந்த ராஜகுமாரன், அந்த மந்திர மோதிரத்தைத் தேய்த்தான். என்ன ஆச்சரியம்! மடுவிலே இருந்த நீரெல்லாம் அப்படியே எழுந்து, மேலே கிளம்பி, ஆகாயத்தில் மறைத்துவிட்டது. மடுவின் நடுவிலே ஒரு சுரங்கப் பாதை தெரிந்தது. அந்த வழியாக ராஜகுமாரன் தைரியமாகச் சென்றான். திடீரென்று சுரங்கப் பாதை முடிந்தது. அவன் ஓர் இருள் தேங்கிய காட்டிலே நின்றான்.

அதே கணம் கிழவி திடீரென்று எங்கிருந்தோ வந்து எதிரிலே நின்றாள். ''சபாஷ் பிள்ளாய்! முதல் கட்டளையை முடித்து விட்டாய். நாளைக் காலையிலே இந்தக் காட்டு மரங்களையெல்லாம் வெட்டி வீழ்த்தவேண்டும்!'' என்று கூறிவிட்டுச் சென்றாள்.



அவனிடம் மந்திர மோதிரம் இருந்தபடியால் ராஜகுமரான் எதற்குமே அஞ்சவில்லை. அதன் உதவியால் அவன் இரண்டாவது கட்டளையையும் முடித்து விட்டான்.

மறுநாள், மூன்றாவது கட்டளை பிறந்தது. வெட்டிய பச்சைக் கட்டைகளைக் குவித்துத் தீ வைக்க வேண்டுமென்று உத்தரவு.

பெரிய அசுர வேலை. ராஜகுமாரன் மனம் குழம்பி நின்றான். அப்பொழுது, ''ராஜகுமாரா!'' என்று கூப்பிட்டாள் மஞ்சிபுரி ராஜகுமாரி. ஆனந்தவர்மனுக்கு ஆனந்தம் மேலிட்டது.

''ராஜகுமாரா, நான் வந்திருப்பது யாருக்கும் தெரியக் கூடாது. அந்தக் கிழவிதான் பளிங்குமலைப் பூதம். நம்மிடம் மந்திர மோதிரம் இருக்கும் வரையிலே அச்சமில்லை. அவள் சொல்வதை எல்லாம் அஞ்சாமல் செய்து முடியுங்கள். கடைசியில் சமயம் பார்த்து அவளை நெருப்பிலே தள்ளிவிடுங்கள். நெருப்பினால்தான் அதற்குச்

சாவு!'' என்று எச்சரித்துவிட்டுச் சென்றாள் ராஜகுமாரி.

இளவரசன் மந்திர மோதிரத்தைத் தேய்த்தான். மரக்கட்டைகள் எல்லாம் பறந்தோடி வந்து, அம்பாரமாகக் குவிந்தன. என்ன ஆச்சரியம், பச்சை மரங்களிலே தீயும் பற்றிக்கொண்டு எரிய ஆரம்பித்தது!

சிறிது நேரத்தில் கிழவி அங்கே வந்தாள். எரியும் மரக்கட்டைகளைப் பார்த்தாள். நடுவிலே இருந்த ஒரு கட்டையில் மட்டும் தீப் பற்றாமல் இருந்தது. அதைச் சுட்டிக் காட்டி, "அதோ எரியாமல் கிடக்கிறதே, அந்தக் கட்டையை இங்கே எடுத்து வா. இதுவே உனக்குக் கடைசி வேலையாக இருக்கும்!'' என்றாள் கிழவி.

ராஜகுமாரன் தயங்காமல் தீயிலே குதித்தான். எரியாத கட்டையை இழுத்து வந்து, வெளியே போட்டான். என்ன ஆச்சரியம்! அவனுக்கு நெருப்புச் சுடவே இல்லை. ஜில்லென்று குளிர்ச்சியாக இருந்தது. வெளியே இழுத்துப் போட்ட மரக்கட்டை, ஒரு பெண்ணாக மாறிவிட்டது. அவள்தான் ராஜகுமாரி மஞ்சுளா! இளவரசன் ஆவலோடு "மஞ்சுளா நீயா!'' என்று சொல்லிக்கொண்டே அவள் அருகே ஓடினான்.

அதே கணம் கிழவி தன் சுயரூபம் எடுத்தாள். கோரமாகச் சிரித்தாள். புதர்போன்ற மீசையும் தீக் கங்குகள் போன்ற கண்களும் ஈட்டி போன்ற கோரப் பற்களும் பார்க்கப் பயங்கரமாகக் காட்சியளித்தது பூதம்.

"அடே ராஜகுமாரா, நில். உங்களுடைய நேசம் நான் அறிந்த விஷயம்தான். உன் கண்ணெதிரிலேயே ராஜகுமாரியை விழுங்கப் போகிறேன். மந்திர மோதிரத்தைத் திருடிக் கொடுத்த துரோகி!'' என்று 'ஆ' வென்று வாயைப் பிளந்து கொண்டு, ராஜகுமாரிமீது பாய்ந்தது பூதம். ஆனந்தவர்மன் அஞ்சவில்லை. பூதத்தை முந்திக் கொண்டு பாய்ந்தான்.

தீயின் அருகே நின்றிருந்த ராஜகுமாரியைப் பிடித்து இழுத்துக் கொண்டு அப்பால் சென்றான். அதே சமயம் அங்கே பாய்ந்த பூதம் குறி தவறிப் போய் நெருப்பிலே விழுந்தது. பூதத்தை விழுங்கி விட்டு, கொழுந்துவிட்டு எரிந்தது தீ.

பளிங்குமலைப் பூதம் தொலைந்தது. ராஜகுமாரி மஞ்சுளா மனம் மகிழ்ந்தாள். அவளோடு சிறைப்பட்டுக் கிடந்தவர்களும் ஆனந்தமடைந்தார்கள்.

ஆனால் மறுகணம்?

பூதம் இறந்தவுடன், மந்திர சக்தியெல்லாம் மறைந்துவிட்டது. பளிங்குமலை மாயமாய் மறைந்து விட்டது. அந்த இடத்திலே ஒரு சிறு தீவு தோன்றியது. சுற்றிலும் கண்ணுக்கு எட்டிய தூரம் வரையிலும் கடல்; கருநீலக் கடல்! அங்கிருந்து தப்பும் வகை அறியாமல், எல்லோரும் தீவைச் சுற்றிச் சுற்றி அலைந்தார்கள். அப்பொழுது ராஜகுமாரன், தான் வழியிலே சந்தித்த தேவதையை நினைத்துக் கைகூப்பி வணங்கினான். அதே கணம் தேவதை அவன் முன் தோன்றி, "மகனே, கண் கலங்காதே. உங்களுக்காக அதோ தோணி காத்திருக்கிறது'' என்று கூறிவிட்டு மறைந்தாள்.


எல்லோரையும் ஏற்றிக்கொண்டு அந்தத் தோணி அலைகடலைக் கிழித்துக்கொண்டு சென்றது. கரையை நெருங்கியதும், என்ன ஆச்சரியம்! அந்தத் தோணி வானத்திலே எழும்பிப் பறந்து சென்றது. எல்லோரையும் அவரவர் ஊரிலே கொண்டு சேர்த்துவிட்டு மறைந்தது.

மஞ்சிபுரி மன்னன் தன் மகளைக் கண்டதும், அளவில்லாத ஆனந்தம் அடைந்தான். ஆனந்தபுரி இளவரசன் ஆனந்தவர்மனை எவ்வாறு புகழ்வதென்று புரியாமல் திணறினான்.

அடுத்த சுபயோக சுப தினத்திலே ராஜகுமாரி மஞ்சுளா ராணியானாள். ஆனந்தபுரி இளவரசன் ஆனந்தவர்மன் மகாராஜாவானான்.

உ.ம

முதல் பரிசுபெற்ற "தொடர்கதை



# மஞ்சள் பங்களா

— ஜி. ஜயராமன் —

ராகவனும் மனோகரும் இன்ஸ்பெக்டரின் எதிரில் போடப்பட்டிருந்த நாற்காலிகளில் உட்கார்ந்து கொண்டார்கள். "ஆமாம் என்ன விசேஷம்? இப்படித் திடும்னு கிளம்பினே?" என்று ராகவனை விசாரித்தார் இன்ஸ்பெக்டர். "ஒன்றும் இல்லை சார்! இவன் என் சிநேகிதன். பெயர் மனோகரன். இவனுடைய சிற்றப்பா சாம்பசிவ முதலியார் இந்த ஊர்க்காரராம்; பெரிய பணக்காரராம். உங்களுக்குக்கூடத் தெரிந்திருக்கலாம். அவருடைய சொத்துக்களை இவன் பெயருக்கு வைத்து விட்டுப் போயிருக்கிறாராம்" என்று தொடங்கி விவரங்களையெல்லாம் சொன்னான் ராகவன். எல்லாவற்றையும் கவனமாகக் கேட்டுக் கொண்ட இன்ஸ்பெக்டர் அந்தக் கடிதங்களை வாங்கிப் படித்துப் பார்த்தார். பிறகு அவர் மனோகரனைப் பார்த்து, "மனோகர்! டாக்டர் சேகர் என் உயிருக்குயிரான நண்பர். அவருக்கு நான் எவ்வளவோ கடமைப்பட்டிருக்கிறேன். நான் கட்டாயம் உனக்கு என்னால் ஆனதைச் செய்கிறேன். ஆனால் 'மஞ்சள் பங்களா' வின் மர்மம் எளிதில் கண்டுபிடிக்கக் கூடியதல்ல. என் உத்தியோக நாளிலேயே அங்கே நடப்பதைக் கண்டுபிடிக்க எவ்வளவோ முயன்றிருக்கிறேன். ஆனால் அதைப் பற்றி ஒன்றுமே அறிந்துகொள்ள முடியவில்லை. சாம்பசிவமே ஒரு மர்மமான மனிதராகத்தான் இருந்தார். அவருக்கு அண்ணன் பிள்ளை என்று ஒருவன் இருக்கிறான் என்பதுகூட இப்போதுதான் தெரிகிறது. கட்டாயம் என்னால் ஆனதைச் செய்து உங்களைப் பாதுகாப்பேன். ஆனால் நான் உங்களுக்கு உதவியாக இருக்கிறேன் என்பது யாருக்கும் தெரியக் கூடாது. விஷயங்களை அதன் போக்கிலே விட்டு அந்த மர்மங்களை அறிய, நீங்கள் அங்கேயே தங்குவதுதான் உபயோகமாயிருக்கும். ஆனால் சர்வஜாக்கிரதையாக இருக்க வேண்டும். அங்கே நடப்பவைகளையும் கூடுமானவரை எனக்குத் தெரிவித்துக்கொண்டிருக்கவேண்டும்" என்று கூறி அவர்களுக்கு விடை கொடுத்தார் இன்ஸ்பெக்டர்.

"அடே ராகவா! எல்லாரும் ஏன் இப்படி எச்சரித்துக்கொண்டே இருக்கிறார்கள்? அப்படி என்ன ஆபத்து, மர்மம் எல்லாம் அங்கே இருக்கும்?"

"என்ன மனோ! அதற்குள்ளே உனக்குப் பயம் வந்துவிட்டதா? அப்படியானால் திரும்பிப் போய் விடலாமா?" என்று பரிகாசமாகக் கேட்டான் ராகவன். "முன் வைத்த காலைப் பின் வைப்பவன் இந்த மனோகரன் அல்ல. தெரியுமா?

நீயும் ஹநுமந்த ராவும் துணையாக இருக்கும்வரை நான் ஏன் கலங்க வேண்டும்?'' மனோகரன் சற்று ஆவேசமாகப் பேசினான். ''உன்னை எனக்குத் தெரியாதா, மனோ! இருந்தாலும் உன் மனம் எப்படியிருக்கிறது என்று பார்க்கத்தான் அப்படிச் சொன்னேன். இருந்தாலும் நாம் எப்போதும் ஆபத்துக்களை எதிர்நோக்கியே இருக்கவேண்டும் என்று நினைக்கிறேன்'' என்றான் ராகவன்.

## 4

மஞ்சள் பங்களாவின் வெளி வாசலில் நின்றபடியே ஒரு முறை மனோகரனும் ராகவனும் அதைக் கவனித்தார்கள். பரந்து விரிந்த தோட்டத்தின் நடுவே ஓங்கி உயர்ந்து நின்றது அந்தப் பங்களா. காலைச் சூரியனின் பொற் கிரணங்கள் பட்டு அதன் மஞ்சள் வர்ணம் தங்கத்தைப் போல் ஜ்வலித்தது. அதன் எடுப்பான கம்பீரத் தோற்றம் மனத்தைக் கவருவதாகவே இருந்தது. பங்களாவின் முன் தோட்டத்திலே அழகிய கிருஷ்ணன் சிலை ஒன்று, குழலூதும் பாவத்தில் அமைக்கப்பட்டிருந்தது. தோட்டத்தைச் சுற்றிலும் பலவகை மரங்களும் புஷ்பச் செடிகளும் நிறைந்து பச்சைப் பசேலென்று கண்களுக்குக் குளிர்ச்சியை அளித்தன. 'கண்களைக் கவரும் அழகான இடந்தான். ஆனால் கருத்தை மறைக்கும் மர்மங்கள் அல்லவா இங்கே நிறைந்திருக்கின்றன! அழகிலே எப்போதும் ஆபத்தும் கலந்துதான் இருக்கும் போலும்' என்று நினைத்தான் மனோகர். பங்களாவிற்குச் சற்றுத் தூரத்தில் சாலைக்கப்பால் தெரிந்த ஏரியில் நீர் நிறைந்து அலை மோதிக் கொண்டிருந்ததைப் போலவே மனோகரின் மனத்திலும் எண்ண அலைகள் மோதின. வளைந்து வளைந்து சென்ற பாதையிலே போய் இருவரும் பங்களாவின் வாசற் கதவை அடைந்தார்கள். அங்கே பொருத்தப் பட்டிருந்த 'காலிங் பெல்'லின் விசையை அமுக்கினான் ராகவன். பதில் ஒன்றும் வரவில்லை. மீண்டும் அமுக்கியும் ஒருவரும் கதவைத் திறக்காமல் போகவே அலுப்படைந்த ராகவன், ''என்ன மனோ! இந்த வீட்டிலே மனிதர்கள் இருக்கிறார்களா' இல்லையா? நாம் வந்து கால் மணிக்கு மேலாகியும் ஒரு ஈ, காக்கைகூடத் தலை காட்டவில்லையே'' என்றான்.

''மனிதர்கள் இல்லாவிட்டால் கதவு வெளிப்பக்கமல்லவா பூட்டியிருக்கும்? இரு; இன்னும் சற்று நேரம் பார்ப்போம்'' என்றான் மனோகரன்.

அவன் வாய் மூடு முன்பாக, ''யாரது?'' என்ற அதிகாரக் குரல் ஒன்று கேட்டது. அதைத் தொடர்ந்து தாழ்ப்பாளைத் திறக்கும் சத்தம்; ஒரு கதவை மட்டும் திறந்துகொண்டு ஒரு மனிதன் வெளியே வந்தான். கட்டுமஸ்தான உடல்; கருகருவென்று வளர்ந்திருந்த மீசை அவன் முகத்தைக் கடுமையாகக் காட்டியது. உடலோடு ஒட்டினாற்போல் ஒரு பனியன் போட்டிருந்தான். தலையிலே பெரிய முண்டாசு. கழுகு மூக்குடன் கூடிய அவன் வந்த வேகத்துடன், ''யாரையா அது? இதென்ன சத்திரமா, சாவடியா? யாரைக் கேட்டுக்கொண்டு உள்ளே வந்தீங்க? போங்க ஐயா வெளியே?'' என்று இடி ஓசை போன்ற குரலில் உறுமினான்.

''ஏய்! கொஞ்சம் நாக்கை அடக்கிப் பேசு! நாங்க ஒண்ணும் தெருவிலே போகிறவங்க இல்லை. இந்த வீட்டுக்காரர் சுப்பிரமணிய முதலியாரின் பேரர் இவர். அவர் வரச் சொல்லித்தான் நாங்கள் வந்திருக்கோம். அவர் எங்கே?'' என்று அதட்டும் குரலில் கேட்டான் ராகவன்.

''நீங்க அவர் பேரன்னு இங்கே யாருக்குத் தெரியும்?'' என்று முணுமுணுத்த அவன், ''கொஞ்சம் இருங்க'' என்று சொல்லிவிட்டு உள்ளே சென்றான். சில நிமிஷங்களிலே அந்த ஆளும் இன்னொரு மனிதரும் வந்தார்கள். ''இவர்தானே! சரி, நீ போய் உன் வேலையைக் கவனி, முருகா!'' என்று அவனை அனுப்பினார் அந்த மனிதர். முருகன் உள்ளே போகும்



போது ஒரு நிமிஷம் நின்று அவர்கள் இருவரையும் உற்று நோக்கினான். பிறகு வேகமாகத் திரும்பி உள்ளே போய்விட்டான். அவன் பார்வை எதையோ அவன் சொல்ல விரும்புகிறான் என்று உணர்த்தியது.

''குட்மார்னிங் மிஸ்டர் மனோகரன்! வருவதற்கு முன் ஒரு லெட்டர் போட்டிருந்தால், நானே ஸ்டேஷனுக்கு வந்திருப்பேனே. அந்தக் கடிதத்தைப் பார்த்துவிட்டும்..'' என்று ஆரம்பித்தவர் சட்டென்று நாக்கை இழுத்துக்கொண்டு, ''நீங்கள் உடனே வருவீர்களோ மாட்டீர்களோ என்று நான் மிகவும் கவலைப்பட்டுக்கொண்டிருந்தேன். இவ்வளவையும் நீங்கள் வரும்வரையில் பத்திரமாக வைத்திருக்க வேண்டுமே என்ற ஒரே கவலைதான் எனக்கு. இப்போது ஒரு பெரிய சுமையைக் கீழே இறக்கிவிட்டது போன்ற நிம்மதி எனக்கு ஏற்பட்டிருக்கிறது. அடாடா! நான் யார் என்று சொல்லாமலே பேசிக்கொண்டு போகிறேனே. நான்தான் உங்கள் சிற்றப்பாவின் உதவியாளன். எல்லாரும் என்னை மானேஜர் சந்தானம் என்று சொல்லுவார்கள். உள்ளே வாருங்கள்'' என்று முன்னே சென்றார். அவரைத் தொடர்ந்து மனோகரனும் ராகவனும் சென்றார்கள்.

''கடைசிக் காலத்தில் சாம்பசிவம் உங்களைப்பற்றி ரொம்பச் சொல்லுவார். உங்களையெல்லாம் அழைத்து வந்து, கூடவே வைத்துக்கொள்ள வேண்டும் என்றுகூடச் சொல்லுவார். ஆனால் விஷயம் வேறுவிதமாகி விட்டது. என்ன செய்யலாம்!'' சந்தானம் ஒரு பெருமூச்சு விட்டார். அவர் முகம் அளவு கடந்த வருத்தத்தை வெளியிட்டது. கண்களின் கோடியில் இரண்டு கண்ணீர்த் துளிகூட துளித்து நின்றது. ஒரே நிமிஷத்தில் சந்தானம் சமாளித்துக் கொண்டு விட்டார். ''உங்களுக்கு விவரங்கள் எல்லாம் பிடிபடுமட்டும் இருந்து உதவி செய்யும்படி எனக்கு உத்தரவு. அதையும் நிறைவேற்றி விட்டால்தான் எனக்குத் திருப்தி'' என்றார் மீண்டும்.

மனோகருக்கு அவர் பேசியவையெல்லாம் காதில் ஏறவில்லை. 'அந்தக் கடிதத்தைப் பார்த்துவிட்டு என்று சொன்னாரே, அது எந்தக் கடிதத்தைப்பற்றி?' என்று அவன் மண்டையைப் போட்டுக் குழப்பிக் கொண்டான். 'ஒருவேளை அந்த எச்சரிக்கைக் கடிதம்பற்றி இவருக்குத் தெரிந்திருக்குமோ? அதைத்தான் குறிப்பிட்டாரோ? அவரையேதான் கேட்டுவிடலாமே' என்று தீர்மானித்த மனோகரன், சந்தானம் பேச்சை நிறுத்தியதும், ''அந்தக் கடிதத்தைப் பார்த்துவிட்டு என்று ஏதோ சொன்னீர்களே, எந்தக் கடிதம்?'' என்று கேட்டான். சந்தானம் ஒரு கணம் திடுக்கிட்டார். ஏதோ சொல்லத் தகாததைச் சொல்லிவிட்டோம் என்று

எண்ணி அவர் முகம் லேசாகச் சுருங்கிற்று. ஒரே ஒரு கணம்தான். அடுத்த கணம் மீண்டும் அவர் முகத்தில் அந்தப் புன்னகை தவழ்ந்தது. "அதுவா! அது வந்து வக்கீல் சிவசங்கரன் எங்கேயோ வெளியூர் போகப் போவதாகவும், அதனால் சில நாட்கள் கழித்து வரும்படி எழுதப்போவதாகவும் சொன்னார். அதைத்தான் சொன்னேன்" என்றார் அவர். ஆனால் என்னதான் முயன்றாலும் குரலில் ஏற்பட்ட படபடப்பை மறைக்க அவரால் முடியவில்லை என்பதை மனோகர் கவனிக்கத் தவறவில்லை. அர்த்தம் நிறைந்த பார்வை பார்த்தான் ராகவனை. அவனும் அதற்குப் பதில் சொல்வதுபோல் கண்களைச் சிமிட்டினான். "அடாடா, நீங்கள் வந்து வெகுநேரம் ஆகிவிட்டது. இன்னும் ஆகாரம் ஒன்றும் சாப்பிடவில்லையே. கொல்லைப்புறம் வெந்நீர் அறை இருக்கிறது. குளித்து ஏதாவது ஆகாரம் சாப்பிடுங்கள் முதலில். பிறகு தாத்தாவைப் பார்க்கலாம். டேய் முருகா! இவர்களுக்கு வேண்டியதைக் கவனி!" என்று உத்தரவிட்டு விட்டு நகர்ந்தார் சந்தானம்.

## 5


முருகன் பின்தொடர மனோகரனும் ராகவனும் பல கூடங்களையும் வராந்தாக்களையும் கடந்து மேலே சென்றார்கள். இரண்டு மாடிப் படிகளைக் கடந்து அந்தக் கோடி அறையை அடைவதற்குள் மனோகருக்கும் ராகவனுக்கும் கால்களெல்லாம் வலியெடுத்து விட்டன. அந்த விசாலமான அறையின் ஒரு மூலையில் போடப்பட்டிருந்த கட்டிலில் படுத்திருந்தார் ஒரு கிழவர். அறையின் வாசற்படியில் நின்றிருந்த நர்ஸ் அவர்கள் இருவரையும் ஏற இறங்க விழித்துவிட்டு, "யார் இவர்கள், முருகா?" என்று கேட்டாள். "இவங்கதான் இந்த ஐயாவுடைய பேரராம். அவரைப் பார்க்க வந்திருக்காங்க. மானேஜர் ஐயா இட்டுக்கினு போவச் சொன்னாரு" என்றான் முருகன்.

"ஓஹோ! புது யஜமானா?" என்று கேலியுடன் கேட்ட அவள், மனோகரனைப் பார்த்து, "மிஸ்டர்! உங்கள் தாத்தாவின் மனமும் உடலும் மிகவும் தளர்ந்திருக்கின்றன. யாரும் அவருடன் ஐந்து நிமிஷங்களுக்குமேல் பேசக்கூடாதென்று டாக்டர் உத்தரவிட்டிருக்கிறார். மேலும் இப்போது உங்களைக் கண்டதும் சந்தோஷ அதிர்ச்சி ஏற்பட்டாலும் ஏற்படும். ஆகையால்.." என்று பாதியில் பேச்சை நிறுத்தினாள் அவள். "அதற்கென்ன! நாங்கள் இரண்டே நிமிஷத்தில் அவரைப் பார்த்துவிட்டுப் போய் விடுகிறோம்" என்று சொல்லிக்கொண்டே அவளைத் தாண்டி உள்ளே நுழைந்தான் மனோகர். அவன் பின்னேயே நுழைந்த ராகவன் அவன் கரத்தைக் கிள்ளி 'காவல்' என்று முணுமுணுத்தான். 'சும்மாயிரு' என்னும் பாவனையில் ராகவனின் காலை அமுக்கினான் மனோகர்.

வற்றி உலர்ந்து சருகுபோலிருந்த அவர் உடலையும், குழி விழுந்த கண்களையும், அசைவற்ற ஜடம் போல அவர் படுத்துக் கிடந்த நிலையையும் கண்ட மனோகருக்குப் பரிதாபமாக இருந்தது. மெள்ள அவர் நெற்றியில் கை வைத்துப் பார்த்தான். அவன் கை பட்டதும் கண் விழித்த அவர், "யாரு! மனோகரா! அப்பா! நீ வருவாயோ, மாட்டாயோ என்று ரொம்பக் கவலைப்பட்டுக்கொண்டிருந்தேன். கடைசியிலாவது உன்னைப் பார்க்கக் கொடுத்து வைத்திருந்தேனே. உன் அப்பா என்னோடு சண்டை போட்டுக்கொண்டு போகும்போது உனக்கு நாலு வயசுதான் இருக்கும். எவ்வளவு வளர்ந்து விட்டாய்!" — உணர்ச்சி மிகுதியால் அவர் குரல் தடைப்பட்டது. சற்றுப் பொறுத்து மறுபடியும் பேசத் தொடங்கினார். "நீ எப்படியும் வருவாய் என்று என் மனம் மட்டும் சொல்லிக்கொண்டேயிருந்தது. இனிமேல் இந்தச் சொத்துக்களெல்லாம் உன்னுடையதுதான். எங்கள் காலமெல்லாம் ஆகிவிட்டது. நம் குடும்பத்துக்கு



நல்ல பெயர் உன்னுல்தான் உண்டாக வேண்டும். மனேகரா! நீ நன்ருக இருக்க வேண்டுமென்பது தான் என் ஆசை.''— உணர்ச்சி மிகுதியால் மறுபடியும் அவர் பேச்சுத் தடைபட்டது. ''அலட்டிக் கொள்ளாதீர்கள், தாத்தா. உங்கள் உடம்பு சொஸ்தமானவுடன் நிறையப் பேசினுல் போயிற்று'' என்று வாத்ஸல்யத்துடன் கூறினுன் மனேகர். ''இல்லே மனேகர்! இனிமேல் உடம்பு எங்கே எனக்கு நன்ருக ஆகப்போகிறது? என் நம்பிக்கைஎல்லாம் உன்மேல்தான் இருக்கிறது. நீதான் இந்தச் சொத்துக்களேக் காப்பாற்றிப் பெருக்கிக்கொள்ள வேண்டும். சொத்துக்களேப் பற்றிய விவரங்கள் அடங்கிய தஸ்தாவேஜுகள், நம் வக்கீல் சிவசங்கரனிடம் இருக்கின்றன. அதை..'' என்று அவர் சொல்லும்போது கலகலவென்று சாவிக் கொத்து குலுங்கும் ஓசையும் அதைத் தொடர்ந்து சாவிக் கொத்து கீழே விழும் ஓசையும் கேட்டன. கிழவர் சட்டென்று பேச்சை நிறுத்தினுர். கண்களே மிரள மிரள விழித்தார். பிறகு அறையின் ஒரு மூலேயைப் பார்த்து,''ஐயோ, பிசாசு! பிசாசு!! வேண்டாம்; அதைத் திறக்காதீர்கள். ஐயோ! அவன்..அவன் வந்து விடுவான். பிசாசு!'' என்று கிழவர் ஆவேசமாகக் கத்தினுர். அவர் முகம் கறுத்து விகாரமடைந்தது. 'புஸ் புஸ்' என்று மூச்சு விட்டார். கண்கள் லேசாகப் பாதி மூடிக்கொண்டன. சப்தம் வந்த திசையை நோக்கினுன் மனேகர். ஜன்னல் வழியே வெளியே பார்த்துக்கொண் டிருந்த நர்ஸ் குனிந்து கீழே கிடந்த சாவிக் கொத்தை எடுத்துக்கொண்டு கட்டிலே நோக்கி வந்து கொண்டிருந்தாள். மெல்லிய குரலில், ''மிஸ்டர்! மிஸ்டர்! அவருக்கு நினைவு தப்பியிருக்கிறது. சீக்கிரம் கீழே போய் டாக்டரை வரவழைக்கச் சொல்லுங்கள்'' என்ருள். ''இதோ போகிறேன்'' என்று சொல்லிவிட்டு வெளியே வந்தான் மனேகர். (தொடரும்)




# தமிழ்க்கொடி

ஆடத் தெரியாத மயிலைப் போல, பாடத் தெரியாத குயிலைப்போல, பேசத் தெரியாத கிளியைப்போல, நடக்கத் தெரியாத அன்னத்தைப்போல, சிந்திக்கத் தெரியாத மன்னன் ஒருவன் இருந்தான். அவன், ராஜகுருவான வேதநந்தியின் பேச்சை மட்டும் தான் கேட்பான்; கேட்டதைச் சிந்தித்துப் பார்க்கமாட்டான். ராஜகுருவின் வாக்கை, தேவ வாக்காக மதித்து வந்தான்.

அந்த மன்னனுக்கு ஒரு மகள் இருந்தாள். அவள் அழகில் சிறந்தவள். அறிவில் பரந்தவள். பண்பில் விரிந்தவள். அவள் பெயர் தமிழ்க்கொடி. அவளின் ஆடலழகையும், பாடலழகையும், பேச்சழகையும், நடையழகையும் கண்டால் - கேட்டால் - மயிலும் குயிலும் கிளியும் அன்னமும் நாணித் தலை குனியும்! அவளின் முக அழகைக் கண்டால், செந்தாமரை இதழ் குவித்துக் கொள்ளும்! வெண்ணிலா கருமேகங்களுக்குள் புகுந்து ஒளியும்!

இத்தனைச் சிறப்பழகும் ஒருங்கே வாய்க்கப்பெற்ற செந்தமிழ் அழகி தமிழ்க்கொடிக்கு, அவள் தந்தை கூடிய விரைவில் மணம் முடிக்க விருப்பம் கொண்டான்.

சேற்றிலே செந்தாமரை பிறப்பதுபோல - சிப்பியிலே முத்து ஜனிப்பதுபோல - அந்த மதிகெட்ட மன்னனுக்கு மகளாய் உதித்திருக்கும் தமிழ்க்கொடியை இந்தக் கிழ ராஜகுருவுக்குக் கல்யாணம் செய்துகொள்ள மிகவும் ஆசையாக இருந்தது. தன் ஆசை நிறைவேறும் காலத்தை அவன் வெகு ஆவலுடன் எதிர்பார்த்துக்கொண்டிருந்தான்.

ஒரு நாள் மன்னன், வேதநந்தியை அழைத்து, தம் செல்வக் களஞ்சியமான தமிழ்க்கொடியின் ஜாதக பலாபலன்களை நன்கறிந்து கூறும்படி வேண்டினான். வேதநந்தி, ஜாதகக் குறிப்பைப் பார்த்தான். அரசனுக்கு விளங்காத மொழியில் என்னென்னவோ முணுமுணுத்தான். ஏதேதோ கணக்கெல்லாம் போட்டுப் பார்த்தான். கடைசியில் எதையோ தெரிந்துகொண்டவன்போல முகத்தைச் சுளித்தவாறு வருத்தத்துடன் சொன்னான்: ''பிரபோ!.. ஜாதகக் குறிப்பில் கண்டு தேர்ந்த உண்மையை ஒளிக்காமல் சொல்கிறேன். தங்களின் விருப்பம்போல் தங்களின் செல்வக் குமாரத்தியாகிய சௌபாக்கியவதி தமிழ்க்

கொடிக்குத் திருமணம் செய்ய லாம். ஆனல்..''

வேதநந்தி, ஒரு கணம் தயங் கினன்; மறு கணம் தொண்டை யைக் கனைத்துக்கொண்டான்.

''என்ன, சொல்லுங்கள், சுவாமி!'' என்று துள்ளிப் பதைத் துக் கேட்டான் மன்னன்.

''மன்ன!..தமிழ்க் கொடிக்குத் திருமணம் முடிக்கலாம்; ஆனல்.. மணம் முடித்த மறுநாளே தாங் கள் சிவலோக பதவியை - ஆம், நிச்சயம் இறந்துவிடுவீர்கள்!''

வேதநந்தியின் இந்தச் சூழ்ச்சி மொழியைக் கேட்டவுடனே, 'எப் பொருள் யார் யார் வாய்க் கேட் பினும் அப் பொருள் மெய்ப் பொருள் காண்ப தறிவு' என்னும் குறளறியாக் குறுமதி படைத்த மன்னனுக்குத் திகீர் என்றது!

''தாங்கள் இறந்த மறு தினமே உங்கள் சாம்ராஜ்யத்தை வேற்றரசன் அபகரித்துக்கொள் வான்! இப்படியாக நான் கூற வில்லை; ஜாதகம் கூறுகிறது!..'' என்று இன்னுமொரு பெரும் புளுகைச் சொன்னன் வேதநந்தி!

அரசனுக்கு ஆவி துடித்தது. உடலெல்லாம் 'கிடு கிடு'வென ஆடியது! 'குப், குப்' என்று வேர்வையாய் வேர்த்துக் கொட்டி யது! ''ஐயோ!..எவ்வளவு பெரிய சாம்ராஜ்யம்!..எத்தனை கோடிச் செல்வங்கள்!..பிரபோ! சுவாமீ! தாங்கள்தான் என்னைக் காத்தருள வேண்டும். என் சாம்ராஜ்யத்தைக் காப்பாற்றித் தாருங்கள்! என் செல்வங்களைப் பாதுகாத்துக் கொடுங்கள்!'' என்று ராஜகுரு வேதநந்தியின் கால்களைப் பிடித்துக் கொண்டு புலம்பினன். கெஞ்சிக் கதறினன்!

வேதநந்தி நெஞ்சுக்குள் சிரித்துக் கொண்டான். 'மன்னன் தன் சூழ்ச்சிக் கண்ணியில் மிகச் சுலப மாகச் சிக்கிக்கொண்டு விட்டான். நம்முடைய ஆசை நிறைவேறினற் போலத்தான்!' என்று எண்ணி உள்ளம் பூரித்துப் போனன். தன் காலடியில் விழுந்து கிடக்கும் மன்னனை அவன், இரு கைகளாலும் பிடித்துத் தூக்கி நிறுத்தினன். நீர் வழியும் அவன் கண்களைத் தம் பட்டு ஆடையால் மெல்லத் துடைத்தவாறே சொன்னன்: ''அரசே!..உம்மை, உம் ராஜ் யத்தை, செல்வத்தை யாவையும் காப்பாற்றித் தர வழி இருக் கிறது..''

''என்ன வழி..?''—வேதநந்தி யின் கரங்களைப் பிடித்துக்கொண்டு வினவினன் மன்னன்.

''நான் சொன்னல்..''

''தாங்கள் சொல்லும் வழியே நான் உய்யும் வழி!''

''உம் மகளுக்குத் திருமணம் செய்ய வேண்டாம்!''

''தங்கள் கட்டளை: என் பாக் கியம்!''

''திருமணம் முடிக்கப் பெருத வளை ராஜ்யத்திலேயே வைத்துக் கொண்டிருந்தால், சில நாட்களுக் குள் உமக்குத் தீராப் பகை உண்டாகிவிடும்!''

''ஐயோ!..'' என்று நடுங் கினன் மன்னன்.

''ஆகவே..உமது மகளை ஒரு பேழையிலிட்டு யாரும் அறியாமல் ஆற்றில் விட்டுவிட வேண்டும்!''





"ஆ!..தாயை இழந்த என் செல்வத்தை..."—மேலே பேச முடியாமல் மன்னன் பாசத்தால் கதறினன்.

"உம்மையும், உம் சாம்ராஜ்யத்தையும் காப்பாற்றிக் கொள்ள வேண்டுமென்ருல்..நான் கூறிய இந்த ஒரே வழியின்படி நடக்கத்தான் வேண்டும்!" அழுத்தமாய்க் கூறினன் வேதநந்தி.

மன்னன் மயங்கிவிட்டான். வேதநந்தியின் சூழ்ச்சிக்கு அடிமைப் பட்டுவிட்டான். உயிரின் மீது-சாம்ராஜ்யத்தின் மீது - செல்வத்தின் மீது உள்ள ஆசையால், ரத்த பாசத்தையும் மீறிச் செய்துவிட ஒப்புக்கொண்டான், அந்த அறிவற்ற மன்னன்!

அன்று நள்ளிரவில்—

மயக்க மருந்து ஊட்டப் பெற்ற தமிழ்க்கொடியை பேழையில் வைத்து, யாரும் அறியாதவாறு நகரத்தின் எல்லைப்புறத்தில் ஓடும் சந்திரபுரி ஆற்றில் விட்டுவிட்டு, அரண்மனைக்கு வந்தான் மன்னன். பாசம் வந்து மூட, பஞ்சணையில் விழுந்து புரண்டு கதறிக் கதறி அழுதான்!

* * *

**ந**டு நிசி.

நிர்மலமான நீல வானம். 'மினுக் மினுக்' என்று ஜொலிக்கும் நட்சத்திரங்கள். 'குளு குளு' வென்று நிலவு பொழியும் அழகிய முழு நிலா. காணும் இடங்களெல்லாம் கண் குளிரும் இன்பக் காட்சியாக விளங்கியது!..

சக்திக் காட்டு வழியாக ஓடும் சந்திரபுரி ஆற்றங்கரையில், லவணபுரி இளவரசன் பூபாலன் தம் சேனைப் பரிவாரங்களுடன் கூடாரம் போட்டுத் தங்கி யிருந்தான்.

அந்த அழகிய நேரத்தில், இளவரசன் பூபாலனும், அவனது மெய் காப்பாளனை வீரவேலனும் ஆற்றங்கரையில் அமர்ந்து என்னவோ பேசி, குதூகலமாகப்



பொழுதைக் கழித்துக் கொண்டிருந்தார்கள்.

திடீரென்று, ''இளவரசே! இளவரசே!.... அதோ, பாருங்கள்!'' என்று இளவரசனுக்குப் பாதுகாப்பாகச் சற்று தூரத்தில் நின்றுகொண்டிருந்த இரு வீரர்கள், ஆற்றின் நடுவில் எதையோ சுட்டிக் காட்டிக் கூவினார்கள்.

பரபரப்படைந்த இளவரசனும் மெய்க்காப்பாளனும் அந்தப் பக்கம் பார்த்தார்கள்.

''அது என்ன..?''

என்னவோ அது ஓர் அழகிய சித்திரப் பேழை!

மறு விநாடி இரு வீரர்களும் அந்தச் சித்திர பேழையை எடுத்து வந்து பூபாலனிடம் சேர்ப்பித்தனர். இளவரசன் அந்தப் பேழையை மெல்லத் திறந்தான்.

'படீர்!..' என்று பேழையின் மூடியைச் சாடித் திறந்துகொண்டு ''ஆ!..'' என்று வீரிட்டலறியவாறு துள்ளிக் குதித்து வெளிக் கிளம்பினாள், மயக்கம் தெளிந்த தமிழ்க்கொடி!..

இளவரசனும் கூட இருந்தவர்களும் திடுக்கிட்டனர். திகைத்தனர். இவர்கள், முழு நிலவொளியில் பளிங்குப் பதுமையாய்த் திகழும் தமிழ்க்கொடியையும், அவள் இவர்களையும் பார்த்துப் பார்த்து, ஓரிரு விநாடிகள் சிலையாய் நின்றனர்!

இளவரசன், தமிழ்க்கொடியை அன்புடன் விசாரித்தான். தமிழ்க்கொடி, தன் தந்தையின் மதியீனத்தையும், வேதநந்தியின் சூழ்ச்சியையும் சிந்தித்து, ஊகித்துச் சொன்னாள்.

இதைக் கேட்டு, இளவரசன் பூபாலனும் மெய்க்காப்பாளன் வீரவேலனும் சில கணம் மௌனமாயிருந்து என்னவோ ஆலோசித்தார்கள். பிறகு, இளவரசன் தமிழ்க்கொடியைப் புன்னகையுடன் நோக்கி, அவளைத் தன்னுடன் வரும்படி பேரன்புடன் வேண்டினான். அவளும், அவன் விருப்பத்திற்கிணங்கி மெல்லப் புன்னகை புரிந்தாள்.

அப்புறம்—

அதோ..இளவரசனின் உத்தரவுப்படி வீரர்கள் எதையோ கட்டித் தூக்கி வருகிறார்கள்; தமிழ்க்கொடி மிதந்து வந்த சித்திரப் பேழைக்குள் தூக்கி வந்ததைக் கட்டவிழ்த்துப் போட்டு அடைக்கிறார்கள்; மீண்டும், பழையபடி பேழையை ஆற்றில் மிதக்க விடுகிறார்கள். சித்திரப் பேழை மிதந்து சென்றது. அவர்கள் பேழையிலிட்டது என்ன..?


* * *

**பின்னிரவு.**

சக்திக் காட்டுக்குக் கீழ்த் திசையிலுள்ள ராஜபுரியை நோக்கிச் செல்லும் சந்திரபுரி ஆற்றில், சித்திரப் பேழை மெல்ல மெல்ல ஆடியலைந்தவாறு மிதந்து போய்க் கொண்டிருந்தது!

வெகு நேரமாயிற்று.

ராஜபுரி எல்லையில், சந்திரபுரி ஆற்றின் கரையோரமாக ஒரு மறைவான இடத்தில், 'சொட்டு, கொட்டு' என்று கண் விழித்தவாறு கிடந்தான் ராஜகுரு வேதநந்தி. ஆற்றின் மேலண்டைப்



புறமே அவனது சிவந்த விழிகள் பதிந்து கிடந்தன. பேராசை மிகுந்த அவன் உள்ளம், தமிழ்க் கொடியைச் சுமந்த சித்திரப் பேழையை வெகு ஆவலுடன் எதிர் நோக்கித் துடித்துக்கொண்டிருந்தது!

சற்று நேரத்துக்குள்—

பேழையும் வந்தது.

வேதநந்தி ஓடினுன். ஆற்றில் குதித்தான். நீந்திச் சென்றுன். பேழையை எடுத்துக்கொண்டு கரையை அடைந்தான். உடனே, ஒரு நொடியும் தாமதம் செய்யாமல் பேழையைத் தூக்கித் தோள் மீது வைத்துக்கொண்டான். ராஜபுரியைச் சார்ந்த ஒரு கிராமத்தில் தனக்குச் சொந்தமாயுள்ள மாளிகைக்கு ஓடோடியும் வந்தான். பேழையை ஒரு பக்கமாக இறக்கி வைத்தான். ஓடினுன். மாளிகையிலுள்ள தனது பணியாளர்களை வெளியேற்றினுன். எல்லாக் கதவுகளையும் நன்றுகச் சாத்தித் தாளிட்டுக்கொண்டு போனுன்: இதயத்தில் ஆசை கொதிக்க; முகத்தில் ஆனந்தம் குதிக்க, பேழையைத் திறந்தான்—

உடனே—"ஆ!"

இளவரசன் பூபாலனின் யோசனைப்படி, பேழையில் அடைக்கப்பட்டிருந்த அது, குபீரென்று பாய்ந்தது! வேதநந்திமீது தாவிக் குரல் வளையைக் கவ்விப் பிடித்தது! கடித்துக் குதறியது! கிழித்துச் சின்ன பின்னமாக்கியது!

எது—?

பூபாலன் சாமர்த்தியமாக வேட்டையாடி உயிரோடு பிடித்த பயங்கர வேங்கைப் புலி!

சில விநாடிகளுக்குள்,—

'ஆசைக்கு அடிமை ஆகிவிட வேண்டாம். அதன் ஆதிக்கத்தை வெறுத்து ஒதுக்கு. அதைக் கண்டு அஞ்சு! ஏனெனில், ஒருவனை வஞ்சித்துக் கெடுப்பது ஆசை தான்!..' என்னும் திருக்குறளைத் தெரிந்தவன் தான், எனினும் ஆசையினுலே அறிவிழந்த ராஜகுரு வேதநந்தி, வேங்கைப் புலிக்கு விருப்பமான தீனியாய்ப் போனுன்!

**அஞ்சுவ தோரும் அறனே ஒருவனை
வஞ்சிப்ப தோரும் அவா.**

---

## கண்டு பிடி!

(1) நீலாவும் லீலாவும் ஒரே வயதுள்ள சகோதரிகள். ஒரே பெற்றோர்களின் குழந்தைகள்தான். ஆனுல் இரட்டைகள் அல்ல. அப்படியானுல் அவர்கள் யார்?

(2) எந்த விளையாட்டில் பின்னுல் நகர்ந்து சென்று வெற்றி காண முடியும்?

(3) வெகு காலத்து முன்னே ஒரு நாள் ஒரு மனிதன் ஒரு ராஜ சபைக்கு வந்தான். கையிலே ஒரு கண்ணுடி டப்பி இருந்தது. "இது என்ன திரவம்?" என்றுன் அரசன். "அரசே! இது ஒரு புது ரஸாயனம் : இதில் எந்தப் பொருள் பட்டாலும் அந்தப் பொருள் அப்படியே இருந்த இடம் தெரியாமல் மறைந்துவிடும்" என்றுன். அரசன் இதைக் கேட்டதும், "அடேயப்பா! சரியான பொய்!" என்று உடனே சொல்லி விட்டான். அரசனுக்கு இது பொய் என்று எப்படித் தெரிந்தது?

விடைகள்: (1) நீலாவும் லீலாவும் இரட்டையர்கள் அல்ல; ஆனுல் மூவர்கள். அவர்களோடு ஒரே சமயத்தில் பிறந்த இன்னொரு சகோதரி இருக்கிருள்; (2) டக்-ஆஃப்-வார் என்ற கயிறு இழுக்கும் ஆட்டம்; (3) கண்ணுடி டப்பா கரையவில்லையே! அதனுல்தான்.



# பொங்கலெனும் 'தை'ப்பெண்ணே!

என். எஸ். சிதம்பரம்

மழைக்காலம் கழிந்திட்டது!
மார்கழியும் தீர்ந்திட்டது!
தழைக்கின்ற பொங்கலெனும்
'தை'ப்பெண்ணே, வந்திடுவாய்!

பொங்குகின்ற அருள்முகமும்
புன்சிரிப்பும் பொருந்துகின்ற
பொங்கலெனும் 'தை' நங்காய்!
பொலிவுடனே வந்திடுவாய்!

ஒளிகொடுக்கும் சூரியனும்
உயர்திசையாம் வடக்கேகும்
களிப்பினையே சொல்லுகின்ற
கன்னியளே, வந்திடுவாய்!

மங்களத்தைத் தருகின்ற
மஞ்சள்நீர்க் குடமேந்தி
இங்கிதமாய் அழைக்கின்றேன்!
இனிதுடனே வந்திடுவாய்!

தித்திக்கும் தமிழ்பேசும்
திருவாயால் அமிழ்துண்ண
சித்தமிக மகிழ்ந்தேநீ
சீருடனே வந்திடுவாய்!

தீங்கரும்பைப் பிழிந்தெடுத்துத்
தேனுகும் அதன்சாற்றைப்
பாங்காகத் தந்திடுவேன்!
பைங்கொடியே, வந்திடுவாய்!

பானையிலே பொங்குகின்ற
பாலைப்போல் வளம்பொங்க
ஞானக்கண் மேவுகின்ற
நல்லணங்கே, வந்திடுவாய்!

# நிருபர் பகுதி

## போஸ் சிறுவர் சங்க ஆண்டு விழா

சீகாழி: ஜனவரி மாதம் முதல் தேதி தென்பாதி போஸ் சிறுவர் சங்க முதல ஆண்டு விழா உயர்திரு 'வாமனுச்சார்' அவர்கள் தலைமையில் நடைபெற்றது. அவ்வமயம் 'போஸ் சங்கம்' வளர்ச்சியைப் பற்றி அறிக்கை வாசிக்கப்பட்டது. பின்பு வாமனுச்சார் அவர்கள் மேன்மேலும் சங்கம் வளர வேண்டி ஆசிகளையும், உபதேசங்களையும் வழங்கினர். மற்றும் பல பெரியோர்கள் வந்து ஆசி கூறி, மாணவர்களை உற்சாகப் படுத்திப் பேசினர்கள். அன்று இரவு 8 மணிக்கு போஸ் சங்க மாணவர்கள் நடித்த, ஸ்ரீ எஸ். நாராயணசாமி அவர்கள் எழுதிய 'துரோகி' என்னும் நாடகம் நடைபெற்றது. கடைசியில் அனைவருக்கும் இனிப்பு வழங்கப்பட்டது. ஆர். விசுவநாதன். சீகாழி.

## கைவிளாஞ்சேரி இளைஞர் சங்கம்

ஜனவரி: 2. கடந்த எட்டு வருஷ காலமாக, கைவிளாஞ்சேரியில் நடந்து வரும் இளைஞர் சங்கத்தின் தலைவர் உயர்திரு V. சீனிவாசன் அவர்கள் தலைமைப் பதவியை S. நடராஜன் அவர்களிடமும் உயர்திரு V. B. ஈசுவரன் தம் காரியதரிசிப் பதவியை கண்ணன் நிருபர் ஆர். விசுவநாதனிடமும் கொடுத்தார்கள். புது நிர்வாகிகள், மேன்மேலும் சங்கம் வளர்ச்சி அடைய, பல சௌகரியங்கள் செய்வதாயும் எல்லாரையும் ஒத்துழைக்கும்படியும் கேட்டுக்கொண்டார்கள். சங்க ஒன்பதாவது ஆண்டு விழா ஜனவரி 23 - ஆம் நாள் விமரிசையாகக் கொண்டாடுவது என்று எலலாச் சங்க மெம்பர்களும் தீர்மானம் செய்தார்கள்.

ஆர். விசுவநாதன், சீகாழி.

**எங்கள் பகுதி**

## ஒரு குறை

15 - 12 - 55 இதழைக் கண்டு அதிசயித்தேன்! ஆச்சரியப்பட்டேன்! வருந்தினேன். ஏன்? பின்னே அழுகை வராதா, என்ன? இத்தனை நாள் நம்முடன் தன் கஷ்டங்களைச் சொல்லிக்கொண்டு வந்த நம் உற்ற தோழன் மணி மேல் படிப்பு கிடைத்ததனுல், ஒரு நிமிடத்தில் நம்மிடம் விடை பெற்றுக்கொண்டானே! இன்னொரு செய்தி நம்மைத் திகைக்க வைத்தது! எதிர்பாராதவிதமாக நம்மிடம் விடைபெற்றுக்கொண்டான் சோமு. ஆனல் அடுத்த நிமிடமே ஒரு மகிழ்ச்சிகரமான செய்தி காத்திருந்தது. பரிசுத் தொடர்கதையான 'மஞ்சள் பங்களா' ஆரம்பமாகிறது என்று அறிந்து என் உள்ளம் உவகையால் சிறிது விரிந்து பரவியது. கி. வா. ஜ. எழுதும் கவிஞர் வரிசையைக் காணக் கண் துடிக்கிறது. ஆவல் அலை மோதுகிறது. இரண்டாவது பரிசுக் கதையையும் சீக்கிரமே வெளியிடுங்கள். ''விதியின் விளையாட்டு'' ஒப்பற்றதொரு உயர்ந்த கதை. 'கெட்டிக்கார மாணவன்' எழுதிய அரிகிருஷ்ணன் மிகவும் கெட்டிக்காரர்தான். 'மதுராபுரி' மறக்க முடியாததொரு மக்கட் பொக்கிஷம். எங்கள் பகுதி கவிதை எக்ஸலென்ட். சுவை மிக்க பகுதி. அட்டைப் படம் (போட்டோ) ஏ ஒன். அவர் ஸ்டைலாகத்தான் நிற்கிறர்! 'பொய் சொல்லத் தயங்காதே!' தயங்கவில்லை; இதோ விமரிசனம்: புது மாதிரியான கதை. சுருங்கச் சொன்னல் இது ஒருவகையில் உயர்ந்த கதை. துணுக்குகள் பலே ஜோர்! 'பையிலிருந்தது' தற்கால மாணவர்களின் திருட்டுத்தனத்தை நன்கு விளக்குகிறது. ஒரு குறை. அதாவது படத்தொடர்கதை ஏன் இன்னும் ஆரம்பிக்கவில்லை? எப்பொழுதுதான் ஆரம்பிக்கப் போகிறீர்கள்? உங்களுக்கு ஈவு இரக்கம் கொஞ்சமாவது இருக்கிறதா? எங்களைத் தவிக்க விடாமல் சீக்கிரமே ஆரம்பியுங்கள். -சி. பாலசுப்பிரமணியன், ஒரத்தநாடு.

---

EDITED, PRINTED AND PUBLISHED BY N. RAMARATNAM,
AT THE MADRAS LAW JOURNAL PRESS, MADRAS-4,
ASSOCIATE EDITOR: R. VENKATARAMAN.

# கண்ணன் கிளைக் கழகம்

திருநெல்வேலி ஜங்ஷன்
உபதலைவர்: கே. வி. ராமன்
காரியதரிசி: எஸ். ஏ. கிருஷ்ணன்
பொருளாளர்: ஆர். ரங்கன்

பத்துப் பேர் கொண்ட செயற்குழு ஒன்று அமைக்கப் பட்டுள்ளது. 'மணி' என்ற கையெழுத்துப் பத்திரிகை நடத்தப்படுகிறது. கதை, கட்டுரைகள், கே. வி. ராமன், 11. வரதராஜபுரம் என்ற விலாசத்திற்கு அனுப்பலாம்.

குகை-சேலம்
உபதலைவர்: எஸ். எஸ். நிவாஸ்
காரியதரிசி: சுப்பிரமணியன்
பொக்கிஷதார்: எஸ். ஸ்ரீநிவாஸன்

செயற்குழு ஒன்று அமைக்கப்பட்டுள்ளது. 'அன்பு' என்னும் கையெழுத்துப் பத்திரிகை நடத்தப்படுகிறது. கதைகளை எஸ். எஸ். நிவாஸ், 100-மூங்கப்பாடித் தெரு என்ற விலாசத்துக்கு அனுப்பலாம்.

# பேனா நண்பர்கள்

1. எஸ். இப்ருஹிம், 18. செல்லா பாஷா தெரு, ஈரோடு.

2. ஆர். டி. வரதராஜன், S/o ஆர். தொட்டண்ண செட்டி, விஜய விநாயகர் கோயில் தெரு, இளம்பிள்ளை போஸ்டு, சேலம் ஜில்லா.

3. ஆர். வரதராஜுலு, 2/4, தர்மராஜா கோயில் தெரு, வேப்பேரி, சென்னை-7.

4. சு. தமிழ்[illegible]பன், ஐந்தாம் படிவம், ஆறும் பிரிவு, தூய மரியன்னை உயர்நிலைப் பள்ளி, மதுரை.

5. டி. எஸ். சங்கரன், 108. வடக்கு வீதி. திருவையாறு.

6. பி. பால்ராஜ், 187/4 தனுக்கோடியாபுரம் பிள்ளையார்கோயில் தெரு, கோயில்பட்டி.

7. என். ரங்கநாதன், 48/22. செயிண்டு மேரீஸ் ரோடு, சம்பந்த முதலியார் கார்டன், மந்தைவெளி, சென்னை-28.

8. ப. வேங்கடசாமி, 4. காமாட்சியம்மன் கோயில் தெரு, திருவண்ணாமலை. (வ. ஆ.)

9. வி. தனசேகரன், 30. திருவேங்கட முதலித் தெரு, பெரியமேட், சென்னை-3.

10. வ. நாகராஜன், C/o வ. கேசவன், 32. 2-ஆவது பிள்ளையார் கோயில் தெரு, குகை, சேலம்.

11. ஜி. லட்சுமணன், 242, ஒஹன் ரோடு, சிங்கப்பூர்-15.

12. ஜி. எல். பாலு, 481. கேலாங்ரோடு, சிங்கப்பூர்-14.

13. கே. முனிசாமி, 169. நியூ மார்க்கெட் ரோடு, சிங்கப்பூர்-1.

14. ஆர். கே. மூர்த்தி, C/o எஸ். சுப்பிரமணிய ஐயர், கணேசர் வீடு, மாமா ரோடு, தரம்பேட், நாகபுரி.

15. வி. மகாலிங்கம், C/o வி. வேங்கடராமன் B. A., 6/285, சியான்ரோடு, சியான் (Sion), பம்பாய்-22.

16. டி. ஜே. நடராஜன், C/o T. S. ஜகந்நாதன், 3/B சரோஜினி தெரு, தல்லாகுளம், மதுரை.

# செய்திகள்

## டில்லியில் கவியரங்கம்

இந்தியக் குடியரசு தினத்தன்று (26-1-1956) புது டில்லியில் தேசீயக் கவிஞர்கள் அரங்கு ஒன்று நடைபெற்றது. 14 பாஷைகளைச் சேர்ந்த கவிஞர்கள் இதில் கலந்துகொண்டார்கள். சாகித்திய அகாடமித் தலைவர் நேரு இந்த அரங்கை ஆரம்பித்து வைத்தார். தமிழ் நாட்டிலிருந்து கவிஞர் ஸ்ரீ ச. து. சுப்பிரமணிய யோக்கியார் அவர்கள் இதில் கலந்துகொண்டார்.

## நேதாஜி சுபாஷ் போஸ்

ஜனவரி 23-ஆம் தேதி வங்காளத்தின் சிங்கம் எனப் பெயர் பெற்ற நேதாஜி சுபாஷ் போஸ் பிறந்த தினமாகும். அந்த நாளை முன்னிட்டு அகில இந்திய ரேடியோ ஒரு விசேஷ நிகழ்ச்சி ஒன்றை நாடு பூராவும் ஒலிபரப்பியது.

## குடியரசு தினம்

இந்தியா குடியரசாக ஆன நாள் 1950-ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 26-ஆம் தேதி. ஒவ்வோர் ஆண்டும் ஜனவரி மாதம் 26-ஆம் நாளை நாம் குடியரசு நாளாகக் கொண்டாடி வருகிறோம். கண்ணன் கழகத்தைச் சேர்ந்த அங்கத்தினர்களும், கிளைக் கழகங்களும் பல இடங்களில் இந்த நாளை விமரிசையாகக் கொண்டாடினார்கள். இந்திய தேசீயக் கொடியை ஏற்றுவித்து, கூட்டங்களும் நடத்தினார்கள்.

## புதுச்சேரியிலும் பழுப்பு நிலக்கரி

தென் ஆர்க்காடு ஜில்லாவிலுள்ள நெய்வேலி என்ற இடத்தில் பழுப்பு நிலக்கரி வெட்டி எடுப்பதற்கான வேலைகள் நடைபெற்று வருகின்றன. புதுச்சேரியைச் சேர்ந்த சில இடங்களிலும் பழுப்பு நிலக்கரி கிடைக்கிறதாம். வருஷத்துக்குச் சுமார் ஒன்றரை லட்சம் டன் நிலக்கரி இங்கே கிடைக்கக்கூடும் என்று பரிசோதித்துப் பார்த்ததில் தெரிய வந்ததாம். விரைவில் தோண்டி எடுப்பதற்கான ஏற்பாடுகளை இந்திய சர்க்கார் கவனிப்பார்கள் என்று சொல்கிறார்கள்.

## எகிப்து குடியரசு நாடாக ஆகிறது

எகிப்து வெகு காலம் முடியரசு நாடாக இருந்துவந்தது. 1953-இல் அந்த நாட்டின் மன்னர் பரூக் பதவியிலிருந்து விலக்கப்பட்டார். அதிலிருந்து இதுவரையில் அங்கே ராணுவ ஆட்சியே நடைபெற்று வந்தது. ஜூன் மாதம் 23-ஆம் தேதி முதல் அது குடியரசு நாடாகிவிடும். இந்தியாவைப்போல் அங்கும் ஒரு ஜனாதிபதி நாட்டின் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்படுவார். வயது வந்த எல்லா ஆண் பெண்களுக்கும் ஓட்டுரிமை உண்டு. எகிப்தின் அரசாங்க மதம் இஸ்லாம். ராஜாங்க மொழி அரபு.

## பச்சைக் குரங்குகள்

மிருகங்கள் விற்பனை செய்யும் ஜெர்மன் வியாபாரி ஒருவர் மைசூர் மிருகக்காட்சி சாலைக்கு இரண்டு பச்சைக் குரங்குகளும் இரண்டு காண்டாமிருகங்களும் அனுப்பியிருக்கிறார். சென்னைக் காட்சி சாலைக்கு இரண்டு வெண்தொண்டைக் குரங்குகளும், ஒன்பது வகையான பாம்புகளும் ஒரு நெருப்புக் கோழியும் அனுப்பியிருக்கிறார். எல்லாம் சென்னைத் துறைமுகத்துக்குக் கப்பலில் வந்து சேர்ந்தன.

## காந்தி ஞாபகார்த்த மண்டபம்

கிண்டி ராஜபவனத்தில் கட்டப்பட்டிருக்கும் காந்தி ஞாபகார்த்த மண்டபம் ஜனவரி 27-ஆம் தேதி ராஜாஜி அவர்களால் திறந்து வைக்கப்பட்டது. பொதுமக்கள் திரளாக வந்திருந்தனர்.

கண்ணன்

# பொருளடக்கம்

மலர்: 7 இதழ்: 3

1 - 2 - '56


| | |
|---|---|
| குழந்தைகளே! பக்கம் | 2 |
| தியாகமூர்த்தி .. | 3 |
| மரியாதை .. | 4 |
| ஸி. ஐ. டி. சிங்காரம் .. | 5 |
| பிசிர் ஆந்தையார் .. | 10 |
| பொங்கல் படி .. | 13 |
| காற்றடிக்குது.. .. | 18 |
| செங்கல்பட்டா, இது? .. | 19 |
| பரிசு .. | 21 |
| கண்டி நகர் .. | 26 |
| எங்கள் பகுதி .. | 29 |
| பலராமன் தம்பி .. | 30 |
| மஞ்சள் பங்களா .. | 32 |
| சுபாஷ் போஸ் .. | 37 |
| கண்ணா, வா! .. | 40 |

அட்டைப் படம்- (போட்டோ) ஸ்ரீதர்

செய்திகள் - 2 - அட்டை.

கிளைக் கழகம் -3 - அட்டை


வருஷ சந்தா (தீபாவளி மலர் உள்பட) ரூ. 4/-

கலைமகள், கண்ணன், மஞ்சரி மூன்றும் சேர்ந்த குடும்பச் சந்தா (மலர்கள் உள்பட) ரூ. 14/4

---

கதைகளில் வரும் பெயர்கள் யாவும் கற்பனைப் பெயர்களே.

## அருமையான சம்பவம்

ஆர்க்காட்டிலிருந்து ராணிப் பேட்டைக்கு நான் ஒரு நாள் போக நேர்ந்தது. பஸ்ஸில் சென்றால் நாலணா. ஜட்காவில் சென்றால் இரண்டணாதான். நான் ஜட்காவிலேயே செல்ல எண்ணினேன்.

அதற்கு இசைவாக அப்போது ஒரு ஜட்காவாலா, ''ஒரு ஆள்! ஒரு ஆள்!'' என்று எனக்கு எதிரில் கத்தினான். ஒரு வண்டிக்குள் நான்கு பேர் உட்காரலாம். வண்டியில் மூன்றுபேரே இருந்தார்கள். ஆகையால் நான் அந்த வண்டியில் போய் ஏறிக்கொண்டேன்.

நான் ஏறியதுதான் தாமதம். உடனே வண்டியிலிருந்து ஓர் ஆள் அவசரமாக இறங்கினான். மறுபடியும் அந்த ஜட்காவண்டிக்காரன், ''ஒரு ஆள்! ஒரு ஆள்'' என்று கத்தத் தொடங்கினான். 'ஒரு ஆள் தானே தேவை? இந்த வண்டி சீக்கிரமாகக் கிளம்பும்' என்று எண்ணி ஒருவர் வந்து ஏறினார்.

அவர் ஏறியதும் வண்டியிலிருந்து மற்றோர் ஆள் இறங்கினான். இது என்ன என்று புரியாமல் நான் பேசாமல் இருந்தேன். மறுபடியும் வண்டிக்காரன் அதே பல்லவியைப் பாடத் தொடங்கினான். மீண்டும் ஒருவர் வந்து ஏறினார். அவர் ஏறியதும் வண்டியிலிருந்து மூன்றாவது ஆள் இறங்கினான். வண்டிக்காரனோ உடனே புறப்படப் போகிறவன் மாதிரி மற்றோர் ஆளுக்காகக் கூவினான். எனக்கு இப்பொழுதுதான் விஷயம் விளங்கியது.

முதலில் வண்டியில் உட்கார்ந்திருந்த மூவரும் வண்டிக்காரனின் கை ஆட்கள். வண்டிக்கு ஓர் ஆள் தானே வேண்டும் என்று வந்து உடனே சிலர் ஏறுவார்கள், சீக்கிரம் வண்டி நிரம்பிவிடும். இது அவர்கள் ஆள் சேர்க்கும் முறை! எனக்கு ஒரு யோசனை தோன்றியது. உடனே வண்டிக்காரனைப் பார்த்து, ''இந்தாப்பா, 'இரண்டு ஆள்!' என்று கூவு'' என்று கூறி, இறங்கிப் போய்விட்டேன். அவன் பிறகு என்ன கூவினானோ, எனக்குத் தெரியாது!

ஏ. வி. ரமணி, திருவத்திபுரம்.

14 FEB 1956 MADRAS

# குழந்தைகளே!

முந்திய இதழ்களில் விமரிசனப் பகுதியைப் பற்றித் தெரிவித்திருந்தேன். ரேடியோ நிலையங்களில் சிறுவர்களுக்காகச் சனி ஞாயிற்றுக் கிழமைகளில் தனியே நிகழ்ச்சிகள் நடைபெறுகின்றன. அவற்றைக் கேட்டு உங்கள் விமரிசனத்தை எழுதி அனுப்புங்கள் என்று குறிப்பிட்டிருந்தேன். சிறுவர் நிகழ்ச்சிகளிலிருந்து நீங்கள் பல புதிய விஷயங்களைத் தெரிந்துகொள்ளலாம். உங்களைப்போன்ற பல குழந்தைகள் இந்த நிகழ்ச்சிகளில் பங்கு எடுத்துக்கொண்டு தங்கள் திறமைகளையெல்லாம் காட்டுவதால் அவற்றைக் கேட்டு நீங்கள் மகிழ்ச்சியும் மலர்ச்சியும் அடையலாம். பிறகு உங்களுக்குப் பிடித்தமான அம்சங்களையும் தேவையான பகுதிகளையும், தெரிந்துகொள்ள வேண்டிய விஷயங்களையும் உங்கள் விமரிசனத்தின் மூலம் தெரிவித்துவிடலாம். இதற்காகவே இந்தப் பகுதியைத் தொடங்க எண்ணினேன்.

ஆனால் இதற்கு நான் எதிர்பார்த்தபடி உங்களிடமிருந்து விமரிசனங்கள் வரவில்லை. ஏதோ நகரங்களிலுள்ள சிலர்தான் எழுதி அனுப்பியிருக்கிறார்கள். ஆனால் மற்றவர்கள் வேறு ஒரு புதிய உண்மையைத் தெரிவித்திருக்கிறார்கள். தமிழ் நாட்டில் பெரும்பாலும் நாட்டுப்புறங்களே அதிகம். அடுத்தபடிதான் சிறிய நகரங்கள். பெரிய நகரங்கள் ரொம்பச் சொற்பம். அதிலும் ரேடியோ கேட்க வசதியுள்ளவர்கள் அதிகமில்லை. நாட்டுப்புறங்களில் கேட்க வசதியே இல்லை. சிறிய நகரங்களில் பலரிடம் ரேடியோவே இல்லை. இப்படியெல்லாம் இருக்கும்போது எப்படி அவர்கள் இந்த நிகழ்ச்சிகளைக் கேட்பது, விமரிசனம் எழுதுவது என்கிறார்கள். கல்வி ஒலிபரப்பைத் தவிர, சென்னையில் நடைபெறும் சிறுவர் நிகழ்ச்சிகளைத் தென் பகுதியில் உள்ளவர்கள் அதிகம் கேட்பதே இல்லையாம். இப்பொழுது சென்னை வானொலி நிலையத்தின் ஒலிபரப்பும் சக்தியை அதிகரித்திருப்பதால் இனி கேட்க முடியும். ஆயினும் எல்லாக் குழந்தைகளும் ரேடியோ கேட்க வழியில்லையே என்கிறார்கள்.

இது ஒரு புதிய உண்மையைத் தெரிவிக்கிறது. இந்தச் சிறுவர் நிகழ்ச்சிகளை எல்லாக் குழந்தைகளும் கேட்கும்படி ரேடியோ நிலையத்தார் வேறு ஒரு புதிய முறையைக் கையாள வேண்டும். கல்வி ஒலிபரப்பைப் பெரும்பாலும் பள்ளிகளில் கேட்கச் சந்தர்ப்பம் இருக்கிறதாம். அதேபோல இந்த நிகழ்ச்சிகளையும் கேட்கும்படி ஓர் ஏற்பாடு செய்ய வேண்டும். நிலைய அதிகாரிகளும், நகராண்மை அதிகாரிகளும் இதைக் கவனித்து, ஆராய்ந்து, ஆவன செய்வார்கள் என்று நம்புகிறோம்.

அதற்காக விமரிசனப் பகுதியை விட்டுவிட எனக்கு விருப்பமில்லை. கல்வி ஒலிபரப்பையேனும் கேட்டு, அவ்வப்போது உங்கள் பாரபட்சமற்ற விமரிசனங்களை எழுதியனுப்புங்கள். வசதியும் சௌகரியமும் உள்ளவர்கள் சிறுவர் நிகழ்ச்சிகளையும் கேட்டு எழுதியனுப்பலாம். சிறந்ததாகவும் எல்லாருக்கும் பயன்படக்கூடியதாகவும் உள்ள விமரிசனங்களைக் கண்ணனில் பிரசுரித்து, அதற்குச் சம்மானமும் வழங்குகிறோம்.

அடுத்தபடியாக, சிறுவர் வெளியீடுகளைப் பற்றியும் நீங்கள் உங்கள் விமரிசனங்களை எழுதலாம். இப்போது எத்தனையோ சிறுவர் வெளியீடுகள் வந்துள்ளன. அவற்றில் ஒவ்வொன்றாக எடுத்துத் தனித் தனியே எழுதி அனுப்பலாம். நல்ல விமரிசனங்கள் பத்திரிகையில் வெளி வருவதனால் புத்தகம் எழுதும் ஆசிரியருக்கும் புத்தகம் படிக்கும் குழந்தைகளுக்கும் நல்ல பயன் ஏற்படும். பிப்ரவரி மாதம் 10-ஆம் தேதிக்குள் 'இதோ ஒரு புத்தகம்' என்ற தலைப்பில் உங்கள் முதல் விமரிசனத்தை உற்சாகமாக எழுதி அனுப்புங்கள். அடுத்தடுத்த விமரிசனங்களை அவ்வப்போது எழுதி அனுப்பலாம். இந்த மாதிரியான நேர்மையான விமரிசனங்கள் எழுத்து ஆர்வத்தையும் ஆற்றலையும் நல்ல முறையில் வளர்க்கும்.

—ஆசிரியர்.

# தியாகமூர்த்தி

*எ. ந. கணபதி*

காந்தி எங்கள் காந்தியாம்,
　　கர்ம வீரர் காந்தியாம்
சாந்திக் காகத் தம்மையே
　　தியாகம் செய்த காந்தியாம்.

வாய்மை அஹிம்சை என்றிடும்
　　வலிமை மிக்க சக்தியால்
ஆயு தங்கள் இன்றியே
　　அடிமை ஒழித்த காந்தியாம்.

இந்து முஸ்லிம் மக்களை
　　இனிய நண்பர் ஆக்கியே
இந்தி யாவின் தந்தையாய்
　　இலங்கு கின்ற காந்தியாம்.




ஊரின் ஓரம் சேரியால்
　　ஒதுக்கப் பட்ட சாதியார்
பாரில் மேன்மை பெற்றிடப்
　　பலவும் செய்த காந்தியாம்.

உலக மக்கள் யாவரும்
　　ஒன்று சேர்ந்து என்றுமே
திலக மென்று போற்றிடும்
　　தியாக மூர்த்தி காந்தியாம்!

# மரியாதை

நடனா



மாலை வேளை. மணி ஐந்தே கால் அல்லது ஐந்தரை இருக்கும். பள்ளி விட்டதும் வீட்டிலுள்ள தின்பண்டத்தை நினைத்து வேகமாகச் செல்லும் பையனைப் போல், பஸ்ஸிலிருந்து இறங்கியதும் வீட்டுக்கு வேகமாக நடந்தேன்.

நேராகக் கிழக்கே கொஞ்சதூரம் சென்று, தெற்கே திரும்பினால் எங்கள் தெரு. வீட்டிற்குச் சென்றதும், எனக்குக் கிடைக்கும் சூடான டிபனை நினைத்து நடையை வேகமாகப் போட்டேன். எங்கள் தெருவுக்குத் திரும்பவேண்டிய முனை வந்ததும், 'பூம்—பூம்' என்ற சத்தம் என்னை நிறுத்தியது. எங்கள் தெரு மிகவும் குறுகிய தெரு. குறுக்கே போய், திரும்பும் காரில் மாட்டிக் கொள்ள எனக்கு அபிப்பிராயமில்லாததால், கார் போன பிறகு போகலாம் என்று நின்றுவிட்டேன்.

ஐந்தாறு பேர்கள் உட்கார்ந்திருந்த ஒரு மோட்டார், வான் எங்கள் தெருவிலிருந்து வந்து நான் வந்த பக்கமாக மேற்கே திரும்பியது. அது வருவதையே பார்த்துக் கொண்டிருந்த நான் அதில் உட்கார்ந்திருந்தவர்களின் செய்கையைக் கண்டதும் பிரமித்தேன்.

காரில் உட்கார்ந்திருந்தவர்கள் ஒவ்வொருவரும், தங்கள் கையைத் தூக்கி வந்தனம் செய்தார்கள். என் மனம் ஆச்சரியத்தால் குழம்பியது. ஒரு மாதிரியாகச் சமாளித்துக் கொண்டு கையைத் தூக்கி நானும் பதிலுக்கு வந்தனம் செய்தேன். இவ்வளவு பேரும் சேர்ந்து நமக்கு மரியாதை செய்கிறார்களே என்று பெருமிதம் பொங்கியது. நமக்குத் தெரிந்தவர்களாக இருக்குமோ என்று சந்தேகம் தோன்றியது. நன்றாக உற்றுப் பார்த்தேன். எல்லாம் புதிய முகங்கள்; தெரிந்த முகம் ஒன்றுகூடத் தென்படவில்லை. எனது ஆச்சரியமும் குழப்பமும் அதிகரித்தன. இப்பொழுது தேர்தல்கூட ஒன்றும் இல்லையே. அப்படி ஏதாவதிருந்தால் நான் ஓர் 'ஓட்டாளி' என்பதைத் தெரிந்துகொண்டு தான் நமக்கு 'சலாம்' செய்தார்களோ என்று ஒரு சந்தேகம் தோன்றக் கூடும். அதற்கும் வழியில்லாமல் போகவே ஒருகால் புயல் நிவாரணத்திற்கு வசூல் செய்பவர்களோ என்று சந்தேகம் எழுந்தது.

எப்படி இருந்தாலும் நமக்கு மரியாதை செய்தவர்களிடம் நெருங்கி, விசாரித்து இரண்டொரு வார்த்தையாவது பேசுவோம் என்னும் நோக்கத்துடன், காரை நோக்கி இரண்டடி எடுத்து வைத்தேன்.

ஆனால், என்ன ஏமாற்றம்! நான் காரிடம் நெருங்குவதற்குள்ளாகவே, அது 'விர்'ரென்று பறந்து விட்டது. இவ்வளவு தூரம் எனக்கு மரியாதை செய்தவர்கள் நான் பேசப் போவதற்குள் ஓடிவிட்டார்களே என்று வருத்தமாக இருந்தது. இதற்குக் காரணம் என்னவென்றே புரியவில்லை. அந்த வான் போவதைப் பார்க்க மேற்குத் திசையில் திரும்பினேன்.

மாலைச் சூரியனின் கிரணங்கள் நேராக என் கண்களைத் தாக்கின. எதிரே ஒன்றுமே தெரியவில்லை. கையைத் தூக்கி நெற்றியில் வைத்து, மறைத்துக்கொண்டு பார்த்தேன். அந்த வான் தெருக்கோடியில் மறைவது தெரிந்தது. அப்பொழுதுதான் என் மூளையில் உண்மை திடீரென்று உதித்தது.

வானிலிருந்தவர்கள் எனக்கு வந்தனம் செய்யவில்லை. சூரிய ஒளியில் எதிரே இருப்பது தெரியாத காரணத்தால், அதைத் தடுக்கும் நோக்கத்துடன், நெற்றியில் கையை வைத்துக்கொண்டார்கள் என்பது விளங்கியது.

என்னை வெட்கம் பிடுங்கித் தின்றது! தலை கீழே இறங்க வேகமாக வீட்டை நோக்கி நடந்தேன்.

பரிசு பெற்ற புதிய தொடர்கதை:



# ஸி.ஐ.டி சிங்காரம்

மண. அரங்கசாமி

## 3

குளுகுளுவென்று இளங்காற்றை மெல்ல வீசிக்கொண்டிருக்கும் தென்னங் கன்றுகளை வைத்திருந்தார்கள் அந்த வீட்டைக் கட்டியவர்கள். அவைகளைத் தழுவியபடி படர்ந்திருந்தன பூங்கொடிகள். அதில் பூத்திருந்த மலர்களிலிருந்து 'கம்'மென்று வாசனை வீசிக்கொண்டிருந்தது! அது ஒரு சாதாரண ஓட்டு வீடு. அந்த வீட்டின் வெளியே இருந்த திண்ணைமீது உட்கார்ந்து படித்துக் கொண்டிருந்தான் அமுதன். அவன் கையிலிருந்தது ஓர் ஆங்கிலப் பாட புத்தகம். அதை அதிக அக்கறையுடன் படித்துக்கொண்டிருந்தான். அன்று காலை தலைமை ஆசிரியர் தணிகைவேலு சொன்ன சொற்கள் அவன் காதில் 'கிண் கிணி' நாதம் போல இடைவிடாது சுத்தமாக ஒலித்துக்கொண்டிருந்தன.

''மாணவர்களே, இந்த வருஷம் ஆண்டுத் தேர்வில் ஆங்கிலத்தில் 80 சதவிகிதம் வாங்குபவர்களுக்கு அரசாங்கத்தாரின் தங்கப் பதக்கமும் வெள்ளிக் கோப்பையும் கிடைக்கும். யார் யாருக்கு அவைகளை அடையும் பாக்கியம் இருக்கிறதோ?'' என்று பொதுவாகக் கூறிவிட்டு அமுதனைத் தனியாக அழைத்து, ''நீ இந்தப் பரீட்சையில் அதிக மார்க்கு வாங்கப் பிரயத்தனம் செய். முயற்சி செய். அரசாங்கத்தார் பரிசை நம் பள்ளிக்கூடம் பெற்றால் தனிமதிப்புத்தானே? கவனமாகப் படி'' என்று கூறினார் தணிகைவேலு.

அதற்காகத்தான் அமுதன் முன்னைவிட அதிகக் கவனமாகப் படித்துக்கொண்டிருந்தான். அதிக ஊக்கமாக ஊன்றிப் படித்துக் கொண்டிருந்த அவனை, ''அமுதா—அமுதா!'' என்ற குரல் கலைத்துத் திரும்பிப் பார்க்கச் சொல்லியது. புத்தகத்திலிருந்து தன் தலையை உயர்த்திப் பார்த்தான். அங்கே அவன் நண்பர்கள் நின்றுகொண்டிருந்தார்கள்.

சுந்தரம் அமுதனை நெருங்கி அடித் தொண்டையிலேயே, "அமுதா, நாங்கள் கடற்கரைக்குப் போகப் போகிறோம். நீயும் வருகிறாயா? இன்று பௌர்ணமி. ரொம்ப அழகாக இருக்கும். என்ன சொல்கிறாய்?" என்று கேட்டான்.

"எட்டு மணிக்கெல்லாம் திரும்பி வந்து விடுவதானால் நான் வரேன். இல்லேன்னா..என்னாலே வர முடியாது அப்பா!" என்றான் அமுதன்.

"கண்டிப்பா எட்டு மணிக்கெல்லாம் திரும்பி வந்து விடலாம்" என்றான் சுந்தரம்.

ஆங்கிலப் புத்தகத்தோடு திண்ணையை விட்டுக் குதித்த அமுதன் சுந்தரத்தோடு சேர்ந்துகொண்டு மற்ற இருவரையும் அடைந்தான்!

நால்வரும் ஆற்று வழியே சென்னை மெயின் ரோட்டை அடைந்தனர். வழியில் பல காட்சிகளைக் கண்டு மகிழ்ந்தபடியே தமாஷாகப் பேசிக்கொண்டு வந்தனர். யூனிவர்சிடி மணிக்கூண்டு கடிகாரம் மணி ஐந்து என்பதை, தனக்கே உரிய இனிய குரலில் ஐந்து முறை ஒலித்துத் தெரிவித்தது. கடற்கரை சோபையுடன் விளங்கிக்கொண்டிருந்தது. காரியாலயத்தில் வேலை செய்து ஓய்வு இல்லாமல் இருந்த குமாஸ்தாக்கள் மனமகிழ்ச்சிக்காகவும் அமைதிக்காகவும் கடற்கரையை நோக்கி நடந்துகொண்டிருந்தனர். மாலை மஞ்சள் வெயிலில் கடற்கரை பொன்னாகக் காட்சி அளித்தது. நீல நிற ஆகாயத்தை அப்படியே படம் பிடித்துக் காட்டுவதுபோல் கடல் நீல நிறமாகத் திகழ்ந்தது. பரந்து விரிந்து கிடந்த கடலில் அலைகள் ஒன்றோடொன்று போட்டி இட்டு எழும்பிக் கரையை அடைய விரைந்தன. அதைக் கண்ட எந்த உண்மை ரசிகனும் அதை விட்டு வர விரும்ப மாட்டான்.

அலைகளின் 'ஓ'வென்ற இரைச்சல் கடற்கரைக்கு வருபவர்களை 'வா, வா' என்று முகமன் கூறி அழைப்பதுபோல இருந்தது. கீழ்த் திசையில் அடி வானத்திலே சிவப்பு நிறத்துடன் தோன்றிய சந்திரன் வட்டவடிவமாகக் காட்சி அளித்தான். அவனுடைய சிவப்பு நிறத்தைத் தனது அலைக் கரங்களால் கழுவிக் குளுமையையும் வெண்மையையும் அளிக்க எண்ணுவது போல் கடல் அலைகள் சந்திரனை நோக்கி எழும்பி விழுந்தன. இயற்கையில் தங்கள் மனத்தைப் பறிகொடுத்த அந்த நான்கு பேரும் தங்களையே மறந்தனர்! கரை ஓரமாகவே ஹார்பரை நோக்கி மெதுவாக நடக்க ஆரம்பித்தார்கள். சாலை வழியே கார்கள் சிறு உருவத்தில்—ஏதோ விசை ஒன்றால் இழுக்கப்படுவதுபோல வேகமாகச் சென்றுகொண்டிருந்தன. அவை சங்கிலித் தொடரைப்போல் காணப்பட்டன.

சந்திரன் மெல்ல மெல்ல அடி வானத்தைவிட்டு மேலே கிளம்பிக் கொண்டிருந்தான். அவனைப் பிடிக்க எண்ணுவதுபோல உயரமாக அலைகள் எழுந்து, பிடிக்க முடியாமல் தோல்வி அடைந்து கீழே விழுந்தன. கரையை நோக்கி அவை மோதும்போது உண்டான 'மடார் மடார்' என்ற ஒலி, அலை எழும்புவதால் உண்டான 'ஓ' வென்ற ஓசை ஆகிய இவைகள் இசையை எழுப்புவதுபோல இருந்தன. சந்திரனின் தண்ணொளி கண்களுக்கும் கருத்துக்கும் குளிர்ச்சியைக் கொடுத்தது. அதன் அழகில் சூழ்ச்சிக்காரர்களும் தங்கள் நிலை மறந்தனர். சுந்தரம் மெல்லச் சங்கரனின் காலை அழுத்தினான். அவனது கால் கட்டை விரல் நகம் பட்டவுடன் சங்கரன் தன்னைப் பாம்போ ஏதோ கடிப்பதாக எண்ணித் திடுக்கிட்டுக் காலைப் பார்த்தான். பிறகு மெல்ல நாகசாமியை நோக்கினான். சங்கரன் விஷயம் தெரிந்து கொண்டவனாக அலையில் சென்று நின்றான்.

அவனைத் தள்ளியபடி நின்றான் சுந்தரம். அவர்களிருவரை இடித்தபடி முன்னால் சென்று தண்ணீரிலே நின்றான் நாகசாமி. அமுதனும் அந்தப் போட்டியில் கலந்துகொள்ளாமல் தனியாக இருக்கவில்லை! சிறு சிறு அலைகள் அவர்களது கால்களை வருடிச் செல்வதுபோலச் சென்றன. நீரை அள்ளி அள்ளி

ஒருவர்மீது ஒருவர் இரைத்து விளையாடி மகிழ்ந்தனர்.

பெரிய அசுர அலை ஒன்று சுமார் ஆறடி உயரம் எழும்பிக் கீழே விழுந்தது! எவரும் எதிர் பாராத சமயம் திடீரென்று ஒரு பெரிய அலை பேரிரைச்சலுடன் வந்தது. அதைக் கண்ட சுந்தரம் அமுதனின் அருகில் வந்தான். காலை மெல்ல இடறி விட்டான். 'ஆ' என்றலறியபடி தண்ணீரில் விழுந்தான் அமுதன். நிலை தடுமாறினான். அவன் கைகால்கள் எதுவுமே தம் வேலையைச் செய்ய வில்லை. இனம் தெரியாத ஒரு சக்தி தன்னைக் கீழ் நோக்கி இழுப்பதை உணர்ந்தான். சிறு சிறு அலைகள் அவனைப் பந்தாடுவது போலத் தள்ளிக்கொண்டே சென்றன. வேர் அறுபட்ட மரம்போலச் சாய்ந்த அவனால் சமாளிக்கவே இயலவில்லை! அலைகளை எதிர்த்து நீந்த முடியாமல் திணறினான். காதுகளில் 'ஓ'வென்ற இரைச்சல் அதிகமாகியது. கண்கள் தம் சக்தியை இழந்துகொண்டே வந்தன. கைகால்கள் உணர் விழந்து மரக் கட்டைபோல ஆயின! அவனது மனக்கண்முன் அவன் பெற்றோர் தோன்றி மறைந்தனர்.

''அமுதா, நீ இவ்விதம் செய்ய லாமா?'' என்று கேட்பதுபோல அவர்களது உருவங்கள் அகக் கண் முன் தோன்றி மறைந்தன. சுய உணர்வே மெல்ல மெல்ல அவனிட மிருந்து விடை பெற்றுக்கொண்டு சென்றுகொண்டிருந்தது! மரணம்



தன்னை எதிர்கொண்டு அழைப்பது போல அவனுக்குத் தோன்றியது. அவனை அறியாமல் அவன் உதடுகள், ''அம்மா, அப்பா, சாந்தி.. என்னை மன்னித்து விடுங்கள்.. என்னை நீங்கள்..இனிமேல்..காண முடியாது! உங்களைப் பார்க்கும்.. பாக்கியத்தை நான்..இழந்து விட்டேன்..'' என்று மெல்ல முணுமுணுத்தன.

அவன் தவிப்பால் எந்தச் சலனமும் ஆழ்கடலில் ஏற்படவில்லை! பேரிரைச்சலுடன் பொங்கிச் சீறி எழுந்தது கடல்! ஆனால் முழு வெண்மதி இதைக் காணச் சகியாமல் தன் ஒளி உடலை மேகத் திரையால் மூடிக்கொண்டுவிட்டது!

## 4

சர்க்கிள் இன்ஸ்பெக்டர் சதாசிவம் தம் அறையில் உட்கார்ந்து கொண்டிருந்தார். மேஜைமீது வைக்கப்பட்டிருந்த காலண்டரில் முன் தினத் தேதி கிழிக்கப்படாமல் இருந்தது. அதனருகில் இருந்த ஊதுவத்திச் சிமிழின்மீது முதல் நாள் கொளுத்திய வத்தியின் சாம்பல் படிந்து கிடந்தது. ஆபீஸ் பைல் திறந்தபடியே மூடாமல் கிடந்தது, இடது கோடியில்! மேஜை அருகில் இருந்த நாற்காலி மீது இருந்த மின்சார விசிறி வேகமாகச் சுழன்றுகொண்டிருந்தது. சுழல் நாற்காலியில் உட்கார்ந்து தமது மோவாயை நீவி விட்டுக் கொண்டிருந்தார் அவர். முகம் ஆழ்ந்த யோசனையில் இருந்ததை அப்படியே எடுத்துக் காட்டியது;

'விஸ்..ஸ்' என்று சென்ற மின்சார விசிறியின் ஒலியைத் தவிர வேறு சத்தம் அந்த அறையில் இல்லை! அவர் எண்ணம் முழுவதும் தான் அனுப்பிய சி. ஐ. டி. ஜேசுபாதத்தின்மீது வட்டமிட்டது! சி. ஐ. டி. சென்னை சென்று முழுசாக ஒரு நாளாகியிருந்தும் எந்தவிதத் தகவலும் அவரிடமிருந்து இதுவரை வராதது சதாசிவத்திற்கு ஆச்சரியமாக இருந்தது! பிரபல திருடனை கருடா சிங்கைப்பற்றியும் அவனது கையாட்களான மாயாண்டி, இடும்பன் ஆகியவர்களைப் பற்றியும் தகவல்களைச் சேகரித்தும், முடியுமானல் பிடித்தும் வரும்படிதான் சி. ஐ. டி அனுப்பப்பட்டார். அவர்கள் பிடிபட்டுவிட்டால் அந்த எல்லையிலே திருட்டோ அல்லது கொள்ளை, கொலையோ நடக்கவே நடக்காது.

அப்போது அவர் சிந்தனையைக் கலைக்கும் வகையிலே டெலிபோன் மணி கிணு கிணுத்தது! ஆவலுடன் ரிசீவரைக் கையில் எடுத்துக் காதில் வைத்துக்கொண்டார். ஆமாம். அவருக்குச் சென்னையிலிருந்து 'டிரங்க் டெலிபோன் கால்' வந்திருந்தது. டெலிபோன் சம்பாஷணை தொடர்ந்தது.

''ஹலோ, கேட்பது சர்க்கிள் இன்ஸ்பெக்டர் சதாசிவம்தானே?''

''எஸ். வாட் இஸ் தி மாட்டர்?''

''கருடா சிங்கைப்பற்றி..''

''தகவல் கிடைத்து விட்டதா?''

''ஆமாம் சார். கருடா சிங்கைப் பற்றிப் பூரணமான தகவல்கள் சுலபமாகக் கிடைத்திருக்கின்றன. தாராபுரம் பாங்கில் கொள்ளை அடித்த பணத்துடன் சிங்கப்பூர் செல்லத் தீர்மானம் செய்து, வேறு பெயரில் டிக்கெட்கூட ரிசர்வ் செய்துவிட்டான். கப்பல் 'ஜல உஷா' இன்று இரவு ஆறு மணிக்குப் புறப்படுகிறது. நான் ரெடியாக இருக்கிறேன். நீங்கள் உடனே புறப்பட்டு வந்தால்..காரியம் சுலபமாகிவிடும்!''

''ஒயெஸ்! நான் மூணு மணி டிரெயினில் புறப்பட்டு வருகிறேன். நீ தங்கி இருக்கும் ரூம் நெம்பர்?''

''ஒன் நாட் ஸிக்ஸ். 'ஹோட்டல் டி இண்டியா' மேல் மாடியில்!''

''ரைட். அவசியம் நாலு மணிக்கெல்லாம் வந்து விடுகிறேன்!''

சதாசிவம் 'டக்'கென்று டெலிபோனைக் கீழே வைத்தார். அவர் முகத்தில் அப்போதுதான் பிரகாசம் தோன்றியது. அவசர அவசரமாக உடைகளை அணிந்துகொண்டார் சதாசிவம்.

அப்போது தோட்டத்திலிருந்து ஓடி வந்தாள் வசுமதி. அவளைப் பார்த்துப் புன்முறுவலுடன், ''என்ன வசு, நான் சென்னைக்குப்



போகிறேன். உனக்கு என்ன வாங்கி வரணும்?'' என்று கேட்டார்.

''அப்பா, இந்தத் தடவையாவது எனக்கு அதை வாங்கிவர மாட்டாயா? எத்தனையோ தடவை சொல்லிச் சொல்லி வாய்தான் வலிக்கிறது!'' என்று பீடிகையுடன் ஆரம்பித்தாள் வசுமதி.

''அதுக்குத்தானே அம்மா உனக்கு என்ன வேணும்னு கேட்கிறேன். நீ என்ன வேணும்னு சொல்கிறாயோ அதை இந்தத் தடவை நிச்சயமாக வாங்கிக் கொண்டு வருகிறேன். ஆனா இந்தத் தடவை நான் போகிறது பெரிய கேஸைப் பிடிக்கறதுக்கு!''

''போப்பா, உனக்கு எப்பப் பார்த்தாலும் கொலை, கொள்ளை, திருட்டு, கேஸ் இதுதான்! எந்தத் தடவைதான் எனக்கு நிச்சயமாய் வாங்கி வரேன்னு சொல்லி இருக்கிறே!'' என்று பொய்க் கோபத்துடன் தலையை இப்படியும் அப்படியும் ஆட்டினாள். அவள் காதில் இருந்த தொங்கட்டான் அழகாக ஆடியது! அதை ரஸித்தபடியே நின்ற சதாசிவம் சட்டென்று உணர்வு பெற்றவராக, ''உ..ம்.: என்ன வேணுமின்னு சொல்லவே இல்லையே! எனக்கு நேரமாகிறது!'' என்றார்.

''ஒரு வைர நெக்லேஸ் வேணுமப்பா!'' என்றாள் வசுமதி.

''இவ்வளவுதானே. நிச்சயமாக நான் வாங்கி வருகிறேன். சரி, வரட்டுமா?'' என்றார் சதாசிவம். அப்போது வாசலில் குடுகுடுப்பைக்காரன், ''ஐயாவுக்கு நல்ல சேதி வருகுது..பதவி உயருது..குடு..குடு..குடு..'' என்று கூறிக் கொண்டே படி ஏறினான்.

அதைக் கேட்டுப் புன்சிரிப்புடன் மோட்டார் சைக்கிளைச் செலுத்தினார் சதாசிவம். ஸ்டேஷனை அடைந்ததும் மோட்டார் சைக்கிளை ஒரு போலீஸ்காரனிடம் ஒப்படைத்து விட்டு, டிக்கட் வாங்கிக் கொண்டு வண்டியில் ஏறினார். ரெயில் ஒரு முறை ஊதி விட்டுப் புறப்பட்டது.

(தொடரும்)

# பிசிர் ஆந்தையார்

கி. வா. ஜகந்நாதன்

பிசிர் ஆந்தையார் என்ற பெயரைக் கேட்டாலே வேடிக்கையாக இருக்கிறது, அல்லவா? பிசிர் என்பது ஓர் ஊர்; பாண்டி நாட்டில் உள்ளது. ஆந்தையார் அந்த ஊரில் இருந்த புலவர். நன்ருகப் படித்தவர்; அருமையான கவிஞர்; மிகவும் தங்கமான குணம் உடையவர்.



அப்போது மதுரையில் ஒரு பாண்டியன் ஆட்சி புரிந்துவந்தான். அவனுக்கு அறிவுடை நம்பி என்று பேர். அரண்மனைச் செலவு அதிகம் ஆகிவிட்டது என்று அவன் வரி அதிகமாகப் போட்டுவிட்டான். அதனால் ஜனங்களுக்குக் கஷ்டம் உண்டாயிற்று. அரசனிடம் போய்த் தங்கள் கஷ்டத்தைச் சொன்னால் கேட்பானே, கேட்கமாட்டானே என்ற பயம் அவர்களுக்கு இருந்தது. அரசர்கள் எவ்வளவுதான் அதிகாரம் உடையவர்களானாலும், புலவர்களுடைய அறிவுக்கு மதிப்புக் கொடுத்து அவர்கள் சொல்வதைக் கேட்பார்கள்.

ஆந்தையாரிடம் போய்க் குடி மக்கள் தங்களுடைய குறையைச் சொல்லிக்கொண்டார்கள். அவர், ''நான் அரசனைப் பார்த்து என்னால் இயன்றதைச் சொல்கிறேன்'' என்று சொல்லி அவர்களை அனுப்பினார். பிறகு மதுரைக்கு வந்து பாண்டியன் அறிவுடை நம்பியை நாடிச் சென்றார்.



அவரைக் கண்டவுடன் பாண்டிய மன்னன் வரவேற்று உபசாரங்கள் செய்தான். உயர்ந்த இடத்தில் அமரச் செய்து பேசிக்கொண்டிருந்தான். பேச்சுக்கு நடுவிலே கவிஞர் மெல்ல ஒரு கதையைச் சொல்லத் தொடங்கினர்.

''ஒருவன் யானை ஒன்றை வைத்திருந்தான். அவனுக்குச் சின்ன வயல் ஒன்றும் இருந்தது. அந்த வயல் விளைந்து வந்ததும் நெல்லைச் சேமித்து வைத்தான். தான் சோறு சாப்பிட்டாலும் சாப்பிடாவிட்டாலும் யானைக்குக் கவளம் கொடுப்பதை மறக்கமாட்டான். அந்த வயலில் விளைந்த நெல் யானைக்கும் அவன் குடும்பத்துக்கும் போதுமானதாக இருந்தது. ஒரு நாள் அந்த வயலுக்கு ஆபத்து வந்து விட்டது.''

''என்ன ஆபத்து?'' என்று பாண்டியன் கேட்டான்.

''யானையினுலே வந்த ஆபத்து.''

''பழகின யானைதானே?''

''ஆமாம், பழகின யானைதான். அதற்கு என்னவோ ஒரு நாள் உற்சாகம் உண்டாகிவிட்டது. வயலில் விளையும் நெல்லை அறுத்து வந்து சோருக்கி ஆண்டு முழுதும் கொடுத்து வந்தது பிடிக்கவில்லை போல் இருக்கிறது! நேரே வயலிலேயே புகுந்துவிட்டது.''

''அப்புறம்?''

''அப்புறம் என்ன? ஒரே குழப்பந்தான். வயல் முழுவதையும் அழித்துவிட்டது. வயலில் இருந்த பயிர் முழுவதையும் அது தின்றதா? இல்லை, இல்லை. அதன் வாய்க்குள் போனதைவிட காலால் மிதிபட்டு அழிந்தது அதிகம்.''

''அந்த யானைக்காரன் என்ன செய்தான்?''

''அதை மறு நாளே விற்றிருப்பான். அவனைப் பற்றி நமக்குக் கவலை இல்லை. யானையாவது விலங்கினம். அறிவுடையவர்கள் அந்த யானையைப் போல நடந்து கொண்டால் எவ்வளவு துன்பம் உண்டாகும்!''

''என்ன?''

''அரசர்கள் யானைக்குச் சமானமானவர்கள். குடி மக்கள் வயலைப் போன்றவர்கள். அளவு தெரிந்து வரி வாங்கினுல் குடிமக்களுக்கும் நல்லது; அரசர்களுக்கும் நல்லது. அளவுக்கு மிஞ்சிக் குடிகளிடம் வரி தண்டுவதாக இருந்தால் யானை புகுந்த வயல் போலத்தான் நாடு ஆகிவிடும்.''

இதைச் சொன்னதும் அரசனுக்குச் சொரேர் என்றது. புலவர் மறுபடியும் பேசலானுர்: ''அரசன் நல்லவனுக இருந்தாலும் உடன் இருக்கும் மந்திரிகள் அவனைக் கெடுத்துவிடுகிறுர்கள். வரி போடலாமா என்று அரசன் கேட்டால் தாராளமாகப் போடலாம் என்று தலையாட்டுகிறுர்கள். குடிகள் அந்த அரசனை அண்டுவதற்குப் பயப்படுகிறுர்கள்'' என்று சொல்லி நிறுத்தினுர்.

பாண்டியன் தான் செய்த பிழையை உணர்ந்து, புதிதாகப் போட்ட வரியை நீக்கிவிட்டான்.

**சோழ** நாட்டில் உறையூரில் கோப்பெருஞ் சோழன் என்ற அரசன் ஆண்டு வந்தான். அவனுக்குத் தமிழ்ப்புலவர்களிடம் அளவு கடந்த அன்பு. பிசிராந்தையாரைப் பற்றி அவன் கேள்வியுற்றுன். அவரிடம் அவனுக்கு அன்பு உண்டாயிற்று. மதுரைப் பக்கத்திலிருந்து யார் வந்தாலும் பிசிராந்தையாரைப் பற்றி விசாரிப்பான். மதுரைக்குப் போகிறவர்களிடம் அந்தக் கவிஞரிடம் கொடுக்கும்படி பரிசுகளைக் கொடுத்தனுப்புவான், பிசிராந்தையாருக்கும் கோப்

பெருஞ் சோழனிடம் பேரன்பு உண்டாயிற்று.

இந்த இரண்டு பேரையும் தெரிந்து கொண்ட புலவர்களும் மற்றவர்களும் அவர்களிடம் ஏற்பட்டிருக்கும் ஆழ்ந்த நட்பைக் கண்டு வியப்படைந்தார்கள். "ஒருவரை ஒருவர் பார்க்கவில்லை. ஆனாலும் எவ்வளவு சிறந்த நண்பர்களாக இருக்கிறார்கள்! நட்புக்கு உள்ளந்தான் காரணம் போலிருக்கிறது" என்றார்கள்.

பிசிராந்தையார் கோப்பெருஞ் சோழனைப் பற்றிக் கவிதை எழுதி அனுப்புவார். அதைப் பார்த்துப் பார்த்து ஆனந்தக் கூத்தாடுவான் சோழ அரசன். ஒரு நாள் அவர் வானத்தில் ஓர் அன்னப்பறவை பறப்பதைப் பார்த்தார். இமயமலையில் மானசசரஸ் என்ற ஏரி இருக்கிறது. அங்கே அன்னங்கள் வாழும். அன்னம் தமிழ் நாட்டில் தென் கோடியில் உள்ள கன்யாகுமரிக்குச் சென்று அங்குள்ள மீனை உண்டு விட்டு இமயமலைக்குப் பறந்து செல்வதாகக் கவிஞர் எண்ணினார். அதைப் பார்த்து, "ஏ ஆண் அன்னமே! நீ குமரிமீனை உண்டு இமயமலைக்குத்தானே போகிறாய்? போகிற வழியில் சோழ நாட்டில் உள்ள உறையூர் வழியே போனால் கோப்பெருஞ் சோழனுடைய அரண்மனையைக் காண்பாய். மெதுவாக உள்ளே போய் அவனைப் பார். நான் பிசிராந்தையாருக்கு வேண்டியவன் என்று ஒரு வார்த்தை சொன்னால் போதும்; உடனே அவன் உனக்கு வேண்டியதைக் கொடுத்து, உன் பேடைக்கு நல்ல ஆபரணங்களைக் கொடுப்பான்" என்று ஓர் அழகான பாட்டைப் பாடினார். அன்னம் போயிற்றோ என்னவோ, அந்தப் பாட்டுச் சோழ மன்னனிடம் போயிற்று. அடடா! அதைப் பார்த்து அவனுக்கு உண்டான சந்தோஷத்தை என்னவென்று சொல்வது!

சோழன், இனிமேல் நமக்கு ஆட்சி வேண்டாம் என்று உலக வாழ்வை வெறுத்துத் துறவி ஆனான். அப்போதும் பிசிராந்தையாருடைய நட்பை மறக்கவில்லை. அவனுக்கு மரணதசை உண்டாயிற்று. ஒரு முறையாவது பிசிராந்தையாரைக் கண்ட பிறகு உயிர் விடவேண்டும் என்ற ஆசை ஏற்பட்டது. அவர் நிச்சயமாக வருவார் என்ற நம்பிக்கையும் இருந்தது. உடன் இருந்தவர்களிடம், "எங்களிடையே உள்ள நட்பு உத்தம நட்பானால் அவர் நிச்சயமாக வருவார்" என்றான்.

சோழன் உடம்பு சரியில்லாமல் இருக்கிறான் என்ற செய்தி பிசிராந்தையாருக்குத் தெரியாது. ஆனாலும் சோழனைப் பார்க்க வேண்டும் என்ற ஆசை மிகுதியாயிற்று. அவர் புறப்பட்டு விட்டார்.

பிசிராந்தையார் உறையூர் வந்து சேர்ந்தார். மாளிகையை விட்டுத் தவச் சாலையில் உயிர் விடுந் தறுவாயில் இருந்த கோப்பெருஞ் சோழனைக் கண்டார். அவர் வரவைக் கண்ட எல்லாரும் வியப்பில் ஆழ்ந்தனர். "என்ன ஆச்சரியமான நட்பு! ஒருவரை ஒருவர் பார்த்ததே இல்லை. அரசன் அவர் வருவார் என்று சொன்னான். அவருக்குச் செய்தி சொல்லுவார் யாரும் இல்லை. அப்படி இருந்தும் இவன் சொன்னது போலவே கவிஞர் வந்து விட்டாரே! இரண்டு பேருடைய மனசும் எப்படி ஒத்திருக்கின்றன!" என்று பேசிக் கொண்டார்கள்.

நெடு நாளாகக் காணாமல் மனத்தால் ஒன்று பட்ட நண்பர்கள் கூடினார்கள். சோழன் அவரிடம் கடைசி விடையைப் பெற்றுக் கொண்டான்; உலக வாழ்வை நீத்தான். "நீ முன்னே போ; நான் பின்னே வருகிறேன்" என்று புலவர் சொன்னார். உடம்பு இரண்டு உயிர் ஒன்று என்று சொல்லும்படியாக இருந்தது அவர்களுடைய நட்பு. தம் நண்பன் இறந்ததைக் கண்ட புலவர் அவன் இல்லாத உலகத்தில் வாழ விரும்பவில்லை. விரதம் இருந்து உயிர் நீத்தார். அதைக் கண்டு மறுபடியும் புலவர்கள் ஆச்சரியப்பட்டார்கள். "நட்பென்றால் இது அல்லவா உத்தமமான நட்பு!" என்று மக்கள் எல்லோரும் பாராட்டி வாழ்த்தினார்கள்.

# பொங்கல் படி

திருச்சி அண்ணு



பாத்திரங்கள் :

ப-பண்ணையார்
மாணிக்கம் - பண்ணையார் மகன்.
முனியாண்டி, காத்தமுத்து, ஆறுமுகம், கணபதி, சோலையப்பன் — பண்ணையாட்கள்.

## காட்சி-1

ப: தம்பி மாணிக்கம், இப்படி வா. பக்கத்திலே உட்காரு.

மா: எதுக்கு அப்பா?

ப: இன்னிக்குப் பொங்கல் புது நாளேச்சே, நினைவிருக்கா? இப்போ நம்ம பண்ணையாட்கள் எல்லாரும் நம்மைப் பார்க்க வருவாங்க. அந்த ஆட்கள் வரும்போது, நான் செய்யறதை எல்லாம் நல்லாக் கவனி.

மா: எதுக்கு? ஏதாவது விசேஷம் உண்டா?

ப: நாளை நீதானே இந்தப் பண்ணைக்கு எஜமான்! உனக்கு எல்லாம் தெரியவேண்டாமா?

மா: சரி அப்பா.

ப: அதோ, குறிப்பு நோட்டு இருக்கு, பாரு. அதை எடுத்து வச்சுக்கோ. பக்கத்திலே உட்காரு!

மா: சரி அப்பா. (மாணிக்கம் நெருங்கி உட்காருகிறுன்) அதோ, முனியாண்டி வரான்!

ப: என்ன முனியாண்டி, ஏன் லேட்டு?

மு: ஆமா, எசமான். வழியிலே மாமனைப் பார்த்தேன். கொஞ்சம் நேரமாயிட்டுது.

ப: அது என்ன கையிலே?

மு: ஒண்ணுமில்லே. பொங்கலுக்கு எசமானைக் கண்டுக் கிட்டுப் போகலாம்னு வந்தேன். (வாழைப்பழங்களை எடுத்து வைக்கிறுன்.)

ப: மாணிக்கம், பழத்தை எடுத்து எண்ணிப் பாரு. எத்தனை சீப்பு, கவனி. என்ன முனியாண்டி, வேலே எல்லாம் ஒழுங்கா முறையா செய்துக்கிட்டு வறியா. என்ன சேதி?

மு: ஆமா, எசமான். ஒழுங்காப் பார்த்துக்கிட்டுத்தான் வரேன். இந்த வருசம் கொஞ்சம் சம்பளத்தைக் கூட்டி. . . .

ப: ஆகட்டும் பார்க்கலாம். நீ கேக்கவா வேணும்?

மு: சரி எசமான்.

மா: சீப்பு ஆறு இருக்கு, அப்பா.

ப: பழம்?

மா: சீப்புக்குப் பத்து பழம், அப்பா.

ப: என்ன முனியாண்டி இது? எல்லாம் பொடிப் பழமா இருக்கே! இனிமே கவனிச்சு வாங்கு.

மு: ஆகட்டும், எசமான்.

ப: மாணிக்கம், அந்த நோட்டுலே குறிப்பைப் பாரு. போன வருஷம் முனியாண்டிக்கு என்ன கொடுத்திருக்கு, அவன் என்ன கொண்டு வந்தான்?

மா: ஆறு சீப்புப் பூவன்பழம்.

ப: என்ன முனியாண்டி! இந்த வருஷம் ஒரு சீப்பாவது அதிகம்

இருக்கப்படாதா? அடுத்த வருஷமாவது, ஞாபகம் இருக்கட்டும்! சரி, முனியாண்டிக்குப் பொங்கல் படி என்ன போட்டிருக்கு?

மா: ஒரு சிரிப்பு.

ப: சரி, முனியாண்டி. இதோ, என்னைப் பார். (முனியாண்டி பார்க்க, பண்ணையார் சிரிக்கிறார்)

மு: நான் வரட்டுமா எசமான்?

சரி, போ முனியாண்டி. வேலையை இன்னம் கொஞ்சம் ஊக்கமாக் கவனி. (முனியாண்டி போகிறான். காத்தமுத்து வருகை)

கா: எசமானுக்குக் கும்பிடு வருது.

ப: யாருடா அது?

கா: காத்தமுத்து. எசமானைக் கண்டுக்கிட்டுப் போகலாம்னு...

ப: பண்ணையாரைப் பாக்க வெறுங்கையை வீசிக்கிட்டாக் வந்தே?

கா: பின்னாலே பெரிய பூசணிக்காய் ஒண்ணு சின்ன மகன் தூக்கிக்கிட்டு வரான். (மகன் வருகிறான்)

ப: காய் பரவாயில்லே; இருந்தாலும் சின்னப் பையன் தூக்கிட்டு வந்திருக்கான். சரி; காத்தமுத்து. இன்னொரு காய் சேர்த்துக் கொண்டு வந்தா என்ன? எசமான் ஒண்ணு கூடவேதான் சாப்பிடட்டுமே. அதுக்கு மனசு வரலியே உனக்கு.

கா: மனசு வராமெ என்ன எசமான்?

ப: அப்படியானா, நாளைக்கு இன்னொரு காய் கொண்டுவந்து போடு. மாணிக்கம்! காத்தமுத்துவுக்குப் பொங்கல் படி என்ன எழுதியிருக்கு?

மா: காத்தமுத்து வரவு, ஒரு பூசணிக்காய். பற்று, ஒரு ஆசீர்வாதம்!

ப: சரி! காத்தமுத்து, இதுமாதிரியே நீ எப்போதும், திருப்தியாக நடந்து வா! நல்லவன் என்று பேர் எடு! உனக்கு ஒரு குறையும் நேராது! சரி, நீ போகலாம்.

(காத்தமுத்து போகிறான்)

மா: அப்பா, இது என்ன நியாயம்? வாங்கறதை மட்டும் கணக்குப் பண்ணி வாங்கறோம். கொடுக்கற அயிட்டம் ஒண்ணுமே இல்லையே.

ப: கொடுக்கமெ என்ன? நீ கவனிச்ச லட்சணமா இது?

மா: நல்லாக் கவனிச்சுதான் கேக்கறேன் அப்பா.

ப: வந்தவங்களுக்கு ஒண்ணுமே கொடுத்து அனுப்பலையோ?

மா: என்ன கொடுத்தோம்? முனியாண்டிக்குப் பொங்கல் படி, ஒரு புன்சிரிப்பு! காத்தமுத்துவுக்கு, ஒரு வாழ்த்து! இன்னும் தரவேண்டியது எழுத்திலே இருக்கு. இதுவா பொங்கல் படி?

ப: ஆமா. இத்தனை நாளும் இப்படித்தானே நடந்து வருது!

மா: இந்த மாமூலைப் பார்க்கத்தான் என்னையும் கூப்பிட்டீங்களா? நல்லா இருக்கு அப்பா, உங்கள் பொங்கல் படி!

## காட்சி-2

மு: நீ போய் நம்ப பண்ணையாரைக் கண்டுக்கிட்டு வந்தியா, காத்தமுத்து?

கா: ஆமா. அப்பவே கண்டுக்கிட்டேனே.

ஆ: என்ன கிடைச்சது உங்களுக்கு, காத்தமுத்து அண்ணே?

கா: எனக்குத்தானே? ஒரு ஆசீர்வாதம்.

மு: உனக்கு என்ன படி அளந்தாரு?

ஆ: அடியேன் ஆறுமுகத்துக்கு ஒரு நல்வழி.

க: அடியேன் கணபதிக்கு ஒரு மணிமொழி.

மு: அப்படியானா, இந்த வருசமும் பொங்கல் படி, போன வருசம் மாதிரியேதான் கிடைச்சிருக்கு.

க: ஆமா. எங்கே அண்ணே, சோலையப்பன்?

கா: அவனை நான் சந்திக்கலையே.

க: அடடே! அதோ பார் அண்ணே, சோலையப்பன் வரான்!

(சோலையப்பன் வருகை)

கா: வாங்க அண்ணே. உங்களைப்பத்திதான் பேசிக்கிட்டு இருந்தோம்.

ஆ: அது என்ன அண்ணே, தலை கனக்குது.

சோ: யாரு தலை கனக்குது? உங்க தலைதானே?

க: சோலையண்ணன் ரொம்ப விகடமாப் பேசுதே!

மு: கிடக்கு, சோலே. அது என்ன உன் தலையிலே மூட்டை?

ஆ: மூட்டை பலமா இருக்கே! உள்ளே என்ன இருக்கு?

சோ: அப்போ உங்களுக்குத் தெரியாதா?

ஆ: தெரியாது அண்ணே.

சோ: அப்போ தெரியாதவங்களுக்குச் சொன்னாலும்தான் தெரியாது!

க: சொல்லுங்க அண்ணே! எங்களுக்குத் தெரியும்.

சோ: அப்போ தெரிஞ்சவங்களுக்குச் சொல்லுவானேன்?

க: நல்ல வேடிக்கை, அண்ணன் பேச்சு! ஒரு வழியும் போகவிடாமெ கட்டிட்டாரு!

சோ: இல்லே கணபதி. இது பண்ணையாருக்குப் போகுது!

ஆ: ரொம்ப சரி. பண்ணையாரை இனிமேல்தான் கண்டுக்கப் போறிங்களா?

சோ: ஆமா. நீங்கள்ளாம் போய் வந்தாச்சா? பொங்கல் படி..

மு: அதை ஏன் கேக்கறே போ! எங்களைவிட, உனக்கு நல்லா நடக்கும். நீ புது ஆளு பாரு. தவிர, உன் மூட்டையும் பலமா இருக்கு!

## காட்சி-3

ப: தம்பி மாணிக்கம், யாரெல்லாம் வந்தது? இன்னும் யார் வரவேணும்? படி பார்க்கலாம்.

மா: (படிக்கிறான்) முனியாண்டி, ஆறு சீப்பு பூவன்பழம்! காத்தமுத்து, பூசணிக்காய்! கறுப்பன், கரும்புக்கட்டு! ஆறுமுகம், இஞ்சிக் கொத்து! கணபதி மஞ்சள் கொத்து! ..இவன் யாரு? சோலையப்பன்.. இன்னம் வரலே போலிருக்கே?





**அப்பா :** ஏண்டா, குழந்தையைத் தூங்கப் பண்ணுடான்னு, இலக்கணப் புஸ்தகத்தை எதுக்கு எடுத்திண்டு வரே?

**பையன் :** உனக்குத் தெரியாது இதன் மகிமை! படிக்க ஆரம்பிச்ச உடனேயே தூக்கம் எங்கேன்னு காத்திண்டிருக்கும்!

எஸ். ஆர். சந்திரன், சென்னை-21.

---

ப: யார் அவன், சோலையப்பனா? ஓகோ, சரிதான்! புது துரை! அவர் லேட்டாத்தான் வருவார்.

மா: (அலுப்புடன்) எப்போ வந்தா என்ன? வந்து வெறுங் கையோட திரும்பப் போறவன் தானே?

ப: என்ன சொன்னே?

மா: (கேலியாக) இல்லை அப்பா! வந்தவங்கள்ளாம் மூட்டை மூட்டையா வாரிக் கட்டிக்கிட்டுதான் போனாங்க. (படபடப்பாக) அப்பா! இங்கே நடப்பது நமக்கு ஷேமம். எல்லாப் பண்ணைகளிலேயும் ஆட்களைக் கூப்பிட்டு, சந்தோஷமாகப் பேசிக் குஷிப்படுத்தி, ஆடம்பரமாகப் பொங்கல் படி கொடுத்து அனுப்பலையா? இங்கே நடக்குதே, இது நீதியா? இது முறையா? தருமந்தானா?

ப: (சிரிப்புடன்) தம்பி மாணிக்கம், உன் பிரசங்கத்தை எல்லாம் சாவகாசமாக் கேக்கறேன். இப்போ கம்முனு இரு.

(சோலை வருகிறான்)

வா அப்பா சோலை! என்ன ரொம்ப சாவகாசமா வருது துரை? என்னது சோலை, அந்த மூட்டைக்குள்ளே?

சோ: பெரிய எசமான் கண்ணாலே பாக்கணும். ஏதோ ஏழையோட காணிக்கை!

ப: எழுது, மாணிக்கம். இந்தப் புது ஆள் சோலைக்குப் பொங்கல் படி, ஒரு மந்தஹாஸம். . இதோ பாரு, சோலை. (புன்னகைபுரிகிறார்.)

சோ: சரி, எசமான், நான் வரட்டுமா? இதோ இருக்கு, இந்த ஏழையோட காணிக்கை! (மூட்டையைக் காலால் எற்றிவிடுகிறான்.)

ப: இந்தா சோலை, என்னது மூட்டையைக் காலால் உருட்டிவிட்டுட்டுப் போறே?

சோ: (பணிவாக) உருட்டிவிடாமெ, பின்னே என்ன செய்யச் சொல்றீங்க, எசமான்?

ப: தெரியாதா உனக்கு? சரி, கிட்டே வா, இப்படி.

ப: (பணிவாகப் பண்ணையாள் போல) எசமான், உங்களைப் பொங்கலுக்குக் கண்டுக்கிட்டுப் போக வந்தேன். இதோ காணிக்கை. (நிமிர்ந்து) இப்படி மரியாதையாச் சொல்லி, பொங்கல் காணிக்கையை எதிரே வைக்கணும். தெரிஞ்சுதா?

சோ: (எசமான் பக்கத்திலிருந்த பெட்டியைத் திறந்து ஐந்து ரூபாய் நோட்டு ஒன்றை எடுத்து) இந்தாப்பா ஏய். பக்கத்திலே வா. பயப்படாதே! பாவம், ஏழை! பொங்கல்படி வச்சுக்கோ. (பணிவாக) இந்த மாதிரிப் பொங்கல் படி வழங்கணும் எசமான்!

ப: (கோபத்துடன்) என்ன சோலை, உன் பாட்டுலே பணத்தை எடுத்து வீசறே?

சோ: எசமானா இருந்தா, இப்படித்தான் கொடுக்கணும். உங்களுக்குத் தெரியாததைக் கத்துக் கிடுங்க, பாவம்.

மா: (சோலையப்பனின் மூட்டையைப் பிரித்துப் பார்த்து) சபாஷ்.

(பண்ணையார் திரும்பிப் பார்க்க, மூட்டையிலே கந்தல் துணி, காகிதத் துண்டு வகையறுவைக் கவனிக்கிறார்)

மா: இதோ உள்ளே ஓலைச் சுருள் ஒன்று இருக்கு, அப்பா. எழுதி இருக்கறதைப் படிக்கட்டுமா? 'அறஞ் செய விரும்பு. ஆறுவது சினம். ஈவது விலக்கேல். தருமமே தலை காக்கும்!'

ப: என்னடா இது, அக்கப் போர்?

சோ: மணி மொழிகள், எசமான்!

மா: சபாஷ்! அப்பா, நல்ல பாடம் படிக்க வச்சான். பலே கைகாரன் நம்ம சோலை. அப்பா, வாய் வார்த்தை வயிற்றுக்கு உதவுமா? பொருள்தான் உதவும். அந்தக் காலத்திலே வரையாது வாரி வழங்கிய வள்ளல்கள் இருந்தார்கள். நம்மால் அப்படிச் செய்ய முடியாமல் போனாலும், இயன்றதைச் செய்வோம். ஏழைகளுக்கு இரங்குவோம். நம்மாலான பொருளுதவி செய்வோம். நம்மை அண்டிப் பிழைக்கும் ஏழைகளை ஆதரிப்பது, நமது கடமையல்லவா? இதை உணர வேண்டாமா?

ப: தம்பி, மாணிக்கம், இன்னும் பேசு. பேசிப் பேசிப் பொழுதைப் போக்கு. உன்னைப்போல் பேசிப் பேசிக் காலம் கழிப்பவர் எத்தனையோ பேர் உண்டு. தம்பி, அதோ அந்தப் பெட்டியைத் திறந்து பார். பார்த்துவிட்டுச் சொல்லு.

மா: (ஆச்சரியத்துடன்) இதென்னப்பா! பணத்தைக் கட்டி முடிச்சுப் போட்டு, பேர் எழுதி வச்சிருக்கே! முனியாண்டி! காத்தமுத்து! இசக்கிமுத்து! ஆறுமுகம்! கணபதி! சோலையப்பன்! இதெல்லாம் என்னப்பா?

ப: எல்லாம் பொங்கல் படி, தம்பி. அவங்களுக்குத் தெரியாமெ, அவரவர்கள் வீட்டுக்குப் போய்ச் சேரும், இந்தப் பண முடிச்சு எல்லாம்!

மா: நிஜமாகவா, அப்பா?

ப: ஆமாம், தம்பி. இதுபோலத்தான் மாமூலா நடந்து வருது! நம்ம ஆட்களுக்கு வேண்டிய உதவி எல்லாம், இப்படித்தான் செய்து வரேன். யாரோ புண்ணியவான் கொடுத்தார்னு வாழ்த்துவாங்க. அது ஒண்ணே போதும், தம்பி! இதுவே வறுமைக்குச் செய்யும் உதவி. பெருமைக்குச் செய்யும் உதவி வேறு விதம்.

மா: அப்பா, இத்தனை நாளும் இது எனக்குத் தெரியாமெ போச்சே. உங்களுக்குப் புத்தி சொல்ல வந்தேனே!

சோ: எசமான், நான் சின்னப் புத்திக்காரன். உங்க பெரிய மனசு புண்பட நடந்துக்கிட்டேன். என்னை மன்னிச்சுடுங்க எசமான்!

ப: தம்பி, மாணிக்கம். உன் தாராள மனப்பான்மையை அறிந்து கொள்ளவே இந்தச் சோதனை நடத்தினேன். உன் கையாலே இந்த வருஷம் பொங்கல் படி வழங்கு. இதுபோல உன் காலத்திலேயும் நடத்து. நம்ப குடும்ப கௌரவத்தைக் காப்பாத்து. சோலை, உடனே, போய் நம்ம ஆட்களை எல்லாம் கூட்டி வா.

(மறைவிலிருந்த பண்ணையாட்கள் வருகை)

மு: எசமானைப் பத்திப் புரிஞ்சுக்காமெ,வித்யாசமாப் பேசிட்டோம். இப்பதான் எங்க கண் திறந்தது. வெளியே நின்று எல்லாத்தையும் கேட்டோம். சென்ற வருஷமெல்லாம் எசமான் அடையாளம் புரியாமெ வேஷம் போட்டு வந்து, பண முடிச்சுக் கொடுத்து, உதவி செய்தது நீங்கதான்னு இப்பப் புரியது. மன்னிக்கணும்!

சோ: சின்ன எசமானுடைய தங்கமான மனசும் தெரிஞ்சுக்கிட்டோம். விரை ஒண்ணு போட, சுரை ஒண்ணு முளைக்குமா?

அ: பெரிய எசமானும், சின்ன எசமானும் நல்லா இருக்கணும்!

கா: பெரு வாழ்வு வாழணும். பொங்கலோ பொங்கல்!

(எல்லோரும் 'பொங்கலோ பொங்கல்' என்று உற்சாகத்துடன் சொல்கிறார்கள்.)



# காற்றடிக்குது, தூள் பறக்குது!

## வி. பி. கிருஷ்ணசாமி

மூன் காலத்திலே காக்காயும் குருவியும் ரொம்பச் சிநேகமா யிருந்தனவாம். ஒன்றை ஒன்று, ''அக்கா, அக்கா'' என்று கூப்பிட்டுக் கொண்டு சந்தோஷமாயிருந்தன. இப்படியிருக்க, ஒரு நாள் இரண்டும் குப்பையைத் தோண்டின. குருவிக்கு ஒரு பொன் துண்டு அகப்பட்டது. அதைக் கொண்டு குருவி ஒரு வீடு கட்டிக்கொண்டது. பிறகு தோசை செய்வதற்கு அரிசி, உளுந்து அரைத்து மூடி வைத்துவிட்டு, ஜலம் கொண்டுவரக் குளத்துக்குப் புறப்பட்டது. காக்கைக்குக் குப்பையில் சாணிதான் அகப்பட்டது. சாணியால் அது வீடு கட்டிக்கொண்டது. தோசைக்கு அரைத்து வைத்துவிட்டு அதுவும் தண்ணீர் கொண்டுவர ஒரு சல்லடையை எடுத்துக்கொண்டு குளத்துக்குப் புறப்பட்டது.

வழியில் 'ஜோ' வென்று மழை பிடித்துக்கொண்டது. காக்கை சல்லடையைக் குடைபோல் தலையில் கவிழ்த்துக்கொண்டது. குருவி, ''எனக்கும் கொஞ்சம் கொடு'' என்று கேட்க, காக்கை ''மாட்டேன்'' என்று சொல்லியது. பாவம்! குருவி நனைந்துகொண்டே போய், குடத்தில் நீர் மொண்டு வந்து, வீட்டுக் கதவைமூடி, தோசை வார்த்துக்கொண் டிருந்தது. காக்கை குளத்தில் சல்லடையைப் போட்டு நீர் மொண்டு தூக்கினதும் எல்லா நீரும் கீழே போயிற்று. சல்லடையை விட்டெறிந்து விட்டு வீட்டுக்கு வந்து சேர்ந்தது. சாணி வீடெல்லாம் மழையில் கரைந்து போயிருந்தது. தோசை மாவெல்லாம் ஒரே சாணி.

மழை பெய்துகொண்டே யிருந்தது. காற்று சுழற்றிச்சுழற்றி அடித்தது. காக்கை, குருவி வீட்டுக்குப் போய் வாசற் கதவைத் தட்டியது.

**''காற்றடிக்குது தூள் பறக்குது**
**கண்ணெல்லாம் குத்துது**
**அக்கா, குருவி அக்கா, கதவைத் திற''**

என்றது காக்கை. 'இது எனக்குக் குடை கொடுக்க மாட்டேன் என்றதே, நான்மட்டும் ஏன் கதவைத் திறக்கவேண்டும்?' என நினைத்து, ''நான் இப்பத்தான் தோசை வார்க்கிறேன்'' என்றது குருவி. காகம் மறுபடியும்,

**''காற்றடிக்குது தூள் பறக்குது**
**கண்ணெல்லாம் குத்துது**
**அக்கா, குருவி அக்கா, கதவைத் திற''**

என்றது. குருவி, ''நான் இப்பத்தான் தோசை திங்கறேன்'' என்றது. காக்கைக்கு ஒரே பசி. தோசை தின்னவும் ஆசை. மறுபடியும்,

**''காற்றடிக்குது, தூள் பறக்குது**
**கண்ணெல்லாம் குத்துது**
**அக்கா, குருவி அக்கா, கதவைத் திற''**

என்றது காக்கை. 'பாவம், போகட்டும்' என்று கதவைத் திறந்துவிட்டது குருவி. காக்கை இறக்கைகளைப் படபடவென்று அடித்துக்கொண்டு வந்து வீடெல்லாம் ஈரமாக்கிவிட்டது. குருவி என்ன செய்ய முடியும்! காக்கையைத் தூக்கி மிளகாய்ப் பானையில் போட்டு மூடிவிட்டது. மறுநாள் குருவி பானையைத் திறந்து பார்த்தால், காக்கை மிளகாய் எல்லாவற்றையும் தின்றுவிட்டு, பானையை அசுத்தம் செய்து வைத்திருந்தது. குருவிக்குக் கோபம் கோபமாய் வந்து, காக்கையை அடித்துத் துரத்திவிட்டது. அன்று முதல் காக்கையும் குருவியும் பேசிக்கொள்வதில்லை.

# செங்கல்பட்டா, இது?


**சம்பந்தம்**

ரெயில் கனவேகமாய்ப் போய்க் கொண்டிருந்தது. வெளியில் பெய்துகொண்டிருந்த பலத்த மழையால், சுள் என்று சாரல் அடிக்கவே அவரவர்கள் ஜன்னல் கதவுகளை விட்டுக்கொண்டார்கள். அந்தப் பெட்டியிலோ ஒரே ஜன நெருக்கடி. ஆங்காங்கு இருவர் இறங்கின இடத்தில் நாலு பேர் மூட்டை முடிச்சுக்களுடன் ஏறிக்கொண்டால் பிறகு நெருக்கடிக்குக் கேட்பானேன்!

அத்தனை நெருக்கடியிலும், 'உம்' கொட்டிக்கொண்டு, சுருட்டிப் படுத்துக்கொண்டிருந்த அந்தக் கிராமத்துப் பையனுக்கு என்னவோ, இடம் விட்டுத்தான் இருந்தார்கள்! தலையில் மப்ளரைக் கட்டிக் கொண்டு அடிக்கொரு தடவை லொக், லொக்கென்று இருமிக்கொண்டிருந்தான் அவன். அனைவருக்கும் அவனைப் பார்த்தாலே பரிதாபமாயிருந்தது.

சிறிது தூரம் சென்ற பிறகு, வண்டியிலிருந்த ஒரு குறும்புக்காரப் பையன், மெதுவாய் ஒரு ஜன்னல் கதவைத் தூக்கிவிட்டான். மழைச்சாரல் சுள்ளென்று உள்ளே அடித்தது. ''யாருடா அது! கதவை விடுடா'' என்று அனைவரும் கத்தினார்கள்.

அப்பொழுதுதான் அந்த நோயாளிப் பையன் சற்றுத் தலையைத் தூக்கினான். 'உம்' கொட்டிக்கொண்டே எதிரிலிருந்த ஒருவரைப் பார்த்து, ''ஏன் ஸார், இது செங்கல்பட்டுக்குச் சரியாய் நாலு மணிக்குத்தானே போகிறது?'' என்றான். ''ஆமாம்'' என்றார் அவர். பிறகு அவன் அப்படியே கண்களை



மூடியவாறு சாய்ந்துகொண்டான். உடனே அவனுக்கு இருமல் வந்து கேவிக்கொண்டு போயிற்று. அவன் பரிதாப நிலையைக் கண்டு அனைவரும் 'த்ஸ த்ஸ' என்றார்கள்.

அதற்குள் மழை விட்டிருந்தது. ஜன்னல் கதவுகளைத் திறந்துவிட்டார்கள். வழியில் நாலைந்து ஸ்டேஷன்களில் நிற்காமல் வண்டி வேகமாய் போய்க்கொண்டிருந்தது.

நடுவில் எப்பொழுதோ கண் விழித்துக் கொண்டான் அந்த நோயாளிப் பையன். "செங்கல்பட்டு தாண்டிவிட்டதா?" என்று கத்தினான். "இல்லை. இல்லை" என்று மறுமொழி கூறினார்கள் அங்கிருந்த அனைவரும் ஒரே சமயத்தில்.

பக்கத்து ஸ்டேஷனில் வண்டி நின்றது. அந்தப் பெட்டியிலிருந்த சிலர் இறங்குவதற்குள்ளாகவே, பள்ளிப் பிள்ளைகள் பலர் ஜன்னல் வழியாக ஏறி உள்ளே தொப் தொப்பென்று குதித்து இடம் பிடித்தார்கள். அவர்கள் அனைவரும் எங்கேயோ உல்லாசப் பிரயாணம் செல்லும் பிள்ளைகள் போல் தெரிந்தது.

அவர்களுள் ஒருவன் அந்தக் கிராமத்துப் பையனை எழுந்து உட்காரச் சொன்னான். மற்றவனோ, அவன் 'உம்' கொட்டுவதைக் கண்டு, "பாவம்! நோயாளி போலிருக்குடா. அப்படியே இருக்கட்டும்" என்று தடுத்துவிட்டான்.

அவர்கள் இரைச்சலைக் கேட்டு, மெதுவாய்த் தலையைத் தூக்கினான் அந்தப் பையன். சரிந்து விழுந்த தன் மப்ளரைச் சரிப்படுத்திக் கொண்டே, "இது செங்கல்பட்டுக்குச் சரியாய் நாலு மணிக்குத் தானே போகிறது?" என்றான். "ஆமாம் ஆமாம்" என்றனர் அந்தப் பிள்ளைகள்.

பிறகு வண்டி நகர்ந்து ஓட ஆரம்பித்தது. சற்று நேரம் கழித்து மறுபடியும் தலையைத் தூக்கினான் அந்தப் பையன். "செங்கல்பட்டு வந்ததும் கொஞ்சம் சொல்றீங்களா?" என்று கெஞ்சும் குரலில் கேட்டான். "ஓ, அவசியம் சொல்றோம். நாங்களும் அங்கே தானே இறங்கப் போகிறோம்!" என்றார்கள் அந்தப் பிள்ளைகள்.

தன் தலைமாட்டில் ஒரு சிறு பெட்டியையும் பழக்கூடையையும் வைத்திருந்தான். அவைகளைக் கெட்டியாகப் பிடித்துக்கொண்டே, ஒரு தடவை லொக் லொக்கென்று இருமித் தீர்த்தான்.

மறுபடியும் மழை 'பட பட' வென்று வந்தது. ஜன்னல் கதவுகளை விட்டுக்கொண்டார்கள். அப்புறம் அந்த ஸ்டேஷன்களில் வண்டி நிற்காது வேகமாய்ச் சென்றது.

கடைசியில் ரெயில் செங்கல்பட்டு ஸ்டேஷனில் வந்து நின்றது. அந்தப் பெட்டியிலிருந்த பிள்ளைகள் அனைவரும் 'திபு திபு' வென்று இறங்கினார்கள். ஆனால் அந்த நோயாளிப் பையன் அப்பொழுது ஆழ்ந்து தூங்கிக்கொண்டிருந்தான்!

அவனைப் பார்த்துவிட்டு, "எழுந்திருடா எழுந்திரு. செங்கல்பட்டு வந்துடுத்து" என்று எழுப்பினான் ஒரு மாணவன். மற்றொருவன், அவனுக்கு உதவியாய்ப் பழக்கூடையையும் பெட்டியையும் கையிலெடுத்துக்கொள்ள, "ஆமாம், சீக்கிரம் இறங்கு. இதோ இவைகளை நான் இறக்கி வைக்கிறேன்" என்றான்.

"ஆமாம். ஆமாம். அவன் அடிக்கடி கேட்டுக்கொண்டிருந்தானே!" என்றார்கள் மற்றவர்களும்.

அப்பொழுதுதான். "இது செங்கல்பட்டா! மணி நாலுதானே!" என்று அலறிக்கொண்டே கண் விழித்தான் அவன். "ஆமாம். இறங்கு சீக்கிரம்" என்றார்கள். ஆனால் அவனோ சாவகாசமாய், தன் மப்ளரிலிருந்த முடிச்சு ஒன்றை அவிழ்த்துக் கொண்டே, "ஏன் என்னை இங்கே செங்கல்பட்டிலேயே இறங்கச் சொல்றீங்க? வண்டி சரியாய் நாலுமணிக்குச் செங்கல்பட்டுக்கு போகிறது என்றார்கள். நான் சரியாய் நாலு மணிக்கு மாத்திரை ஒன்று சாப்பிடவேணும். அதற்காக எல்லாரிடத்திலும் சொல்லிவைத்தேன். நான் நேரே எழும்பூருக்கு அல்லவா போகவேண்டும்!" என்றான்.

அதைக் கேட்ட அந்த மாணவன் கையிலிருந்த பழக்கூடையும் பெட்டியும் மெல்ல நழுவின. அங்கிருந்த மற்றவர்கள் முகத்திலும் அசடு வழிந்தது.



# பரிசு

## ஹரிசரண்

### 1

நாட்டுப்புறம் என்றாலே பட்டணத்திலுள்ளவர்களுக்கு ஓர் இளப்பம். அதிலும் படிக்கும் சிறுவர்களைப்பற்றிக் கேட்கவேண்டுமா? சந்தானத்துக்கு இன்னதென்றே புரியவில்லை.

சந்தானம் நாட்டுப்புறத்தில் உயர்தர ஆரம்பப் பாடசாலையில் படித்துவிட்டு மேல்படிப்புப் படிக்கப் பட்டணம் வந்திருக்கிறான். ஓர் உயர்தரப் பாடசாலையில் சேர்ந்தான். தலைமை ஆசிரியர் அறையிலிருந்து, பியூன் அவனை அவனுடைய வகுப்பு அறையில் கொண்டுவிட்டான்.

வட்டமான குடுமி. நன்கு வாரி விடப்பட்ட பின்னல். அரையில் துண்டு. நெற்றியில் நாமம். காதுகளில் கடுக்கன். மிருகக் காட்சி சாலையில் புதிதாய் ஏதோ ஒரு மிருகத்தைப் பார்க்கிறமாதிரி தான் பார்த்தார்கள் அத்தனை பிள்ளைகளும். இடைவேளை மணி அடித்ததுதான் தாமதம். அத்தனை பிள்ளைகளும் வந்து அவனைச் சூழ்ந்துகொண்டு விட்டார்கள். ஒரே சிரிப்பு, கும்மாளம். எத்தனை விதமான விஷமம் உண்டோ அத்தனையும் செய்து தீர்த்து விட்டார்கள். ஒருவன் அவன் கடுக்கனைத் தொட்டுப் பார்த்தான். ஒருவன் பின்னலில் ஒரு கயிற்றைக் கட்டிவிட்டு மாட்டை ஓட்டுகிற மாதிரி 'ஹை! ஹை!' என்று பிடித்து இழுத்தான். ஒருவன் நாமத்தை உற்று நோக்கினான். இன்னும் எத்தனையோ விதங்களில் அவனைச் சித்திரவதை செய்தார்கள் அந்தப் பிள்ளைகள்.

சந்தானமும் எவ்வளவோ அடக்கிப் பார்த்தான். பொறுமைக்கும் ஓர் எல்லை உண்டல்லவா?

''பசங்களா! ஜாக்கிரதை! நான் இங்கே உங்கள் விளையாட்டுக் கருவியாக வரவில்லை. நான் மற்றவர்களிடம் மரியாதை வைத்திருக்கிறேன். அதேபோல் மற்றவர்களும் என்னிடம் நடந்துகொள்ள வேண்டுமென்று எதிர்பார்க்கிறேன்'' என்றான்.

''அடடே! பரவாயில்லையே!

படித்ததையும் கேட்டதையும் அப்படியே ஒப்பிக்கிறனே'' என்று சொல்லிவிட்டு இடி இடியென்று சிரித்தார்கள் மற்றவர்கள்.

''அதெல்லாம் ஏட்டுச் சுரைக் காய், தம்பி!'' என்று சொல்லி விட்டு ஒரு பையன் மீண்டும் அவன் பின்னலை இழுக்கப் போனன்.

ஆனல் சந்தானம் அந்தப் பையனுடைய கையைக் கெட்டி யாகப் பிடித்துக்கொண்டு விட்டான்.

அசந்துவிட்டான் அந்தப் பையன். சாதாரணப் பிடியாகவா இருந்தது அது! ''இரும்புப் பிடி டோய்! என்றுதான் கத்தினன் அவன்.

''கையையா பிடிக்கிருய்?'' என்று சொல்லிக்கொண்டு அவனை விடுவிக்கப் போனன் ஒரு பையன். அவனுடைய தலையில் ஓங்கி ஒரு குட்டு வைத்தான் சந்தானம்.

''அம்மாடீ!'' என்று தலையில் கையை அழுத்திக்கொண்டு உட் கார்ந்துவிட்டான் அந்தப் பையன்.

அவ்வளவுதான்! ''நாட்டுக் கட்டைடோய்!'' என்று சொல்லிக் கொண்டு மற்றப் பிள்ளைகள் மூலைக் கொருவராய் ஓடி போய்விட்டார் கள்.

உண்மையிலேயே இந்தப் 'பிடி'யும் 'குத்து'ம் அந்தப் பிள்ளை களுக்கு இவனிடம் ஒரு பயத்தை உண்டுபண்ணிவிட்டன. அவ்வளவு தான். தனிப்பட்ட முறையில் ஒவ் வொருவரும் இவனிடம் வந்து சிநேகம் செய்துகொள்ள ஆரம் பித்துவிட்டார்கள்.

வலிமையில் மட்டுமல்ல. படிப்பி லும் சந்தானம் நல்ல 'கெட்டி' யாகத்தான் இருந்தான். பத்து நிமிஷம் முன்னதாகவே பள்ளிக் கூடத்திற்கு வருவான். பாடசாலை விட்ட பிறகு பத்து நிமிஷம் கழித் துத்தான் வீட்டிற்குச் செல்வான். எல்லாப் பாடங்களிலும் சந்தானம் தான் முதல். ஆசிரியர்கள் எல்லோருமே அவனைப் பாராட்டி ஞர்கள்.

ஆனல் அவனிடம் ஒரு குறை மட்டும் இருந்தது. எல்லோரையும் நேசம் செய்துகொண்டான். எல் லோரையும் ஒரே மாதிரி மதித்து விட்டான். அவர்களில் கெட்டவர் கள், படிக்க விருப்பமில்லாதவர் கள், விஷமக்காரர்கள் பலர் இருப் பார்களே என்பதைப்பற்றி அவன் கவலைப்படவே இல்லை. அவன் பட்டணத்துக்குப் புதிதாகையால் அவனுடைய உபாத்தியாயர் இது பற்றி இரண்டொரு தடவை அவனை எச்சரித்தார். ஆனல் அவன் அதைப் பொருட்படுத்த வில்லை.

## 2

ஒரு நாள் காலை வழக்கம்போல் சந்தானம் பள்ளிக்கூடத்திற்கு வந்துகொண் டிருந்தான். அப் பொழுது அவனுடைய நண்பர்கள் பலர் அவனிடம் வந்தார்கள்.

''என்ன, விஷயம் கேள்விப் பட்டாயல்லவா?'' என்றன் ஒருவன் சந்தானத்தை நோக்கி.

''இல்லையே!''

''பொய் சொல்லுகிருய்'' என்றன் இன்னெருவன் விஷமச் சிரிப்புடன்.

''நிஜமாகவே தெரியாது'' என்றன் சந்தானம்.

''எப்பொழுது பார்த்தாலும் புத்தகத்தையே வைத்துக்கொண்டு அழுதுகொண்டிருந்தால் இதெல் லாம் எப்படித் தெரியப் போகி றது?''

''அது கிடக்கட்டும். என்ன விஷயம் சொல்லேன்.''

''சமுத்திரக் கரையில் இது வரையில் யாருமே கண்டிராத அவ்வளவு பெரிய பாம்பு ஒன்றை அடித்துப் போட்டிருக்கிருர் களாம்.''

''நிஜமாகவா?''

''பொய் எதற்குச் சொல்லப் போகிறேம்! நாங்கள் அதைப் பார்க்கப் போகிறேம். நீயும் வருகிருயா, என்ன?''

''ஊஹூம். பள்ளிக்கூட மாயிற்றே!''

''அட, நீ ஒருவன். அந்தப் பள்ளிக்கூடம் எப்பொழுதும்தான் இருக்கிறது. எங்கே போய் விடுகிறது? நாளைக்குப் போனல் போகிறது ''

''உபாத்தியாயர் அடிப்பாரே!''




''எப்பொழுதுதான் உபாத்தியாயர் அடிக்காமல் இருக்கிருர்?''

''வீட்டில் அப்பாவுக்குத் தெரிந்தால் அடிப்பாரே!''

''இதெல்லாம் அப்பாவுக்குத் தெரிய வேண்டுமா, என்ன?''

''அவ்வளவென்ன? இப்பொழுது பாடசாலைக்குப் போய் விட்டு, சாயங்காலம் போய்ப் பார்த்தால் போகிறது.''

''உம்! என்ன ஏதாவது யோசனே, கீசனே இருந்து பேசுகிருயா இல்லையா? சந்தானம் வருவதற்காகச் சாயங்காலம் வரையில் அதை அங்கேயே வைத்திருப்பார்கள் என்று எதிர்பார்க்கிருயா?''

சந்தானம் சிறிது யோசித்தான்.

''இங்கிருந்து சமுத்திரக் கரை எவ்வளவு தூரம் இருக்கிறது?''

''அதெல்லாம் ரொம்பத் தூரமில்லை. போய்ப் பார்த்துவிட்டு ஒரு மணியில் திரும்பி வந்துவிடலாம்'' என்ருர்கள் அந்தப் பையன்கள்.

''சரி! அப்படியாஞல் போய்த்தான் வருவோம்'' என்ருன் சந்தானம்.

''சபாஷ்!'' என்று சொல்லிக்கொண்டே அவர்கள் வெகு வேகமாக முன்னே சென்ருர்கள். அவர்கள் பின்ஞல் சந்தானமும் சென்ருன்.

## 3

எல்லோரும் சமுத்திரக் கரையை வந்தடைந்தார்கள்.

அங்கே பாம்பைக் காணேம்.

''எங்கே பாம்பு?'' என்ருன் சந்தானம்,

பிள்ளைகளெல்லோரும் 'கொல்' லென்று சிரித்தார்கள்.

அவர்கள் முகத்தில் தோன்றிய விஷமச் சிரிப்பைப் பார்த்தவுடனே சந்தானத்துக்கு ஒருவாறு விஷயம் புரிந்துவிட்டது. உடனே அவனுக்குக் கோபம் வந்துவிட்டது.

''இப்படிப் பாம்புக் கதை ஒன்றைக் கட்டிவிட்டு என்னை ஏமாற்றியதில் உங்களுக்கென்ன லாபம் வந்துவிட்டது?'' என்ருன் சந்தானம்.

''என்ன வரவில்லை? சரியான வேளைக்குப் பாடசாலைக்குப் போக முடியாதபடி செய்தோம்'' என்ருன் ஒருவன்.

''அம்மாதிரிச் செய்ததில் உனக்கென்ன லாபம்?''

''லாபம்தான். எங்களைப்போல் உன்னையும் லேட்டாகப் பள்ளிக்கூடம் போகும்படி செய்தோம். நீ ஒழுங்காகப் பாடசாலைக்குப் போய், நன்ருகப் படிப்பதால்தானே எங்களுக்குக் கெட்ட பெயர்? இனி நீ நல்ல பெயர் எடுக்க நாங்கள் விடமாட்டோம்.''

''இதை இப்படியே நான் போய் உபாத்தியாயரிடம் சொல்லப் போகிறேன்.''

"அதுதான் முடியாது. இன்று ஒரு முடிவு செய்துகொண்டுதான் உன்னை இங்கே தனிமையான இடத்துக்கு அழைத்துக்கொண்டு வந்திருக்கிறோம். முதலில் இதை நீ யாரிடமும் சொல்லவில்லை என்று சத்தியம் செய்யவேண்டும்."

"முடியாது."

"என்ன சொல்கிறாய்?"

"முடியாது" என்று சொல்லிக் கொண்டே சந்தானம் போக ஆரம்பித்தான்.

"அதெல்லாம் உன்னைப் போக விடமாட்டோம்" என்று எல்லோரும் அவனைப் போகவிடாது சூழ்ந்துகொண்டுவிட்டார்கள்.

சந்தானத்துக்குக் கோபம் வந்து விட்டது.

"சோதாப் பயல்களா! வழி விடப்போகிறீர்களா, இல்லையா?" என்று இரைந்தான்.

"சோதாப் பயல்கள் என்றா சொல்கிறாய்? துண்டிக்க வேண்டும் இவனது நாக்கை!" என்றான் ஒருவன்.

"ஆமாம்! நம்மைக் கேவலமாகப் பேசிய இவனைச் சும்மா விடக் கூடாது" என்று ஒருவன் சந்தானத்தை அடிக்க வந்தான்.

உடனே சந்தானம் அவனை ஒரு தள்ளுத் தள்ளினான். மூன்று கெஜத்துக்கு அப்பால் போய் விழுந்தான் அந்தப் பையன்.

இன்னொருவன் அடிக்க வந்தான். அவனையும் அப்படியே தள்ளினான். மற்றவர்கள் ஒரே சமயத்தில் அவன்மீது பாய்ந்தார்கள். ஒரு குத்து விட்டு எல்லோரையும் உதறித் தள்ளினான். நான்கு கெஜத்துக்கு அப்பால் போய் விழுந்தார்கள்.

இவன் அருகில் நின்று கைச் சண்டைபோட முடியாதென்பதைக் கண்டு கொண்டார்கள். உடனே தங்களிடம் இருந்த புத்தகங்களை அவன்மீது வீச ஆரம்பித்தார்கள்.

பூகோளம், இயற்கை, கணக்கு, ஆங்கிலம், தமிழ் எல்லாப் புத்தகங்களையும் வீசி விட்டார்கள். நோட்டுப் புத்தகங்களையும் வீசி விட்டார்கள். எல்லாவற்றையும் சந்தானம் வெகு சாமர்த்தியமாய்த் தடுத்து அவற்றைக் கடலில் விழும்படிச் செய்துவிட்டான்.

இனி அவர்களிடம் புத்தகமே இல்லை.

இதற்குள் ஒருவன் பின் பக்கமாக வந்து சந்தானத்தின் கையிலிருந்த புத்தகங்களை 'லபக்' கென்று பிடுங்கிக்கொண்டுவிட்டான். உடனே சந்தானம் அதைப் பிடுங்கப் போனான். அதற்குள் அவற்றை அவன் சந்தானத்தின் முகத்தை நோக்கி வீசி எறிந்தான். ஆனால் சந்தானம் குனிந்து கொண்டான். அதனால் குறி தவறி எதிரிலிருந்த கண்ணன் என்ற பையனின் முகத்தில் போய் விழுந்தது. அதில் இருந்த ஜாமெண்டரி பாக்ஸ் கண்ணனின் நெற்றியில் ஆழப் பதிந்து ரத்தம் வந்துவிட்டது. அவன் 'ஐயோ!" என்று அலறிக் கொண்டு மயக்கமாய்க் கீழே விழுந்து விட்டான்.

கண்ணன் விழுந்ததும் பயந்து போய் மற்றப்பிள்ளைகள் ஓடி விட்டார்கள்.

சந்தானத்துக்கு மனசு தாளவில்லை. உடனே சிறிது ஜலம் கொண்டுவந்து அவன் முகத்தில் தெளித்து, "அப்பா! கண்ணா! எழுந்திருடா அப்பா!" என்றான்.

கண்ணன் மெதுவாகக் கண்களைத் திறந்தான்.

"அப்பாடா" என்று சந்தானம் தாராளமாக மூச்சு விட்டானோ இல்லையோ, அந்த வழியாக இரண்டு போலீஸ்காரர் வந்தார்கள்.

கண்ணன் நெற்றியிலிருந்து ரத்தம் பெருகுவதையும், சந்தானம் அவனுடைய முகத்தைத் தடவிக் கொடுப்பதையும் பார்த்த அவர்கள், "என்ன? சண்டை போட்டு அடித்து விட்டாயா?" என்று கேட்டார்கள்.

"நான் அடிக்கவில்லை" என்றான் சந்தானம்.

உடனே ரத்தக் கறை படிந்திருந்த நோட்டுப் புத்தகத்தை எடுத்து, "இது யாருடையது?" என்று கேட்டார்கள்.

"என்னுடையதுதான்" என்றான் சந்தானம்.

"சரிதான். அப்படியானால் சந்தேகமே இல்லை" என்று

சொல்லிவிட்டு, ஒரு போலீஸ் சேவகன் கண்ணனைத் தூக்கிக்கொண்டான். மற்ருெருவன் சந்தானத்தைப் பிடித்துக்கொண்டான்.

"உம்! நட, போலீஸ் ஸ்டேஷனுக்கு" என்ருர்கள்.



## 4

என்ன ஆச்சரியம்!

சந்தானம் போலீஸ் ஸ்டேஷனுக்குள் கொண்டுவந்து நிறுத்தப்பட்டதுதான் தாமதம், கடற்கரையில் இவனுடன் சண்டை போட்டுவிட்டு ஓடிவந்த அத்தனை பையன்களும், "சந்தானம்! தெரியாமல் செய்துவிட்டோம். மன்னித்துவிடு. இப்பொழுது ஏற்பட்டுள்ள பெரிய ஆபத்திலிருந்து நீதான் எங்களைக் காப்பாற்றவேண்டும்" என்று மன்ருடினுர்கள்.

சந்தானத்துக்கு ஒன்றுமே புரியவில்லை. எப்படிப் புரியும்?

கண்ணன் விழுந்துவிட்டான் என்று பயந்துபோய் ஓடி வந்தார்களல்லவா?

அதே சமயத்தில் ஓர் நகைக் கடையில் சிலர் புகுந்து திருட முயற்சித்திருக்கிருர்கள். கடைக்காரர்கள், "திருடன்! திருடன்!" என்று கூச்சல் போட்டிருக்கிருர். இதைக் கேட்டுத் திருடர்கள் தப்பித்துக்கொண்டு ஓடிவிட்டார்கள். அவர்களைத் தேடிப் பிடிக்கப் போலீஸ்காரர்கள் ஓடி வந்தார்கள். அந்தச் சமயத்தில்தான் இந்தச் சிறுவர்கள் தலை தெறிக்கும் வேகத்தில் ஓடிக்கொண்டிருந்தார்கள். இதைப் பார்த்துவிட்டு இவர்கள்தான் திருடர்கள் என்று மடக்கிப் பிடித்துக்கொண்டார்கள்.

சிறுவர்கள் எவ்வளவு சொல்லியும் கேட்கவில்லை. போலீஸ் ஸ்டேஷனில் கொண்டு வந்து அடைத்துவிட்டார்கள்.

அந்தச் சமயம்தான் அந்த இரண்டு போலீஸ்காரர்களும் கண்ணன், சந்தானம் ஆகியோருடன் அங்கே வந்துசேர்ந்தார்கள்.

சந்தானம் நடந்த விஷயத்தையெல்லாம் போலீஸ் அதிகாரியிடம்

**வாத்தியார்:** வேணு, பண்டை மக்கள் தமிழை எவ்வாறு வளர்த்தனர்?

**வேணு:** காவிரி நீரைக் கொண்டு, ஸார்?

— **அ. கவியபெருமாள், மேட்டூர்.**

ஒன்று விடாமல் சொன்ஞன். அவன் வார்த்தையில் நம்பிக்கை ஏற்பட்டு, மற்றச் சிறுவர்களை நோக்கி, "இனி சந்தானத்திடம் 'வாலை' ஆட்டினீர்களோ, சரியான தண்டனை கிடைக்கும்" என்று எச்சரித்து அனுப்பினுர் போலீஸ் அதிகாரி.

அது முதல் அந்தச் சிறுவர்கள் நல்ல புத்தியுடன் ஒழுங்காகப் பள்ளிக்கூடம் போய் நன்ருகப் படித்து வந்தார்கள். சந்தானமும் 'துஷ்டரைக் கண்டால் தூர விலகு' என்றபடி, கெட்ட பிள்ளைகளுடன் சேராமல் வழக்கம்போல் நன்ருகப் படித்துவந்தான்.

எதிரியாக இருந்தாலும் கண்ணனை ஆபத்தில் காப்பாற்றியதற்காகச் சந்தானத்துக்கு அவன் தந்தை சிறந்த பரிசு ஒன்று அளித்தார்.

# கண்டி நகர்

ப. ப. சுந்தரராஜா

நான் வசிக்கும் கண்டி நகர் இன்று மலைப்பிரதேசத்தின் தலைநகராகத் திகழ்கின்றது. இயற்கை வளம் மிக்க இந்நகர் நாயக்க மன்னன் காலத்தில் இலங்கையின் ராஜதானியாகவும் இரண்டாவது உலக மகாயுத்தத்தின் போது தென்கிழக்கு ஆசியாவின் ராணுவத் தலைமை ஸ்தானமாகவும் இருந்து வந்துள்ளது. பழமையும் புதுமையும் சேர்ந்து புது மெருகுடன் காட்சியளிக்கும் இந்த நகரிலுள்ள சில விசேஷங்களை மாத்திரம் இந்தக் கட்டுரையில் குறிப்பிடுகிறேன்:

**தாலதா மாளிகை:** புத்தரின் பல் சேமிக்கப்பட்டு வைத்திருக்கும் ஒரு கோயில். இந்தக் கோயிலே, சிங்களத்தில் "தாலதா மாளிகை" என்று வழங்கப்படுகிறது. இந்தக் கோயிலில் சில பாகங்கள் ஒரே கல்லினால் - அதாவது மலையைக் குடைந்து செய்யப்பட்டுள்ளது. ஆதி கண்டியர்களின் வாழ்க்கையைச் சுவர் ஓவியமாகவும் இங்கே காணலாம். மேலும் களை பொருந்திய திருமுகத்தையுடைய புத்தரது பல வெண்கலச் சிற்பங்களையும் காணலாம்.

**நூதன பொருட் காட்சிசாலை:** இந்தக் காட்சி சாலையில் புதை பொருள் ஆராய்ச்சியாரால் கண்டு பிடிக்கப்பட்ட பல பழைய பொருள்களைக் கண்டு களிக்கலாம். மிக முக்கியமாக இந்தக் காட்சி சாலையில் கண்டியரின் ஆதி நாகரிகத்தை உணர்த்தும் பல சின்னங்கள் காணப்படுகின்றன. அந்தக் காலத்திலே கண்டியில் வாழ்ந்த சிற்பிகள் தந்தத்தினால் ஆன பல சிலைகளைச் செதுக்கி இருக்கிறார்கள். இவைகளுள் பலவற்றையும் இங்கே காணலாம். மேலும் பல பழங் காலத்துப் பொருள்களும் இங்கே இடம் பெற்றுள்ளன.

**பேராதனைப் பூங்கா:** கண்டியிலிருந்து சுமார் இரண்டு மைல்களுக்கப்பாலுள்ள இந்தப் பூங்கா இயற்கையன்னையின் கண்போன்று விளங்குகிறது. இதை அணைத்த வண்ணம் 'மகாவலி கங்கை' என்னும் ஆறு ஓடுகின்றது. இதனால் இந்தப் பூங்கா செழிப்பில் உயர்ந்து விளங்குகிறது. சமீபத்தில் இலங்கைக்கு விஜயம் செய்த இரண்டாம் எலிஸபெத் மகாராணியார் தம் ஞாபகார்த்தமாக ஒரு சிறிய செடி நட்டார். மேலும் ஆதியிலிருந்தே இந்தப் பூங்காவிற்கு விஜயம் செய்யும் மற்ற ராஜ வம்சத்தினரும் தமது ஞாபகார்த்தமாக இங்கே சிறு செடிகளை நட்டிருக்கிறார்கள். இதனால் இது 'ராஜ பூங்கா' [Royal Botanical Gardens] என்றும் வழங்கப்படுகிறது.

**பேராதனை பல்கலைக் கழகம்:** கண்டியிலே மிகப் பெரிய கட்டிடங்களுள் ஒன்று பேராதனை பல்கலைக் கழகம். இங்கே பல்லாயிரக் கணக்கான மாணவர்கள் கல்வி பயிலுகிறார்கள். இந்தக் கட்டிடம் நவீன முறையில் கட்டப்பட்டுள்ளது. மாணவர்களின் தொகையும் வருஷந்தோறும் அதிகரித்துக் கொண்டு வருகிறபடியால் இங்கே மேலும் மேலும் பல கட்டிடங்களைக் கட்டுகிறார்கள். மாணவர்களின் ஹாஸ்டலில் ஒரு பகுதியைப் புகைப்படத்தில் காணுங்கள்.


**கண்டி 'பெரஹரா':** இவ்விழா வருஷந்தோறும் கண்டியில் நடைபெறுகிறது. இதைப்பற்றிக் கதை ஒன்றும் வழங்கி வருகிறது, இலங்கையை 'வங்க நாசிகநாதன்' என்ற அரசன் ஆண்டு வந்தானாம். அப்பொழுது அந்த அரசனுக்கும் சோழ மன்னனுக்கும் இடையில் போர் மூண்டது. அந்தப் போரில் சோழ நாட்டிலிருந்து வந்த படை வீரர்கள் பன்னீராயிரம் பேர் சிங்கள வீரர்களைச் சிறைப் பிடித்துச்

சென்றனர். 'வங்க நாசிகநாதன்' இறக்க, அவன் மகன் 'கஜபாகு' பட்டத்துக்கு வந்தான். இவனுடைய படைத் தலைவன் 'நீலன்' மந்திர வித்தையில் வல்லவன். அவன் சோழ மன்னனைத் தன் வசப்படுத்தினான். பின்பு சிறைப்பட்டிருந்த சிங்கள வீரர்களை மீட்டதுடன் சோழ நாட்டு வீரர்களையும் சிறைப் பிடித்து, தன் நாட்டிற்குக் கொண்டு சென்றான். இந்த வெற்றியையே 'பெரஹரா' என்று இப்போது கொண்டாடுகிறார்கள்.

இவ் விழாவின்போது ஆதி கண்டியரது நடனமும் நடைபெறும். இதில் ஆண்கள் மட்டுமே கலந்துகொள்வார்கள். 'பெரஹரா' இரவில் கண் கவர் காட்சிகளுடன் நடைபெறும். யானைகள் அலங்கரிக்கப்பட்டு ஊர்வலம் செல்லும் காட்சி கண்ணுக்கு விருந்தாய் அமையும்.

தெப்பக்குளம்: இந்தக் குளம் 'கண்டிக் குளம்' (Kandy Lake) எனப்படும். இந்தக் குளம் செயற்கையாகக் கட்டப்பட்டதென்றால் உங்களுக்கு ஆச்சரியமாக இருக்கும். இந்தக் குளத்தைப் பல வருடங்களாகப் பாடுபட்டுக் கட்டிய அரசன் ஸ்ரீ விக்கிரம ராஜசிங்கன். இந்தக் குளத்தை ஒரு முறை

பூதங்கள் தண்ணீர் கொண்டு வந்து நிரப்பின' என்று கூறப்பட்டுள்ளன. இதை ஒரு முறை








தாலதா மாளிகை—
கண்டி நகர்.

'பெரஹரா' திருவிழாக் காட்சி.

ஆதி கண்டியர் நடனம்.

சுற்றி வந்தால், மூன்று மைல் என்று கணக்கிட்டிருக்கிறார்கள். மாலை வேளையில் இந்தக் குளத்தைச் சுற்றித் திருவிழாவைப் போன்று ஆடவரும் பெண்டிரும் குழந்தைகளும் உல்லாசமாகத் திரிவார்கள்.







இந்த ஆண்டு மே மாத இறுதியில் கண்டியில் மஞ்சள் நிற மழை பெய்ததை அறிந்து இருப்பீர்கள். இம்மழை தலதா மாளிகையும் இந்தக் குளத்தையும் சுற்றியே பெய்தது.

வானளாவும் உயர்ந்த மலைகளிலிருந்து 'சலசல' வென்று நாதம் பாடும் மகாவலி கங்கையாறும் கண்ணுக்குக் குளிர்ச்சி தரும் இயற்கைக்காட்சிகளும் மலிந்த மலைப் பிரதேசம் கண்டி. 'யானைக் காடு' என்ற பெயரும் இலங்கைக்கு உண்டு. கண்டி, அநுராதபுரம் போன்ற இடங்களில் யானைகள் அதிகம். யானைகளைக் கண்டியில் மகாவலி கங்கையாற்றிலும் 'கட்டுகஸ் தோட்டா' என்ற இடத்திலும் குளிப்பாட்டுகிறார்கள். யானை ஒன்று குளிப்பதை இந்தப் புகைப்படத்தில் கண்டு களி கொள்ளுங்கள்.

கண்டியைப் பற்றி எழுதிவிட்டேன். ஆனால் வாயினால் வர்ணிக்க முடியாத வளமிக்க கண்டி நகரை, உங்களுக்கு இலங்கை வரச் சந்தர்ப்பம் நேருகையில் கண்டு மகிழுங்கள்!

பேராதனை பல்கலைக் கழகம்

கண்டி தெப்பக்குளம்.

மகாவலிக் கங்கையில் நீராடும் யானை.

# எங்கள் பகுதி

## ரேடியோ சிறுவர் நிகழ்ச்சிகள்—என் கருத்து

அன்புள்ள ஆசிரியருக்கு,

நான் முன்பு எழுதிய கடிதம் கிடைத்திருக்கலாம்.....சென்னை (தமிழ்) ராஜ்யத்தில் கிராமங்களே அதிகம் என்பதும், அதிலும் மின் சாரமே எட்டிப் பார்க்காத கிராமங்கள் பல என்பதும் ஏழைகளே அதிகம் என்பதும் தங்களுக்குத் தெரிந்த விஷயம். அப்படி இருக்கும்போது சாதாரண ஏழை வாசகனே, அல்லது மின்சார வசதி பரவாத கிராமத்து வாசகனே ரேடியோவைக் கேட்டு விமரிசனப் போட்டியில் கலப்பது என்பது கடினமான காரியம். ரேடியோ இருப்பவரிடம் சென்று முற் கூறியோர் குறிப்பிட்ட நிகழ்ச்சியைக் கேட்பதும் தயக்கமான செயல். ஆகவே விமரிசனத் திட்டத்தில் குறைந்த தொகையினரே கலக்கமுடியும். தயவுசெய்து வாசகரில் ஒருவனுன என் ஆக்ஷேபத்தைத் கண்ணனில் வெளியிட்டால், ஆக்ஷேபமிருந்தும், தயங்கும் குழந்தைகளும் தைரிய மாகத் தங்கள் கருத்தைத் தெரிவிப்பார்கள். மன்னிக்கவும்.

—எஸ். ராமநாதன், அலைவந்தபுரம்.

## மாற்றம் தேவைதான்!

**மா**ற்றம் தேவைதான். ஆம்; நிச்சயமாக வேண்டும். சந்தேகமே இல்லை. அம்மாற்றம் நல்லதைப் போக்க வல்லதாக இருக்கக்கூடா தல்லவா? மாற்றம் செய்கிறேம் என்று எல்லாவற்றிலும் - நல்லவை களையும்தான் - மாற்றம் செய்துவிட்டால் மாற்றம் செய்துவிட்டோம் என்ற திருப்தியே தவிர பயன் ஒன்றுமிருக்காது.

கண்ணனில் மாற்றங்கள் செய்யுங்கள். அதைப்பற்றிக் கவலையில்லை. ஆனால் எங்களுக்கு ஏமாற்றம் தருவதாக இருக்கக்கூடாது என்பதைக் கூறுகிறேன். நான் மட்டுமல்ல; வாசகர்கள் அனைவரின் சார்பிலும் கூறுகிறேன். நீங்கள் என்ன வேண்டுமானுலும் மாற்றுங்கள். நல்லதை யும் மாற்றிவிடாதீர்கள்.

சித்திரத் தொடர்கதை வேண்டும். இரண்டு தொடர்கதைகள் வேண்டும். பாலர் கவியரங்கம் வேண்டும். ஓர் இதழில் கவிதைகள் இரு பக்கங்கள் இடம் பெறின் இன்னும் நல்லது. விருப்பம் இருந்தால் கண்ணனில் பக்கங்கள் இன்னும் வேண்டுமானுல்—எங்கள் பகுதிக்கு அரைப்பக்கமும் இன்னும் சொல்லப்போனுல் நிருபர் பகுதி இல்லா விட்டாலும் கவலையில்லை—சேருங்கள். மாற்றமோடு மாற்றமாகக் குறிப்பிட்ட தேதிக்கு முன்பாக-வாரம் ஒரு முறையாக்கி-எங்கள் கைக்கு கண்ணன் கிடைக்கட்டும்!

—அழகனுர், (நிருபர்), மாச்சம்பாளையம்.

## என் நன்றி

**15-1-56** இதழின் அட்டைப்படம் மிகவும் பிரமாதம். கவிஞர் வரிசையின் முதல் கதை நன்ருக இருக்கிறது. 'சீமாவும்' 'மணியும்' நம்மை விட்டுப் பிரிந்தவுடன் 'மஞ்சள் பங்களா'வையும் ஸி. ஐ. டி. சிங்காரத்தையும் கொடுத்துவிட்டீர்கள். ஸி. ஐ. டி சிங்காரம் ஒரு சுவாரஸ்யமான கதை என்று ஆரம்பத்திலேயே தெரிந்துவிடுகிறது. 'சபாஷ் இந்தியா' நமது சபாஷைப் பெற்று விடுகிறது. 'மலர்' என்ற கதை பரவாயில்லை. 'முகி' இளம் எழுத்தாளருடைய கஷ்டங் களைத் தத்ரூபமாக எழுதியிருக்கிருர். 'பளிங்குமலைப் பூத'மும், 'தமிழ்க் கொடி'யும் ஏ - ஒன் சிறு கதைகள். 'எந்த நாள்', 'பொங்கலெனும் தைப்பெண்ணே' போன்ற கவிதைகள் நன்ருக இருக்கின்றன. வரப் போகும் சித்திரத் தொடரை வரவேற்கிறேன்.

—M. குப்புசாமி, தண்டரை.

# பலராமன் தம்பி

எஸ். கே. ராவ்

"யாரடா மரத்தின் மேலே?''

''நான்தான்'' என்று தென்னை மரத்தின் மேல் இருக்கும் பையன் பதில் சொல்கிறான்.

தோட்டக்காரன் மறுபடி அதட்டலுடன், ''நான்தான் என்றால்?'' என்று கேட்கிறான். பையனுக்குத் தான் செய்யும் காரியம் தப்பு என்ற உணர்ச்சி இருக்கிறது. தொண்டை தழுதழுக்கிறது. நாக் குளறுகிறது. இருந்த போதிலும் எப்படியாவது சமாளித்துக்கொண்டு தப்ப வழி பார்க்கிறான். சிறுவன்தானே! அதனால் எதிராளியை மிரட்ட ஏதோ சொல்லிப் பார்க்கிறான். தன் தகப்பன் பெரிய வஸ்தாத் என்பதைச் சொன்னால் தோட்டக்காரன் பயப்பட்டு, தன்னை ஒன்றும் செய்யாது விட்டு விடுவான் என்கிற எண்ணம். உடனே சற்றுத் தைரியம் பிறக்கிறது. தொண்டையைக் கனைத்துக் கொண்டு, ''நான்தான், வஸ்தரத் வீரமுத்து மகன்'' என்கிறான்.



தோட்டக்காரன் பையனின் குறும்புத்தனத்தையும் சாமர்த்தியமான பதிலையும் கேட்டு, ''அது இருக்கட்டும், இங்கே எதற்கு வந்தாய்?'' என்கிறான்.

''இது எங்கள் தோட்டம் என்று நினைத்து வந்து விட்டேன்'' என்று பையன் பதில் சொல்கிறான்.

''சரி, மரத்திலேறி என்ன செய்கிறாய்?''

பையன் சற்றுத் தயக்கத்துடன் ''மாட்டுக்குப் புல் அறுக்கிறேன்!'' என்கிறான்.

இந்தப் பதிலைக் கேட்ட தோட்டக்காரன் கோபத்தை மறந்தான். தனக்குள் சிரித்துக்கொண்டான். பையனின் பால் போன்ற தூய உள்ளத்தில் கபடமான பொய் வார்த்தைகளுக்கு இடமில்லை என்பதை உணர்ந்தான். பையன் விளையாட்டுக்குத் தேங்காயைப் பிடுங்கி, தன் சகாக்களுக்குக் கொடுத்துத் தானும் தின்பான் என்பதும் அவனுக்குத் தெரியும். ஆகையால் கோபத்துக்கு மாறாகச் சந்தோஷத்தை அடைந்தான். பையனைக் கீழே இறங்கச் சொல்லி, முதுகில் தட்டிக் கொடுத்து, அன்பு வார்த்தைகள் பேசி அனுப்புகிறான்.

இதே விதமான ஒரு காட்சியில் கண்ணன் நடிப்பதாக லீலாசுகர் என்ற கவி நமக்குக் காட்டுகிறார்.

கோகுலத்தில் ஆயர்பாடியில் ஒரு வீட்டினுள் கண்ணன் போகிறான். அங்கே வீட்டில் ஒருவரும் இல்லை. சரியான சமயம். உள்ளே புகுந்து வெண்ணெயை எடுத்துத் தன் சகாக்களுக்கும் கொடுத்துத் தானும் தின்னலாமென்ற எண்ணத்துடன் தயிர்ப் பானையில் கையை விடுகிறான். அந்தச் சமயம் வெளியே சென்றிருந்த அந்த வீட்டு எஜமானி திரும்பி வந்து பார்த்துவிடுகிறாள்.

தான் வீட்டில் இல்லாதபோது ஒரு சிறுவன் இவ்விதம் செய்கிறானே என்று அவளுக்குக் கோபம் வருகிறது. "நீ யார்?" என்று கேட்கிறாள். கிருஷ்ணனைத் தெரியாதவர்கள் ஆயர்பாடியில் யாராவது உண்டா? கிருஷ்ணனை நீ யார் என்று கேட்டது உண்மையில் கோப மேலீட்டால்தான். கண்ணன் பார்த்தான். அவளுக்குத் தகுந்த முறையில் பதில் சொல்ல வேண்டும் என்பதற்காகவே, "நான் பலராமன் தம்பி" என்று சற்று உரத்த குரலில் சொல்கிறான். 'பல' என்ற வார்த்தையைக் கொஞ்சம் அழுத்தமாகவே சொல்கிறான்.


"ஒகோ! இங்கே எங்கே வந்தாய்?"

"இது எங்கள் வீடென்று தவறுதலாக நினைத்து வந்து விட்டேன்."


"அப்படியா! அது சரி; அந்தத் தயிர்ப் பானைக்குள் ஏன் கையை விட்டாய்?"— இப்பொழுது அவளது மனசு முற்றிலும் மாறிவிடுகிறது. ஆயர் மங்கையின் மனத்தில் ஏற்பட்ட கோப உணர்ச்சி அன்புமயமாய் மாறிவிட்டது. மேலும் கிருஷ்ணனுடைய பதில் அவளை மெய்ம்மறக்கச் செய்துவிடுகிறது.

"காணாமல் போன கன்றுக்குட்டியைத் தேடுகிறேன்" என்கிறான் கண்ணன்.

தயிர்ப் பானையில், காணாமற் போன கன்றுக்குட்டியைத் தேடும் கண்ணன் யாருடைய உள்ளத்தைத் தான் கவரமாட்டான்! இந்தக் கள்வனின் செயல்களைப் பாடிப் பாடிப் பரவசமாய் மெய்ம்மறந்தார்கள் நம் பெரியோர்கள்.



முதல் பரிசுபெற்ற தொடர்கதை




## 6

அறையை விட்டு வெளியே வந்ததும் மனோகரைத் தொட்டு மெல்லிய குரலில், ''மனோ! எனக்கு என்னவோ எல்லாமே ஒரே மர்மமாக இருக்கிறது. சந்தானத்துக்கு அந்தக் கடித விஷயம் கட்டாயம் தெரிந்திருக்கும் என்றே நினைக்கிறேன். இல்லாவிட்டால் அவர் அப்படிப் படபடப்பானேன்? சாவிக் கொத்துச் சப்தம் கேட்டதும் உன் தாத்தா ஏன் அப்படி அலறிக்கொண்டு மூர்ச்சையாக வேண்டும்? எனக்கு யோசிக்க யோசிக்க மயக்கம்தான் வரும் போலிருக்கிறது. மூளை ஒரேயடியாகக் குழம்புகிறது'' என்றான் ராகவன்.

''எனக்கு மட்டும் என்ன! உன்னைப் போல்தான் இருக்கிறது. இருந்தாலும் இதையெல்லாம் நிதானமாகப் பேசிக்கொண்டால் போயிற்று. முதலில் டாக்டரை வரவழைத்து ஆக வேண்டியதைக் கவனிப்போம், வா'' என்றான் மனோகர்.

டாக்டர் வந்தார். கிழவருக்கு ஓர் இஞ்செக்ஷன் செய்தார். எல்லாம் முடிந்ததும் தம் தோல் பையுடன் வெளியே வந்த டாக்டரை அணுகி, ''தாத்தாவுக்கு எப்படி இருக்கிறது, ஸார்?'' என்று கேட்டான் மனோகரன். நிமிர்ந்து நோக்கிய டாக்டர் ஒரு புன்னகையுடன், ''மனோகர்! உன் தாத்தாவுக்கு இது மாதிரி அடிக்கடி வருவதுண்டு. மனக் கோளாறாக இருக்கலாம் என்று நான் நினைக்கிறேன். இந்தப் பலஹீனமான நிலையிலே அவருக்கு அதிகத் தொல்லை கொடுக்கக்கூடாது. என்னைத் தவறாக எடுத்துக்கொள்ளாதே. அவரை அதிகமாக நீ சந்திக்காமலிருப்பது நல்லது. எதற்கும் நளினா சொல்கிறபடி செய். அவள் எல்லாவற்றையும் கவனித்துக்கொள்வாள். சரி! நான் அப்புறம் வருகிறேன்'' என்று கூறிவிட்டுப் போனார். மனோகரின் உள்ளத்தை டாக்டரின் பேச்சு உறுத்தியது. ஆனால் வக்கீலின் செய்கையோ அதைவிட அதிகச் சந்தேகத்தை உண்டாக்கியது.

அன்று பகல் அவர்களை வக்கீலின் வீட்டுக்கு அழைத்துச் சென்றார் சந்தானம். வக்கீல் சிவசங்கரனும் சுமுகமாகவே அவர்களை வரவேற்றார். ''இவர்தான் மிஸ்டர் மனோகரன். சாம்பசிவ முதலியாரின் வாரிசு'' என்று அறிமுகப்படுத்தி வைத்துவிட்டு, சந்தானம் விடைபெற்றுக்கொண்டார். அவர் சென்ற பிறகு வக்கீல் பேச ஆரம்பித்தார். ''என் கடிதம் கிடைத்திருக்கும் என்று நினைக்கிறேன்'' என்றார்.

''ஓ! கிடைத்ததே!''

''அதிலே நான் வெளியூர் போக வேண்டும் என்று எழுதியிருந்தது உங்களுக்கு நினைவிருக்கும். அந்தக் கேஸ் நாளைக்கு ஹியரிங். நம்ம ஜூனியர் 'உடனே வரவேண்டும்' என்று தந்தி கொடுத்திருக்கிறுர். அதனுல்தான் அவசரமாகப் போக வேண்டியிருக்கிறது. நான் திரும்பி வர ஒரு வாரம் ஆகும். என்ன! நான் வந்து உங்கள் விஷயத்தைக் கவனித்தால் போதுமல்லவா? அதற்குள்ளே உங்கள் வீட்டிலிருந்து பெரியவர்கள் யாராவது வருவதாயிருந்தாலும் வந்துவிடட்டுமே. அதுதான் நல்லதென்று எனக்குப் படுகிறது. சரிதானே என் யோசனை?''—நிறுத்தி நிறுத்தி ஒவ்வொரு வார்த்தையும் எண்ணிப் பேசுவதுபோல் பேசினுர் அவர். மனேகர் பதில் சொல்ல வாயெடுக்கும்போது ஓர் ஆள் உள்ளே தலையை நீட்டினுன். ''எஜமான்! நீங்க பட்டணமா போகப் போறீங்க? நம்ம நாவல்பட்டி ஜமீன்தார் வூட்டு ஆளு....''

''ஏய்! உன்னை யார் எங்கே வரச் சொன்னது? பேசாமல் போய் உன் வேலையைக் கவனி.'' - வக்கீல் ஆத்திரத்துடன் அவனை விரட்டினுர்.

''அதில்லை எஜமான்! அவரு நாளைக்கு வருவாரே..''

''சட்! இப்போ நீ சும்மாப் போக மாட்டே?''— வக்கீல் ஆத்திரத்துடன் மேஜையில் ஓங்கி ஒரு குத்துக் குத்தினுர். ''அப்புறம் ஜமீன்தார் கோபம் பண்ணிக்கிடுவாரென்றுதான் நான்..'' வந்த ஆள் மேலும் தொடர்ந்தான். ''மரியாதை கெட்ட மடையா! போகிறுயா, இல்லையா?'' என்று துள்ளி எழுந்தார் வக்கீல். வந்த சுவடு தெரியாமல் அவன் திரும்பிவிட்டான்.

வக்கீல் மனேகரனைப் பார்த்தார். அவர் படபடப்பு இன்னும் அடங்கவில்லை. 'அசடு வழிவது' என்பார்களே, அதற்கு ஒரு சரியான உதாரணமாக இருந்தது அவர் முகம் அப்போது, ''இந்த மடையன்களுக்கெல்லாம் மூளையை வைக்க மறந்துவிட்டான்போலிருக்கிறது அந்தக் கடவுள். ஏதடா! யாரோடோ பேசிக்கொண்டிருக்கிறுரே, நாம் இப்போது போகலாமா, பேசலாமா என்பது ஒன்றும் தெரிவதேயில்லை'' என்று முணு முணுத்த அவர், தம்மைச் சமாளித்துக்கொண்டு,



"பாருங்கள், மிஸ்டர் மனோகரன்! உங்கள் விஷயம் மட்டுமில்லே, இந்த ஜமீன்தார் விஷயங்கூடத் தள்ளிப் போட நேர்ந்துவிட்டது அந்தக் கேஸால். அவர் கொஞ்சம் கோபக்காரர். என்ன செய்யலாம்? அதற்காக எடுத்த கேஸை விட்டு விட முடியுமா?'' என்றார் வக்கீல். மனோகர் மெதுவாகச் சிரித்தான். "நீங்கள் சொல்லுவது சரிதான், ஸார். உங்கள் சௌகரியம் போல நீங்கள் போய் வாருங்கள். நான் இங்கேதானே தங்கியிருக்கப் போகிறேன்!'' என்றான் அவன்.

"மற்றொரு விஷயமும் இருக்கிறது, மனோகர்! எஸ்டேட் விஷயத்தில் எச்சரிக்கையாக இருங்கள். வேலையாட்களைக் கவனமாகக் கண்காணிக்க வேண்டும். தெரிந்ததா?'' குரலைச் சற்றுத் தாழ்த்திக் கொண்டு, "சந்தானத்தை மட்டும் நம்பவே நம்பாதீர்கள். எந்தக் காரியத்தையும் செய்யத் துணிந்த கட்டை அது. நம்ம முதலியார்கூட அடிக்கடி சொல்லுவார், 'அது வெறும் ருத்திராட்சப் பூனை' என்று. நல்ல ஆட்களைக்கூடக் கெடுத்துத் தம் கைக்குள் போட்டுக்கொண்டு ஆளையே விழுங்கி ஏப்பம் விட்டுவிடுவார். ஆனால் நான் உங்களுக்கு இதையெல்லாம் தெரியப்படுத்தி யிருக்கிறேன் என்கிற விஷயம் அவருக்குத் தெரிந்துவிடாமல் ஜாக்கிரதையாக நடந்துகொள்ளுங்கள். சரி, நேரமாகிறது. நாம் அப்புறம் சந்திப்போமா?'' என்று வக்கீல் எழுந்தார். மனோகரனும் விடை பெற்றுக்கொண்டு வெளியேறினான்.

அவனுக்கு எல்லாமே புரியாத புதிராக இருந்தது. 'யாரை நம்புவது, யாரை நம்பாமலிருப்பது? காலையில் சந்தானம் நடந்து கொண்ட முறை சந்தேகத்தைக் கிளப்புவதாக இருந்தது. பிறகு நர்ஸ், டாக்டர் இவர்களின் செய்கை; இப்போது வக்கீல் வீட்டில் நடந்தது எல்லாம் சந்தேகத்தையே உண்டாக்குகின்றன. இதிலிருந்து ஒரு விஷயம் மட்டும் தெளிவாகத் தெரிகிறது. இவர்களில் யாரும் என் வருகையை விரும்பவில்லை என்பதுதான் அது. ஏதோ ஒரு சூழ்ச்சி செய்கிறார்கள். எதையோ மறைக்க முயலுகிறார்கள்!' -இப்படித்தான் அவன் நினைத்தான்

"மனோகரன்! எல்லா விஷயங்களையும் இன்ஸ்பெக்டர் ஹநுமந்த ராவிடம் சொல்லியே ஆக வேண்டும். இன்று மாலையே போவோமா?'' என்றான் ராகவன்.

"ஆமாம் ராகவா! இந்த மர்மம் நிறைந்த மனிதர்களிடையே அவர் புத்திமதி இல்லாமல் நாம் ஒன்றும் செய்ய முடியாது'' என்று ஒப்புக்கொண்டான் மனோகரன்.



ஆனால் இன்னும் எத்தனை மர்மங்கள் அவர்கள் கண்களில் படாமல் மறைந்துள்ளன என்று அப்போது அவர்கள் அறியவில்லை.

## 7

"மிஸ்டர் சுப்பிரமணிய முதலியார்!

உங்கள் முடிவு இது தானா? நிச்சயமாகச் சொல்லுங்கள். பின்னால் மாற்ற முடியாது. இது உங்கள் வாழ்க்கையை மட்டும் பொறுத்த விஷயமில்லை. உங்கள் பேரன் மனோகரனையுங்கூடப் பாதிக்கும் என்பது நினைவிருக்கட்டும். இந்தச் சிவசங்கரன் சொன்னால் அதை நடத்தியே தீருவான். தெரியுமா? என்னை ஏமாற்றி விடுவது அவ்வளவு சுலபமில்லை, நினைவிருக்கட்டும்'' என்று யாரோ தாத்தாவின் அறையிலிருந்து அதட்டும் குரலில் பேசுவதைக் கேட்ட மனோகர் திடுக்கிட்டான். சட்டென்று பக்கத்திலிருந்த அறையின் கதவருகில் மறைந்துகொண்டு, மேலும் தொடர்ந்து பேச்சைக் கவனித்தான்.

''என்னை என்ன செய்யச் சொல்லுகிறாயப்பா? இன்றைக்கோ நாளைக்கோ என்று காத்துக்கொண் டிருக்கிறேன். நான் எதைக் கண்டேன்? என்னை ஏன் வீணாகத் தொந்தரவு செய்கிறாய்?'' என்று பேசமுடியாமல் திணறிக்கொண்டு பேசும் கிழவரின் பலஹீனக் குரல் கேட்டது.

''முதலியார், என்னை என்ன விளையாட்டுப் பிள்ளை என்று நினைத்தீரா? எனக்கு உம் விஷயம் பூராவும் தெரியும். அந்தப் பூட்டை உம் மகன் சாம்பசிவம்தானே செய்தது? அதன் குறிச்சொல் உமக்குத் தெரியும். அதை நீர் மரியாதையாகச் சொல்லிவிட்டால், பிழைத்தீர். இல்லை என்றால் உம்மையும் உம் ஆசைப் பேரனையும் உயிரோடு பிடித்து அணு அணுவாகச் சிதைத்து, நொறுக்கி விடுவேன் நொறுக்கி. இந்தத் திரண்ட சொத்தில் ஒரு செல்லாக் காசுகூட உங்கள் குடும்பத்தில் யாரும் அடைய முடியாதபடி செய்துவிடுவேன். ஆமாம்!''— அந்தக் கனத்த கட்டைக் குரலைக் கேட்கும்போதே மனோகரின் உடம்பு நடுங்கிற்று.

''எனக்குத் தெரியும். நீர்தான் உம்மகனுக்கு என்மீது சந்தேகத்தை உண்டாக்கினீர். உம்முடைய யோசனையின்பேரில்தான் எல்லா தஸ்தாவேஜுகளுக்கும் நகல் தயாரித்துப் பத்திரப்படுத்தி வைத்திருக்கிறார். சொத்துக்களுக்கு ஜாபிதா தயாரித்ததும் உம் யோசனையால்தான். அவற்றை இந்த அறையிலேதான் வைத்திருக்கிறார். இன்னும் என்ன வேண்டும்? என்னை ஏமாற்ற உம்மால் முடியாது. தெரிந்ததா? நீர் உண்மையை வெளியிடும்வரை ஒரு காலணாக்கூட உம் பேரன் அடைய முடியாது. இது நிச்சயம். இன்னும் நான்கு நாள் அவகாசம் தருகிறேன். அதற்குள் நீர் உண்மையைக் கூறிவிட்டால் பிறகு என் வழியில் நான் அதை அடைந்துவிடுவேன். இதுதான் கடைசி எச்சரிக்கை!'' - சட்டென்று பேச்சு நின்றது. தொடர்ந்து யாரோ நடந்து போகும் சப்தமும் கேட்டது. மனோகர் மெள்ளக் கதவிடுக்கின் வழியே வராந்தாவைக் கவனித்தான். கறுப்பு அங்கியும் வெள்ளைத் தலைப்பாகையும் அணிந்த வக்கில் சிவசங்கரன்தான் அந்த அறையைக் கடந்து சென்றார்.

''ஓகோ! விஷயம் அவ்வளவுக்கு ஆகிவிட்டதா? இருக்கட்டும். இன்ஸ்பெக்டர் சொன்னதும் சரியாகி விட்டது. பார்க்கலாம். எதற்கும் முதலில் ராகவனிடம் முதலில் இதைச் சொல்லவேண்டும்'' என்று நினைத்த மனோகர் அவனைத் தேடிப் போனான்.

மாடிப் படியில் தட தடவென்று ஏறி வந்தவனுக்கு வழிவிட ஒதுங்கினான் மனோகர். வந்த ஆள் சடக்



சென்று அவனருகே வந்து நின்றான். ''அடே மனே! நீயா! உன்னைத்தான் தேடிக்கொண்டு வந்தேன். உன்னிடம் முக்கியமான விஷயம் ஒன்று சொல்ல வேண்டும். உள்ளே வா!'' என்று அவன் கையைப் பற்றி இழுத்துக்கொண்டு தன் அறைக்குச் சென்றான் ராகவன். ''இதோ பார், மனேஜர்! இந்த முருகன் இருக்கிறானே, இவன் என்ன செய்தான் தெரியுமா?''

''சொன்னால்தானே தெரியும்?''

''அந்தச் சமையல் அறைக்குப் பக்கத்தில் ஓர் அறை இருக்கிறதே, அந்த அறையில் நான்கு அலமாரிகள் இருக்கின்றன. தெரியுமா?''

''ஆமாம்.''

''அந்த அலமாரிகள் நிறைய சிவப்பு நிறப் புட்டிகள் அடுக்கி இருக்கின்றன. அவற்றின் மேல் புறம் மூடி ஸீல் வைக்கப்பட்டிருக்கிறது. சுற்றி வெள்ளைக் காகிதம் ஒட்டப்பட் டிருக்கிறது. அந்தப் புட்டிகளில் இரண்டை இந்த முருகன் எடுத்துக் கொண்டு போய், பின்னால் தோட்டத்தில் ஒரு பாறைமேல் போட்டு உடைத்தான். உடைத்துவிட்டு அந்தக் கண்ணாடித் துண்டுகளின் நடுவிலே எதையோ தேடினான்; அப்புறம் அந்தத் துண்டுகளையெல்லாம் எடுத்து ஒரு குப்பலில் கொண்டு போட்டுவிட்டான். இந்தக் காரியத்திலும் ஏதோ ரகசியம் இருக்கவேண்டும் என்றுதான் எனக்குத் தோன்றுகிறது. இதை நீ அவசியம் கவனிக்க வேண்டும். ஜாக்கிரதை'' என்றான் ராகவன்.

''ராகவா! விஷயம் அவ்வளவு சிறியதல்ல. வக்கீல் சிவசங்கரனுக்கும் இதிலே பங்கு இருக்கும் என்று தோன்றுகிறது. அவர் என்ன செய்தார், தெரியுமா?'' என்று தான் கேட்டவற்றை எல்லாம் அவனிடம் கூறினான்.

''மனேஜர்! இதென்ன ஒரே குழப்பமாக இருக்கிறதே! எல்லோருமாகச் சேர்ந்துதான் ஏதோ சூழ்ச்சி செய்கிறார்கள். இதை எப்படியும் கண்டுபிடித்துவிட வேண்டும். முதலிலே அந்த இடத்தை நீ வந்து பார்த்துவிடு. வா!'' என்று ராகவன் மனேஜரையும் அழைத்துக்கொண்டு நடந்தான்.

'தடா'லென்று ஒரு சத்தம்! பலமாக ஏதோ கீழே விழுந்து நொறுங்கும் சத்தம் அடுத்தடுத்து இருமுறை கேட்டது. திடுக்கிட்டு நின்றான் மனேஜர். ''அதோ! அதே அறைதான், வா, வா!'' என்று வேகமாக மனேஜரையும் இழுத்துக்கொண்டு நடந்தான் ராகவன். அறைக் கதவு மூடியிருந்தது. சாவித் துவாரத்தின் வழியாக உள்ளே பார்த்தான் மனேஜர். உள்ளே ஓர் ஆள் கீழே கிடந்த உடைந்த கண்ணாடித் துண்டுகளைப் பொறுக்கிச் சேர்த்துக்கொண்டிருந்தான். திடீரென்று கதவைத் தள்ளித் திறந்துகொண்டு உள்ளே நுழைந்தான் மனேஜர்.

அதே சமயத்தில் பின்னால் யாரோ வரும் காலடி ஓசை கேட்டது. தொடர்ந்து, ''இது என்ன வேலை, முருகா? உனக்குக் கொஞ்சமாவது புத்தியிருக்கா? இரவு விருந்துக்கு ஷர்பத் செய்ய வேண்டுமென்று சொன்னால் அதை ஒழுங்காகச் செய்யக்கூட யோக்கியதை இல்லை? முட்டாள். முட்டாள்! ஒன்றைத்தான் உடைத்தாயே, மற்றதையாவது ஜாக்கிரதையாக எடுக்கவேண்டாம்? புது எஜமான் வந்திருக்கிறார் என்ற எண்ணம் துளியாவது இருந்தால் இது மாதிரி செய்வாயா? ஹூம்; தொலைந்து போ! இங்கே நிற்காதே! வேறு இரண்டு புட்டியை எடுத்துக் கொண்டு நட!'' என்று வேறு யாருக்குமே பேச இடம் கொடுக்காமல் படபடவென்று பொரிந்து தள்ளினார் சந்தானம். பதிலொன்றும் பேசாமல் வேறு இரண்டு புட்டிகளுடன் வெளியேறினான் முருகன்.

''ஷர்பத் எதுவும் வேண்டாம் ஸார்! அதை வைத்து விடட்டும்'' என்றான் மனேஜர்.

''சேச்சே! அதெல்லாம் கூடாது ஸார். நன்றாக இருக்கிறது. நீங்கள் சும்மா இருங்கள்'' என்று மனேஜரின் தோள்மீது கை போட்டு, அவனைத் தள்ளிக்கொண்டே நடந்தார் சந்தானம்.

(தொடரும்)

# சுபாஷ் போஸ்



**வி. ஆர். ராதாகிருஷ்ணன்**

கல்கத்தா நகரிலிருந்து 1941–ஆம் ஆண்டு ஜனவரி மாதத்தில் ஒரு நாள் ஒரு செய்தி வெளிவந்தது: ''ஒரு வார காலமாகத் தம் அறையிலேயே ஆழ்ந்த தியானத்தில் ஈடுபட்டிருந்தவரைத் திடீரென்று மறுநாள் காலையில் காணவில்லை.'' இந்தச் செய்தி இந்தியாவில் எல்லாப் பத்திரிகைகளிலும் வெளியாகி, நாடெங்கும் ஒரு பரபரப்பை உண்டாக்கியது.

''வீட்டைச் சுற்றிக் கடும் போலீஸ் பந்தோபஸ்து இருந்தபோதிலும் அவர் எப்படியோ மாயமாக மறைந்துவிட்டார். ஒரு வார காலமாகவே அவர் ஒருவருடனும் பேசவில்லை. உணவும் அருந்தவில்லை. பகவத் கீதையைப் படிப்பார். பிறகு கண்களை மூடிக்கொண்டு தியானத்தில் ஆழ்ந்திருப்பார். இன்று காலையில் வேலைக்காரன் கதவைத் திறந்தபோது அவரைக் காணோம். அவரைத் தேடி நண்பர்களும் உறவினர்களும் பல இடங்களுக்குப் புறப்பட்டிருக்கின்றனர்'' என்று மேலும் சில விவரங்களும் பிரசுரமாயிருந்தன. 'ஒருவேளை அவர் புதுச்சேரி அரவிந்தர் ஆசிரமத்துக்குப் போயிருக்கலாம். திருவண்ணாமலை ரமணாச்ரமத்திற்குச் சென்றிருக்கலாம். இமயமலைக்கு அமைதியை நாடிப் போயிருக்கலாம். சிறுவயதிலிருந்தே துறவியாகச் செல்லவேண்டுமென்ற ஆசை அவருக்கு உண்டு. ஒரு சமயம் வீட்டைவிட்டுச் சென்று சில மாதங்கள் இமயமலைச் சாரலில் சந்நியாசியாகக்கூடச் சுற்றினார்' - இப்படியெல்லாம் பலரும் பலவிதமாகப் பேசிக் கொண்டார்கள்.

கல்கத்தாவில் மறைந்த அதே நபரின் குரல் அதே ஆண்டு மார்ச் மாதத்தில் பெர்லின் 'ஆஜாத் ஹிந்த்' ரேடியோவில் கேட்டது. இந்தியாவில் சிலர் இரவில் ரேடியோவை முடுக்கிவிட்டு ரகசியமாகக் கேட்டார்கள். பிறகு அவர் ஜூன் மாதம் ஜப்பானுக்கு வந்து சேர்ந்துவிட்டதாகச் செய்தி வந்தது. ஜூலை மாதத்தில் சிங்கப்பூருக்கு வந்து விட்டதாகப் பேசிக்கொண்டார்கள்.

அது சாதாரண காலமா? உலகமே அதுவரை கண்டிராத அளவில் மாபெரும் யுத்தம் நடந்துகொண்டிருந்த காலம். ஹிட்லரின் ராணுவம் ஐரோப்பாவின் பெரும் பகுதியை ஆக்கிரமித்து ஆட்சி நடத்திய காலம். பிரிட்டன்மீது நாஜி (ஜெர்மன்) விமானங்கள் குண்டு மழை பொழிந்த காலம்.

இந்தச் சந்தர்ப்பத்தில்தான் பிரிட்டிஷ் ராணுவத்தினர் அட்டகாசம் புரிந்துகொண்டிருந்த கல்கத்தாவில் எல்ஜின் தெருவிலுள்ள பங்களா ஒன்றில் காவலில் வைக்கப்பட்டிருந்த இந்த அபூர்வ மனிதர் தப்பி மறைந்துவிட்டார்.

சிறையிலிருந்த இவர், தம்மை உடனே விடுதலை செய்யாவிட்டால் உண்ணாவிரதம் இருந்து உயிர் நீத்துவிடுவதாகக் கூறினார். சர்க்கார் அச்சமுற்று அவரை விடுதலை செய்தது. ஆனால் அவருடைய வீட்டைச் சுற்றிப் பலத்த போலீஸ் பந்தோபஸ்து செய்தார்கள். அவருடைய வீட்டுக்குள் போகிறவர்களையும் வருகிறவர்களையும் ஜாக்கிரதையாகக் கவனித்து வந்தார்கள்.

இவ்வளவு தடபுடலான கட்டுக்காவல்களையெல்லாம் கடந்து, நாட்டை விட்டே வெளியே தப்பிச் சென்றுவிட்டார் இந்த அபூர்வ மனிதர். நாட்டைவிட்டு வெளியே

செல்வது சாதாரண நாட்களிலேயே ரொம்பக் கஷ்டம். அரசாங்கத்தாரிடம் 'பாஸ்போர்ட்' வாங்கவேண்டும். போகவேண்டிய நாட்டுச் சர்க்காரிடமும் அநுமதி பெறவேண்டும். அதற்கு 'விஸா' என்று பெயர். 'பாஸ்போர்ட்' இல்லாமல் வெளியே செல்ல முடியாது. 'விஸா' இல்லாமல் வெளிநாட்டில் நுழைய முடியாது.

யுத்த காலத்தில் நமது நாட்டின் எல்லைகளில் அமெரிக்க, பிரிட்டிஷ் ராணுவங்கள் முகாம் போட்டிருந்தன. சிறிய சாமான் கூட நாட்டைவிட்டு வெளியே போகமுடியாது. அவர்களின் அநுமதியில்லாமல் உள்ளே வரவும் முடியாது.

அவ்வளவு கெடுபிடி இருந்த நேரத்தில்தான் இந்த அபூர்வ புருஷர் நாட்டைவிட்டு வெளியே சென்றுவிட்டார். உலக மகா அதிசயங்களிலே தலைசிறந்த சம்பவம் என்று இதைச் சொல்லலாம்.

அவர் எப்படி வெளியேறினார் என்பதைப் பற்றி யாருக்கும் சரியாகத் தெரியாது. ஆனால் அவரிடம் தகவல் தெரிந்துகொண்டு தான் நாமும் ஏதோ கொஞ்சம் தெரிந்துகொள்ள முடிகிறது.

எல்லைப்புறப் பட்டாணியரைப் போல் வேஷம் பூண்டு இவர் பெஷாவருக்கு முதலில் போனாராம். அங்கிருந்து நண்பர் ஒருவரின் உதவியைக் கொண்டு, காபூலுக்குச் சென்றாராம். அங்கே ரஷ்ய தூதராலயத்துடன் நட்புக் கொண்டு அவர்களின் உதவியால் மாஸ்கோவுக்குச் சென்றாராம். ரஷ்யாவுக்கும் ஜெர்மனிக்கும் அப்போது யுத்தம் மூளவில்லை. ஆகவே மாஸ்கோவிலிருந்து சுலபமாகப் பெர்லினுக்குப் பறந்து போக முடிந்தது. ஹிட்லருடன் இந்த அற்புத புருஷர் சில மாதங்கள் தங்கியிருந்தார். அவரிடமிருந்து யுத்த ரகசியங்களைத் தெரிந்து கொண்டார். நீர்மூழ்கிக் கப்பல் (Submarine) ஒன்றில் ஏறி 90 நாட்கள் பிரயாணம் செய்து ஜப்பானை அடைந்தார். ஜப்பானிய சர்க்கார் மந்திரிகளுடன் தொடர்பு கொண்டு சிங்கப்பூருக்கு வந்து சேர்ந்தார். சிங்கப்பூர், மலேயா, முதலிய தேசங்களை ஜப்பானியர் கைப்பற்றி யிருந்தார்கள். ஜப்பானியர்கள், தாங்கள் ஆளப் பிறந்தவர்கள் என்று அகம்பாவம் கொண்டு இருந்தார்கள். இவர் அவர்களையெல்லாம் கண்டித்தார். எல்லோரையும் சமமாக நடத்த வேண்டுமென்று ஜப்பானிய அதிகாரிகளை வற்புறுத்தினர். அவருடைய சொல்லைத் தட்டி நடக்க ஜப்பானியர்களுக்குக்கூடத் தைரியம் கிடையாது.

கிழக்கு ஆசிய தேசங்களில் பலவேறு தொழில்கள் புரிய, பாரத நாட்டிலிருந்து வந்திருந்த இந்தியர்களை ஒன்று திரட்டினர். வியாபாரம் புரிய வந்திருந்த பணக்கார இந்தியர்களிடமிருந்து நிதி வாங்கினர். பர்மியத் தலைவர்களுடன் பேசி பர்மாவிலேயே சுதந்தர இந்திய சர்க்காரையும், இந்திய ராணுவத்தையும் அமைக்க அநுமதி பெற்றார். முதலில் இவருடைய சுதந்தரப் போக்கை எதிர்த்த ஜப்பானிய ராணுவத் தளபதிகள் இறுதியில் பணிந்தனர். சுதந்தர இந்திய சர்க்காரின் முதல் பிரதம மந்திரியாகவும், ராணுவ தளபதியாகவும் விளங்கிய இந்த அற்புத புருஷர் பிரிட்டிஷ் சர்க்கார்மீது யுத்தப் பிரகடனம் செய்தார்.

இந்தியப் பெண்களைக் கொண்ட 'ஜான்ஸி ராணி பட்டாளம்' ஒன்றை உருவாக்கினர். சிறுபிள்ளைகளைச் சேர்த்து 'பாலர்சேனை' ஒன்றைத் தயார் செய்தார். நாற்பது சிறு பிள்ளைகளைத் தேர்ந்தெடுத்து பயிற்சிபெற ஜப்பானுக்கு அனுப்பினர்.

சுதந்தர இந்திய ராணுவத்தின் குறிக்கோள் பிரிட்டிஷாரை இந்தியாவை விட்டு விரட்டி, டில்லி செங்கோட்டை மீது தேசீயக் கொடியைப் பறக்க விடுவதுதான். ஆகவே 'டில்லி சலோ' என்பது தான் அவர்களின் கோஷமாக இருந்தது. இந்தியாவின் வடகிழக்கு எல்லையான இம்பால் போர் முனையில், பிரிட்டிஷ் ராணுவத்

தைச் சுதந்தர இந்திய ராணுவம் இந்த மகாபுருஷர் தலைமையிலே தாக்கியது. ஆயிரக் கணக்கான இளைஞர்கள் தங்கள் ஆவியை அர்ப்பணித்தார்கள், சுதந்தர மண்ணிலே சுதந்தரக் கொடியைக் கம்பீரமாகப் பறக்க ஏற்றி வைத்தார்.

மழையும் புயலும் சேர்ந்து வந்தன. சுதந்தரப் படையினருக்குச் சோறு இல்லை. துப்பாக்கி சுட மருந்து இல்லை. வருமானம் இல்லை. முன்னேறிச் செல்ல டாங்கிகள் இல்லை. பீரங்கிகள் இல்லை. புல்லையும் இலைகளையும் தின்று போரிட்டார்கள். பிரிட்டிஷ் ராணுவம் விமானங்களிலிருந்து நூற்றுக் கணக்கிலே குண்டுகளைச் சொரிந்தது. எப்படித் தொடர்ந்து போராட முடியும்?

முயற்சி தோல்வியுற்றதைக் கண்டு அந்த அபூர்வ மனிதர் கொஞ்சமும் கலங்கவில்லை. அவருடைய முகத்தைப் பார்த்தவுடன் இந்திய வீரர்கள் பசியை மறந்தனர். சோர்வு துறந்தனர். பேச்சைக் கேட்டவுடன் துள்ளி எழுந்தனர். ''ஜய் ஹிந்த்'' என்று கோஷமிட்டனர்.

யுத்தத்தில் அமெரிக்கர்கள் அணுக் குண்டை வீசி ஜப்பானைச் சரணகதி அடையச் செய்தார்கள். அதற்கு முன்பே ஜெர்மனியும் தோல்வி அடைந்துவிட்டது.

ஜெர்மனியும் ஜப்பானும் உதவி அளிக்கும் என்று நம்பிய இந்த அற்புத புருஷருக்கும் சுதந்தரப் போரை நிறுத்தும்படி நிர்ப்பந்தம் ஏற்பட்டுவிட்டது.

பர்மாவின் தலைநகரான ரங்கூனிலிருந்து பாங்காக்கிற்கு ராணுவ வீரர்களுடன் சாதாரணச் சிப்பாய் போலவே நடந்துசென்றார். மேலே எதிரிகளின் விமானங்கள் துரத்தி வந்து குண்டுகளை வீசின. கரடு முரடான பாதை. ஆறுகளும் வாய்க்கால்களும் வழிநெடுக இருந்தன. சாப்பிட உணவு கிடையாது. இவ்வளவு கஷ்டங்களையும் சமாளித்து, நடந்தும் ஜீப்பிலும் சென்றார். இந்தியச் சுதந்தரப் போரைத் தொடர்ந்து எங்கிருந்து எப்படி நடத்துவது என்பதுதான் அவருடைய கவனமாக இருந்தது. பாரத நாட்டிலிருந்து அந்நியர் ஆட்சியை விரட்டியடிக்க வேண்டும் என்றுதான் அவருடைய ஒவ்வொரு மூச்சும் சொல்லியது.

பிறகு ஜப்பானுக்குப் பறந்து சென்றபோது, அவர் சென்ற ஆகாயவிமானம் நொருங்கியதாகவும் அந்த மகா புருஷர் இறந்துவிட்டதாகவும் சொல்லுகிறார்கள். எங்கேயோ அவர் உயிருடன் இருப்பதாகவும் சிலர் நம்புகிறார்கள். சமீபத்தில் இந்திய சர்க்கார்கூட இந்த விஷயங்களைப் பற்றி விசாரிக்கக் கமிஷன் ஒன்று போட்டிருப்பதாகப் பார்லிமெண்டில் இந்தியப் பிரதமர் நேருஜி அறிவித்தார். இவரைப் பற்றிய தகவல் இன்னமும் மர்மமாகத்தான் இருக்கிறது.

நேதாஜி என்றால் ஹிந்தியில் 'தலைவர்' என்றுதான் அர்த்தம். ஆனால் நேதாஜி என்று சொல்லும் போது நமக்கு இந்த மகாபுருஷர் சுபாஷ்சந்திர போஸ் நினைவுதான் வருகிறது.

அவருடைய வீரத்திற்கு ஈடேது! தியாகத்திற்கு இணை ஏது! 'ஜய் ஹிந்த்' என்ற மகாமந்திரத்தைச் சொல்லி, மக்களைத் தட்டியெழுப்பி, புதிய சகாப்தத்தையே உண்டாக்கினார். 'தேசத்தின் தந்தையே, என்னுடைய முயற்சியை ஆசீர்வதியுங்கள்' என்று ரேடியோ மூலம் காந்திஜியின் ஆசி பெற்றே சுதந்தர முழக்கம் செய்தார்.

அந்த மகாபுருஷரின் அறுபதாவது பிறந்த தினம் இந்த ஜனவரி 23-ம் தேதி வந்தது. 1897-இல் ஜனவரி மாதம் 23 - ஆம் தேதி பிரபல வழக்கறிஞர் ஜானகிநாத் போஸிற்கும், பிரபாவதி அம்மையாருக்கும் பிறந்த குழந்தைதான் நேதாஜி. சிறு வயதிலேயே ராமகிருஷ்ண பரமஹம்ஸரும் விவேகானந்தரும் சுபாஷ்பாபுவை வசீகரித்தனர். தெய்வபக்தி அவருடைய உள்ளத்தில் இடம் பெற்றது. பள்ளிக்கூடத்தில் படிக்கும்போது ஆங்கிலேயர் ஒருவர் இந்தியர்களைக்

கேவலமாகப் பேசியதைக் கேட்டு, கோபம் கொண்டு அவரைத் தாக்கி பள்ளியை விட்டே வெளியேறி விட்டார். சிறுவயதிலேயே வெள்ளையர்களின் அகம்பாவத்தை ஒடுக்க வேண்டுமென்ற எண்ணம் உள்ளத்தில் வேரூன்றிவிட்டது. இங்கிலாந்தில் ஐ. ஸி. எஸ். படித்த போது சுதந்தரத்தின் பெருமையைத் தெரிந்துகொண்டார். காந்திஜியும், ஸி. ஆர். தாஸும் அவரைத் தேசசேவைக்கு இழுத்தனர். அஹிம்சை வழி அவருக்குப் பிடிக்கவில்லை. வாளுக்கு வாள்தான் சரியான பதில் என்று நினைத்தார். நாட்டைவிட்டு வெளியேறினர். பலப் பல கஷ்டங்கள் பட்டார். சுவிட்சர்லாந்தில் ஒரு பெண்ணை மணந்து சொண்டார். ஒரு பெண் குழந்தை பிறந்தது. அநீதா போஸ் என்ற அந்தப் பெண்ணுக்கு இப்போது பதின்மூன்று வயதாகிறது.

நாம் இன்று சுதந்தர இந்தியாவிலே வாழ்கிறோம். அதற்குப் பாடுபட்ட மகா புருஷர்களிலே தலைசிறந்தவர் நேதாஜி சுபாஷ். மாணவர்கள், குழந்தைகள் எல்லோரும் மாசற்ற இந்தத் தேசபக்தரை மனத்தால் துதித்து, அவருடைய வீரத்தையும் தியாகத்தையும் போற்றி வணங்குவோமாக!

# கண்ணு, வா!

## நெற்குப்பை ராமசுப்பிரமணியன்



இளமைக் கதிரே, வா! வா!
இன்பக் கனியே, வா! வா!

வளமைக் குன்றே, வா! வா!
வண்ண மலரே, வா! வா!

முழுமை நிலவே, வா! வா!
முத்தே, மணியே, வா! வா!

கொழுமைச் சுவையே, வா! வா!
குழந்தைக் கண்ணு, வா! வா!


உள்ளத் தெளிவே வா! வா!
உண்மை உருவே, வா! வா!

தெள்ளும் அமுதே, வா! வா!
தேனே, பாலே, வா! வா!

பிள்ளைக் கனியே, வா! வா!
பேசும் பொருளே, வா! வா!

அள்ளி யணைக்க ஓடி
அருகில் வா வா! வா வா!

EDITED, PRINTED AND PUBLISHED BY N. RAMARATNAM
AT THE MADRAS LAW JOURNAL PRESS, MADRAS-4.
ASSOCIATE EDITOR: R. VENKATARAMAN.



சென்னையில் நடந்த குழந்தைப் புத்தகக் கண்காட்சியைத் திறந்துவைத்து ராஜாஜி பேசுகிறார். கூட்டத்துக்குத் தலைமை வகித்த ம. பொ. சி. அவர்களும் படத்தில் காணப்படுகிறார்.

---

## கண்ணன் கிளைக் கழகம்

காரைக்குடி

உபதலைவர்: ஆர். சந்திரசேகரன்
காரியதரிசிகள்: டி. லட்சுமணன், என். ராகவன்
பொக்கிஷதார்: ஜி. கண்ணன்.
உதவி பொக்கிஷதார்: எஸ். சந்திரசேகரன்.

ஒன்பது பேர்கொண்ட செயற்குழு ஒன்று அமைக்கப்பட்டுள்ளது. 'வான்மதி', 'பால கண்ணன்' என்ற இரு கையெழுத்துப் பத்திரிகைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. கதை, கட்டுரைகளை T. லட்சுமணன், 19. பெருமாள்கோயில் வடக்கு வீதி, நாகநாதபுரம், காரைக்குடி என்ற விலாசத்துக்கு அனுப்பலாம்.

## பேனா நண்பர்கள்

1. T. லட்சுமணன், 19. பெருமாள்கோயில் வடக்கு வீதி, நாகநாதபுரம், காரைக்குடி.
2. C. ராமசந்திரன், கானூர், திரிபுவனம் போஸ்டு, ராமநாதபுரம் ஜில்லா.
3. B. செல்வரங்கம், 15. பாஷ்யம் செட்டி முதல் தெரு, சென்னை-12.
4. V. R. விட்டல்ராவ், 9. தேனாம்பேட்டை ராமசாமிமுதலித் தெரு, கொண்டித்தோப்பு. சென்னை.
5. சு. வ. உலகநாதன், ஐந்தாம் படிவம், ஆறும் பிரிவு, தூயமரியன்னை உயர்நிலைப்பள்ளி, மதுரை.
6. அ. முகம்மது இனியனு, 14. குருநாகல் ரோடு, சிலாபம், இலங்கை.

(Regd. as a News paper in Ceylon.) 14/2 **Reg. No. M. 5542**



# பொங்கல் பரிசுப் பாக்கெட்டுகள்

**பொ**ங்கல் திருநாளை முன்னிட்டு. உங்கள் அருமைக் குழந்தைகளுக்கு அன்புப் பரிசு தர வேண்டாமா? குழந்தைகளுக்கு ஏற்ற சிறந்த பரிசு, புத்தகங்கள் தாமே! உங்கள் குழந்தைகளுக்கோ, உங்கள் உறவினர், நண்பர்களின் குழந்தைகளுக்கோ கொடுக்கக் கூடிய சிறந்த புத்தகங்கள் கண்ணன் வெளியீடுகள். அழகிய பரிசுப் பாக்கெட்டுகளாகக் குறைந்த விலையில் இப்போது கிடைக்கின்றன. 'குழந்தையும் தெய்வமும் கொண்டாடும் இடத்திலே' என்பார்கள் அல்லவா? ஐந்து முதல் பதினைந்து வரையுள்ள குழந்தைகள் அனைவரும் விரும்பிப் படிக்கும் புத்தகங்கள்.

## கண்ணன் வெளியீடுகள்

| | | |
|---|---|---|
| சந்திரகிரிக் கோட்டை - 'ஜனு' | 1 | 4 |
| அசட்டுப் பிச்சு - 'ஆர்வி' | 1 | 0 |
| சின்ன ராஜா - 'வாசகன்' | 0 | 12 |
| ஜக்கு - 'ஆர்வி' | 0 | 8 |
| தவளையும் காளையும் - 'சோமசன்மா' | 0 | 8 |
| விளையும் பயிர் - கி. வா. ஜகந்நாதன் | 0 | 8 |
| விஞ்ஞானம் பேசுகிறுர் - பெ. நா. அ., ஜே. பி. மா. | 0 | 8 |
| சமர்த்து மைனு - தி. ஜ. ர. | 0 | 8 |
| ஏரிக்கரை மாளிகை - 'ஜனு' | 0 | 8 |
| மின்னல் அரக்கன் - 'ஜனு' | 0 | 8 |
| ஜம்பு - 'ஆர்வி' | 0 | 8 |
| குளிகைத் தீவு - ஆர்வி; சித்திரம் - சங்கர் | 0 | 4 |
| மாஸ்டர் பாலகுமார் - ஆர்வி; சித்திரம் - சாமி | 0 | 4 |
| நீச்சல் பழக்கம் - 'டிமான்ஸ்டிரேட்டர்' | 0 | 3 |
| கோழி விதைத்த நெல் - 'சூடாமணி | 0 | 3 |
| தங்கத்தின் பந்து - 'சூடாமணி' | 0 | 3 |

**மொத்தம் ரூ. 8 - 1 - 0**

பரிசுப் பாக்கெட்டுகளாக வாங்கினுல் ரூ. 6/- தான்

தபால் செலவு ரூ. 1/- தனி

பரிசுப் பாக்கெட்டுகள் '56, பிப்ரவரி 29உ வரைதான் கிடைக்கு

**கலைமகள் காரியாலயம், மயிலாப்பூர், சென்னை-4.**